கங்கள்: 16+IV+சிறப்பிதழ் - 12= 32

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 17 வியாழக்கிழமை (01-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:36

புதுவருடத்தில் அரசியல் நெருக்கடி தீவிரமடைகிறது

அமெரிக்க அரசின் அழுத்தத்தை உதறித்தள்ளினார் ஜனாதிபதி!

பிரதமர் ரணில் ஒத்துவராவிட்டால் மாற்று நடவடிக்கை என எச்சரிக்கை

கொழும்பு,ஜனவரி 1

சமாதானப் பேச்சுக்கள் தாமதமடைய ஜனாதிபதியே காரணம் என்றும், பிரதமரான அரசியல் நெருக்கடி தொடரக் கூடாது என்றும் அமெரிக்கா கொடுத்த அழுத்தத்தை உதறித் தள்ளினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதேவேளை, தேசிய நல்லிணக்க அரசை ஏற்படுத்த அரசும் பிரதமரும் இணக்கம் தெரிவிக்காவிட்டால் மாற்று நடவடிக்கை எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மூன்று முக்கிய அமைச்சுக்களை பாதுகாப்பேற்றதைப்படுத்து அனைத்துக் கட்சிகளையும் கொண்ட நல்லிணக்க அரசு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி, ஐக்கிய தேசிய முன்னணி அரசும், பிரதமர் விக்கிரமசிங்கவும் அம்முயற்சிக்கு இணக்கம் தெரிவிக்காவிட்டால் வேறு வழியிலான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நேரடியாகத் தெரிவித்திருக்கிறார். மாற்று நடவடிக்கை என்று குறிப்பிட்டிருக்கும் ஜனாதிபதி, அந்த நடவடிக்கை என்ன என்பதை வெளியிடவில்லை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'சுபாரதி' நிகழ்ச்சிக்கு நேற்றுக்காலை வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி மாற்று நடவடிக்கை குறித்து குறிப்பிட்டிருக்கிறார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

உதயனின் நான்கு வர்ண
வருட நாள் காட்டி
2004
நாளைய பத்திரிகையுடன் இலவச இணைப்பாக வாசகர்களுக்குக் கிடைக்கும்.

இனிய -
புத்தாண்டு வாழ்த்துக்கள்
வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அபிமானிகள், நண்பர்கள் அனைவருக்கும் உதயனின் மனம் நிறைந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்

காணாமற்போன தமிழ் இளைஞர்கள் நெருங்கிய நிலையில் சடலமாக மீட்பு!

கொழும்பு,ஜன.1

கனிபாவில் மனைவி ஏற்றுச் சென்ற காணாமற்போயிருந்த இரண்டு இளைஞரும் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். 29 ஆம் திகதி பம்பைமடு மனைவி ஏற்றுச்சென்ற கணவன் ஜஸ்மின் பெனாண்டோ (வயது 24), தெய்வேந்திரன் துஷ்யந்தன் (வயது 18) ஆகியோரே குட்டுக் காயங்களுடனும் எரிகாயங்களுடனும் சடலமாக மீட்கப்பட்டுள்ளவர்கள்.

வவுனியா நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த இவர்கள், கடந்த 25

(15ஆம் பக்கம் பார்க்க)

பலாலி பாதுகாப்பு வேலியில் இருந்து 600 மீற்றர் தூரத்தில் குடியமரலாம்!

படைத் தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.1

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து 600 மீற்றர் தொலைவில் உள்ள வீடுகளில் மக்கள் மீளக் குடியமரவும் அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பலாலியிலுள்ள யாழ்பாதுகாப்புப் படைத் தலைமையகம் இவ்வாறு அறிவித்திருக்கின்றது.

இதுதொடர்பாக இராணுவம் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்த போதிலும், அதுபற்றி பொதுமக்களுக்கு முறைப்படி அறிவிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை அடுத்தே இந்தப் புதிய அறிவிப்பு விடுக்கப்படுவதாக படைத் தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து (பாதுகாப்பு வேலி) 600 மீற்றர் தூரத்திலுள்ள வீடுகளில் மீளக் குடியமரவும், அப்பகுதியில் விவசாயத்தை மேற்கொள்ளவும் பாதுகாப்புத் தலைமையகம் இணக்கம் தெரிவித்துள்ளபோதிலும், அதுதொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை என 2003-12-23 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின்போது யாழ்.அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியிடம் தெரிவித்துள்ளன. வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும் நோக்குடன் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இந்தத் தகவலை மீள அறியத் தருகின்றோம்.

வீடுகளில் மீளக் குடியமரவும் அப்பகுதியில் விவசாயத்தை மேற்கொள்ளவும் பாதுகாப்புப் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் தமது வீடு, காணி தொடர்பான உரிமைகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

இந்தப் பகுதியில் மீளக் குடியமர

(15ஆம் பக்கம் பார்க்க)

பொது அமைப்புக்கள் ஒன்றியம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.1

'எய்ட்ஸ்' விழிப்புணர்வுக்கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சென்றவர்கள் படையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என முறையிடப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் கரவெட்டி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வருகை தந்த ஊரியர்கள், முல்லையர் ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரே இராணுவத்தினாலும், பொலீஸாரினாலும் துருவித்துருவி விசாரி

(15ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசியம் மாற்றத் தடுப்புச் சட்டமூலம் 60 நாள்களுக்குள் நாடாளுமன்றில்

நீதி அமைச்சர் உறுதிமொழி

...க்கு வழிகளில் நடைபெறும் ...றத்தைத் தடுப்பதற்கான சட்ட...து 60 நாள்களுக்குள் நாடாளு...தில் சமர்ப்பிக்க நடவடிக்கை ...கொள்ளப்படுமென பௌத்த ..., நீதி, தேசிய நல்லிணக்க அமைச்...பிள்ளுஜே. எம். லொக்குபண்டார ...த்து மூலம் உறுதியளித்துள்ளார்.

இதனையடுத்து, இப்பிரச்சினை தொடர்பாக மேற்கொண்டிருந்த சாகும் வரை பிரான உண்ணாவிரதப் போராட்டத்தை தேசிய சங்க சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினரான வண. ஓமல்பே சோபித நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைவிட்டார்.

இச்சட்டமூலத்தை தயாரிப்பதற்கென மகா சங்கத்தினரைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்படுமெனவும் அமைச்சர் லொக்குபண்டார உறுதியளித்திருக்கிறார். இக்குழு அமைக்கப்பட்டிருப்பதை 14 தினங்களுக்குள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கவும் உறுதியளிக்கப்

(15ஆம் பக்கம் பார்க்க)

காணாமற் போனோரின் உறவினரை ஜனாதிபதி நேற்றுச் சந்திக்கவில்லை

கொழும்பு,ஜன.1

...குடாநாட்டில் படையினரால் கைது ...ப்பட்ட பின் காணாமற் போனோ...கதி தொடர்பாக ஜனாதிபதியைச் ...ந்தித்து நேரில் மகஜர் கையளிக்க ...காணாமற்போனோரின் பெற்றோர் ...ள், பாதுகாவலர்கள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்திருக்கிறது.

நேற்று கொழும்பில் ஜனாதிபதியை சந்திக்கச் சென்ற பெற்றோர், பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளை அவரைச் சந்திக்க முடியவில்லை. ஜனாதிபதியின் செயலாளரை மட்டுமே சந்தித்து தங்கள் மகஜரைக் கையளித்தனர்.

கொழும்பு சென்றுள்ள காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடாகி இருந்தது. இதற்கான ஏற்பாடுகளை ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தார். எனினும், சங்கப் பிரதிநிதிகள் அங்கு ஜனாதிபதியின் செயலாளரையே சந்திக்க முடிந்தது.

குடாநாட்டில் காணாமற் போனவர்களின் சரியான தகவல்களை தனக்குத்

(15ஆம் பக்கம் பார்க்க)

வாசகர்களுக்கு!
புத்தாண்டை ஒட்டி இன்றைய 'உதயன்' மொத்தம் 32 பக்கங்களுடன் வெளியாகின்றான்.
உதயனின் தினசரி செய்திகள், விளம்பரங்கள் 24 பக்கங்களில் தனியாகவும் -
வர்ணப்பக்கங்கள் அடங்கிய புத்தாண்டுச் சிறப்பு மலர் 1.1 பகுதிகளில் தனி இணைப்பாகவும் அச்சிடப்பட்டுள்ளன.
அத்துடன், விளம்பரதாரர்கள் வழங்கும் வர்ணக் கலண்டர் ஒன்றும் கையடக்க நாட்காட்டி ஒன்றும் இன்றைய உதயனுடன் கிடைக்கும்.

சமாதானம் பிறக்க, ஜனநாயகம் நிலைக்க புத்தாண்டில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

பிரதமர் ரணில் வாழ்த்துச்செய்தி

நாட்டுக்கும் மக்களுக்கும் நிலையான சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கவும், நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் பெரும் அர்ப்பணிப்புடன் புத்தாண்டில் செயற்படுவது எமது நம்பிக்கையாகும். எந்த ஒரு பேதமுமின்றி அனைத்து மக்களும் அந்த இலட்சியத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டிருக்கும் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- புத்தாண்டின் உதயம் எதிர்பார்ப்புக்களை, குறிக்கோள்களை, இலட்சியங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் ஆகும். அவற்றை ஏற்படுத்திக்கொள்வதுடன் மட்டும் நின்று விடாது அவற்றை அடைய அர்ப்பணிப்புடன் செயற்படுவதும் அவசியமாகும்.

நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த அதன் மூலம் மக்களுக்குச்சிறந்த வாழ்க்கைத்தரத்தை வழங்குவதே எமது எதிர்பார்ப்பு, இலட்சியம், குறிக்கோள், பொருளாதார வளர்ச்சியைக் காணவும், மக்கள் அச்சம், சந்தேகமின்றி வாழும் ஒருசமுதாயத்தை உருவாக்கவும் சமாதானம் அத்தியாவசியம் என்பதை நாம் கடந்த இரண்டு ஆண்டுகளில் உணர்ந்திருக்கிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டுக்கும் மக்களுக்கும் சமாதானத்தினால் கிடைத்த நன்மைகள் மகிழ்ச்சிக்குரியனவாகும். இலங்கை மக்கள் அனைவருக்கும் சமாதானம், சௌபாக்கியம் நிறைந்த புத்தாண்டுகிட்ட வாழ்த்துகிறேன். (ஐ)

மதமுரண்பாடுகளை ஏற்படுத்த முயலுவோரை நாட்டு மக்கள் ஒதுக்கித் தள்ளுவார்கள்

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி நம்பிக்கை

இலங்கை மக்கள் தசாப்தகால இனமுரண்பாடுகளிலிருந்து மீண்டுவரும் இவ்வேளையில், நாட்டில் புதிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயலும் ஒரு சிறு குழுவின் நடவடிக்கைகளிலிருந்து மக்கள் தம்மை விடுவித்துக்கொள்வர் என்பதில் நான் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புத்தாண்டை முன்னிட்டு விடுத்திருக்கும் வாழ்த்துச்செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உண்மையான, வளமான வாழ்வுக்குச் சமாதானம் அத்தியாவசியமான காரணி என்பதைச் சிந்திக்க நாம் மறந்துவிடுகிறோமா? ஒவ்வொருவரினதும் மத நம்பிக்கைகளையும், பழக்கவழக்க மரபுகளையும் ஒவ்வொருவரும் அடிப்படையிலிருந்தே மதிப்பதன் மூலமே பல்லின மக்கள் வாழும் சமூகமொன்றில் சமாதானம் மலர்கின்றது.

பல தசாப்த காலமாக எமது நாட்டின் பொருளாதாரத்தையும், சமூக மேம்பாட்டையும் பலிகொண்ட இனக்குரோதங்களை நாம் அனுபவித்து வந்தோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நீதியானதுமான தீர்வொன்றைக் காண்பதற்கான காத்திரமான முயற்சிகள் தொடர்ந்தன. யுத்தத்தைத் தொடுத்த விடுதலைப் புலிகள் அதன் என்முறைகளுக்கு ஆப்பு வைத்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

நூற்றாண்டு காலமாக நாம் மதச் சகிப்புத்தன்மையோடு வாழ்ந்துவந்தோம். எமது சகோதர சகோதரிகளுடன் சமாதானமாகவும் அன்னியோன்யமாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றோம். கடந்த வாரத்தில் மதத் தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைக் கேள்வியுற்று நான் மிகவும் கவலையடைந்தேன்.

எமது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மும்மணிகளதும், சிவ இரக்கமதும், தேவர்களதும் அருளாசீர்வாதமும் உண்டாவதாக. மலரும் இப்புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் உண்மையான, நிரந்தரமான சுபிட்சமும் சமாதானமும் மிக்க புத்தாண்டாக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

- இவ்வாறு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

நுளம்பு வலைகளுக்கு மருந்து பூசும் பணி

சண்டிலிப்பாய்,ஜன.1

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் நாளை வெள்ளிக்கிழமையன்றும், மறுநாள் சனிக்கிழமையன்றும் நுளம்பு வலைகளுக்கு பேமித்தரின் மருந்து பூசும் பணி நடைபெறவுள்ளது.

சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள பொது மக்கள் தங்களிடமுள்ள நுளம்பு வலைகளை குறிப்பிட்ட தினங்களில் மேற்படி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து மருந்தை பூசுவித்துக் கொள்ள முடியும் என்று சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகர் விநாதன் அறிவித்துள்ளார். (எ-135)

பாடசாலை ஆரம்ப நேரம் அறிவிப்பு

வலிகாமம் தெற்கு,ஜன.1

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகள் யாவும் 2004 ஆம் கல்வி ஆண்டில் காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் அறிவித்துள்ளார்.

சகல பாடசாலைகளும் ஆரம்பமாகும் நேரம் ஒரே சீராக அமைய வேண்டும் என்பதால் காலை 8.30 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிப்பது என அதிபர்கள் தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-152)

பஸ்சேவை நீடிப்பு

தென்மராட்சி,ஜன.1

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து கோவிலாக்கண்டி சந்தி வரை நடத்தப்பட்டு வந்த பஸ் சேவை நேற்றுத் தொடக்கம் கடற்கரை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை வரை செல்லும் வீதி மகாவிஷ்ணு சனசமூக நிலையத்தினரால் சிரமதானம் மூலம் புனரமைத்துள் எதைமேற்கொண்டு பஸ் சேவை துரிதப்படுத்தப்பட்டது.

இதுதொடர்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வில் வலிமேற்கு சபையின் பொது முகாமையாளர் கமலிராசன், சாவகச்சேரி பிரதேச சபை செயலர் குகநாலச்சந்திரன் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றி பஸ்சேவையை ஆரம்பித்துவைத்தனர்.

பஸ் சேவை நீடிக்கப்பட்டதால் 167 குடும்பங்கள் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

தாதியர் பயிற்சிக்கு 31 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்காக 31 பேர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று ஆரம்பமாகின்றன.

மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு:-

கிளிநொச்சி-06, வவுனியா-02, முல்லைத்தீவு-02, மன்னார்-05, யாழ்ப்பாணம்-16.

இந்தப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று தாதியர் பயிற்சிப்பாடசாலையின் அதிபரால் சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-15)

உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ஜனவரி நடுப்பகுதியில் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.1

குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களைப் பார்வையிடுவதற்கென ஐநா. மனித உரிமைகள் ஆணையாளர் இம்மாத நடுப்பகுதியில் யாழ். வருகைதரவுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் எஸ். செல்வக்குமரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கென நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஆணையாளர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய உறுப்பினர்களுடன் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், அதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சுமார் 400இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக, நாம் உரியவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைகளை தயாரித்துள்ளதோடு, அவற்றை அரசிற்கும் சமர்ப்பித்துள்ளோம்.

அத்துடன் உயர்பாதுகாப்பு வலயத்தினால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்பாக நேரில் வந்து ஆராயுமாறு ஐநா மனித உரிமைகள் ஆணையகத்திற்கு அழைப்பு விடுத்திருந்தோம். அதனை அடுத்தே அவர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் காணாமல் போனோர் தொடர்பாக பல நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் சமர்ப்பித்த பட்டியலை விட மேலும், பலர் எம்மிடம் இது விடயமாக முறையிட்டுள்ளனர்.

அது மட்டுமல்லாது, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்தும் எமக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்ட விசாரணைக் குழு சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணைகளை நடத்தி அண்மையில் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எந்தவொரு குழு மீதும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முழு அதிகாரமும் வழங்கப்படவில்லை. நாம் விசாரணைகளை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் சமர்ப்பிக்க முடியுமே தவிரவும், அது தொடர்பான தீர்ப்புகளைக் கூறமுடியாது என்றார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகர தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், யாழ் குடாநாட்டின் சுகாதாரம், கல்வி என்பவற்றின் நிலைமைகள், பொலிஸாரின் நடவடிக்கைகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

பேராசிரியர்களான தயாசோமசுந்தரம், சிகரிராஜசிங்கம், வ. ஆறுமுகம், சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், வவுனியா மாவட்ட பிராந்திய இணைப்பாளர் சுகந்தலா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்தியக்குழு உறுப்பினர் என் நரசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-5)

தூங்கிக்கிடக்கும் இளையோர் எழுச்சிகொள்ள வேண்டும்

பேரூர் ஆதீன முதல்வர் உரை

தற்போதைய திருவெம்பாவைத் திருநாளில் தூங்கிக்கிடக்கும் இளைய தலைமுறை எழுச்சிகொண்டு செயலாற்ற ஆயத்தமாகவேண்டும்.

இப்படித் தெரிவித்தார், இந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்த பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார். நேற்று மாலை, நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அருளுரை ஆற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக நல்லை ஆதீனத்தில் இருந்து மங்கள வாத்தியம் சகிதம் அடிகளார் அழைத்து வரப்பட்டார். நல்லூர் ஆலயத்தில்விடை வழிபாடு இடம் பெற்று தொடர்ந்து நாவலர் மணிமண்டபத்தில் இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவத் தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துரை வழங்கினார். அங்கு பேரூர் ஆதீன முதல்வர் மேலும் கூறுகையில்,

ஒரு பல்கலைக்கழகம் செய்து முடிக்காத பணியை தனி மனிதனாகச் சாதித்துக் காட்டியவர் நாவலர். சைவ சமய எழுச்சிக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் உந்துதலாக விளங்கியவர் அவர். அவரது பெயரிலே அமைந்த அரங்கிலே இந்த நிகழ்வு இடம்பெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

திருவெம்பாவை எழுச்சித் திருநாளில் இளைஞர்கள் அதிகாலையிலேயே நித்திரைவிட்டு எழுந்து விடவேண்டும். அவர்கள் செயல் வேகம் கொண்டு இணைந்து செல்லவேண்டும். தமது வாழ்க்கைப் பாதையில் முன்னேறுவதற்கான ஆரம்ப நாள்களாக இந்நாள்களை மாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-9-5)

முன்பிணை அனுமதி மனு நீதிமன்றம் நிராகரிப்பு

முன்பிணை அனுமதி கோரி ஸ்ரீ லங்கா ரெலிகொம் - இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் தலைவரான திலங்க சுமதிபால சமர்ப்பித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது.

தான் கைது செய்யப்படுவதை அல்லது விளக்கமறியலில் வைக்கப்படுவதைத் தடுத்து தன்னை முன் பிணையில் விடுவிக்குமாறு அவர் இம்மனுவில் கோரியிருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரான என்.கே.உதாலகம, நீதிபதி பி.வஜபரன் ஆகியோர் இம்மனுவை ஆராய்ந்தனர்.

மனுவை நிராகரிப்பதற்கான காரணங்கள் எதிர்வரும் 16ஆம் திகதி அறிவிக்கப்படுமென நீதிபதிகள் அறிவித்தனர்.

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் தொடர்புபட்ட ஒரு வழக்கில் திலங்க சுமதிபால எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகவிருக்கிறார்.

கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஜன.1

அண்மையில் வெளியான ஈரற்புண் பற்றி பரிதிக்கப்பட்ட கணிதப்பிரிவு மாணவர்களுக்கான தமிழ் கலந்துரையாடல் நாளை மறுநாள் காலை 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பரிதிக்கப்பட்ட சில முக்கிய கணிதங்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பி. பிரதீபன் கேட்டுள்ளார். (ம-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.1

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்னாள் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு தீருவில் அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

பட்டப்பின் படிப்புகள் கற்கை நெறிகளின் ஆரம்ப நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடம் முதுநிலை மற்றும் பகுதிநேர பட்டப்பின் கல்வி நிறுவகங்களில் கற்கைநெறி (2003/2005) கல்விமான் முதுமானி கற்கைநெறி (2004) ஆகியவற்றிற்கு ஆரம்ப வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கற்கைநெறிகளுக்கான வைபவ கொத்தின் ஆரம்பமாக எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப வைபவத்தை தொடர்ந்து வவுனியா வளாக மாணவர்களுக்கான விரிவுரைகள் அன்றைய தினமே ஆரம்பமாகும் என்று யாழ்பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

நீதிமன்றம் இடம்மாற்றம்

தென்மராட்சி,ஜன.1

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இயங்கிவந்த சாவகச்சேரி நீதிமன்றம் இன்றுமுதல் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் ஹென்ஸ்மன் ஒழுங்கையில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

ஊடகவியலாளர்கள் புறக்கணிப்பு

புதிய பொலிஸ் அதிபர் இந்திர டிசில்வா நேற்று கண்டியில் அஸ்கிரிய பீடாதிபதி ஸ்ரீ புத்தரக்கித தேரரைச் சந்தித்தார். இச்சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. இதனால் ஊடகவியலாளர்கள் அச்சந்திப்பை புறக்கணித்தனர்.

சாயி சமித்தியில் தையல் பயிற்சி

யாழ் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் இலவச தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பெண்களுக்கான இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் கவிஞர்களுடன் விண்ணப்பிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

புத்தாண்டைக் கொண்டாட பிரேஸில் நாட்டில் ரியோடி ஜெனிரோவில் உள்ள உலகப் புகழ்பெற்ற கோபா சபானா கடற்கரையில் சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். 25 லட்சம் சுற்றுலாப்பயணிகள் வரை இந்தக் கடற்கரையில் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள்.

கோலன் குன்றுப் பிரதேசத்தில் யூதக்குடியிருப்புகள் விஸ்தரிப்பு

சிக்கலாகிறது மேற்காசியப் பிரச்சினை

சர்ச்சைக்குரிய கோலன் குன்றுப் பகுதியில் யூதக் குடியிருப்புகளை விரிவுபடுத்தப் போவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

1967 ஆம் ஆண்டு அரபு - இஸ்ரேல் யுத்தம் இடம்பெற்றது. அந்தப் போரில் சிரியாவிடமிருந்து கோலன் குன்றுப் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. அந்தப்பகுதியை தனது நாட்டின் ஒரு பகுதி என்று இஸ்ரேல் 22 ஆண்டுகளுக்கு முன்னர் பிரகடனம் செய்தது. அத்துடன் அங்கு யூதக் குடியிருப்புகளையும் ஏற்படுத்தி வந்தது.

ஆனால், இதனை ஏற்க மறுத்த சிரியா கோலன் குன்றுப்பகுதியை மீள ஒப்படைக்கும்படி இஸ்ரேலை வற்புறுத்தி வந்தது.

சிரிய அதிபர் பஸ்ஹர் அல் அஸத் கோலன் குன்றுப் பகுதி குறித்துப் பேசவரும்படி இஸ்ரேலுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே கோலன் குன்றுப்பகுதியில் யூதக் குடியிருப்புகள் விஸ்தரிக்கப்படும் என்று அறிவித்துள்ளது. இது மேற்காசியப் பிரச்சினையில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவுடன் பேச்சு நடத்துவதற்கு முன்னர் கோலன் குன்றுப்பகுதியில் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள இஸ்ரேல் விரும்புகிறது என்று இஸ்ரேலிய விவசாய அமைச்சர் யிஸ்ரல் கட்ஜ் கூறினார். சுற்றுலா மற்றும் விவசாய அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு மேலும் 9 யூதக் குடியிருப்புகளை இப்பகுதியில் அமைக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இஸ்ரேலின் இந்த அறிவிப்புத் தொடர்பாக சிரியாவோ, அமெரிக்காவோ உடனடியாகக் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

'சார்க்' வெளியுறவுச் செயலர்களின் ஆலோசனைக் கூட்டம் ஆரம்பம்

சார்க் அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் வெளியுறவுத்துறை செயலர்களின் ஆலோசனைக் கூட்டம் நேற்றுத் தொடங்கியது.

இன்று இந்தக் கூட்டம் முடிவடைகிறது.

பயங்கரவாதப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பது, தெற்கு ஆசிய தாராள வர்த்தக உடன்படிக்கை ஆகியவை குறித்து 4ஆம் திகதி தொடங்கும் சார்க் உச்சிமாநாடு விவாதித்து அதற்கான அடிப்படை அம்சங்கள் பற்றி கவனம் செலுத்த உள்ளது.

அதற்கான விரிவான ஆலோசனை நடத்துவதற்கான திட்டத்தை இறுதி செய்ய வெளியுறவுச் செயலர்கள் ஆலோசனை நடத்துகின்றனர்.

சார்க் நாடுகளுக்கிடையேயான தாராள வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம் பற்றிய அடிப்படை அம்சங்கள் வறுமை ஒழிப்புக்கான அறிக்கையை அமுல் செய்வது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்துக்கு பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ரியாஸ் கோக்கர் தலைமை வகிக்கிறார்.

பயங்கரவாதம், போதைப் பொருள் கடத்தல், பெண்கள் மற்றும் சிறுவர்களைக் கடத்துவது போன்றவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான உடன்பாடு மற்றும் இதர ஒப்பந்தங்கள் பற்றி வெளியுறவுச் செயலர்கள் ஆலோசனை நடத்துவார்கள்.

தாராள வர்த்தகம் தொடர்பாக விவாதித்த போது எந்தெந்த பொருள்களுக்கு வரி விதிக்கலாம் என்பது அடங்கிய பட்டியலை சார்க் நாடுகள் தமக்கிடையே ஏற்கனவே நடந்த பேச்சுக்களில் பரிமாறிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சிறையில் கடிதம் எழுதத்தடை; வழக்குத் தொடர்கிறார் வைகோ

சென்னை,ஜன.1

சிறையில் முறைப்படி தான் நடத்தப்படவில்லை என்று வைகோ வேதனை அடைந்துள்ளார். இது குறித்து வழக்குத் தொட அவர் முடிவு செய்துள்ளார்.

நீதிமன்றில் அவர் தாக்கல் செய்யும் மனுவில் அவருக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்துக் கூறி இருக்கிறார்.

பிரதமருக்கு சிறையில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் எழுதிய கடிதம் முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை முக்கிய வாதமாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமருக்கு எழுதிய கடிதத்தை அனுப்ப சிறை அதிகாரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைக் கைதிக்கு கடிதம் எழுதுவதற்கு உரிமை உண்டு. அந்தக் கடிதத்தை அதிகாரிகள் தணிக்கை செய்து அனுப்பவேண்டும். ஆனால் இந்த விதி முறை தன்னுடைய விஷயத்தில் பின் பற்றப்படவில்லை. 3 முறை கடிதம் எழுதியும் அந்த 3 கடிதங்களையும் சிறை அதிகாரிகள் அனுப்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அதிகாரிகள் இப்படிச் செயல்பட்டுள்ளனர். எனவே, இதற்குக் காரண மானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். வைகோ சார்பில் ம.தி.மு.க. சட்டத் தரணிகள் அடுத்தவாரம் இந்த மனுவைத் தாக்கல் செய்யவுள்ளனர்.

சபரிமலை ஆலயம் இன்று திறப்பு

இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயில் மகரவிளக்கு பூஜை வழிபாட்டுக்காக ஆலயத்தின் பிரதான கதவு இன்று திறக்கப்படுகிறது.

இன்று பிற்பகல் 6.00 மணிக்கு ஆலய நடைக்கதவு திறந்து வைக்கப்படும். இரவு 10 மணி வரை தரிசனம் மட்டும் நடைபெறும் வேறு பூஜைகள் நடைபெறாது.

நாளை முதல் சபரிமலை, ஐயப்பனுக்கு மகரவிளக்குப் பூஜைகளும், வழிபாடும் முறைப்படி ஆரம்பமாகி நடைபெறும். அன்று அதிகாலை சடங்குகள் நடைபெற்று மகரவிளக்கு வழிபாடு தொடங்குகிறது.

இதற்காக சபரிமலை கோயில் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு பிம்ப சுத்திப் பூஜைகள் நடைபெற்றன.

காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி கருணாநிதி சூசகத் தகவல்

சென்னை,ஜன.1

இந்தியாவின் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து அண்மையில் வெளியேறிய திராவிட முன்னேற்றக் கழகம், மத்தியில் பிரதான எதிர்க் கட்சியான அகில இந்திய காங்கிரஸுடன் கூட்டமைக்க முடிவு செய்திருக்கிறது. புதிய கூட்டணி அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தமிழகத்தில் சூடுபிடித்திருக்கின்றன.

காங்கிரஸின் தலைவி சோனியா காந்தி நேற்றுமுன்தினம் தி.மு.க. தலைவர் கருணாநிதியைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேறியதற்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக செய்தியாளர்களுடன் பேசிய கருணாநிதி - தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி இப்போது அரும்பித்துவிட்டதாகவே கருதலாம் என்றும் -

பிரதமர் பதவிக்கு சோனியா காந்தியைக் காங்கிரஸ் போட்டியிடவைப்பதில் தி.மு.கவுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் -

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் வைகோ தலைமையிலான ம.தி.மு.க. இணைவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் - கூறியிருக்கிறார்.

இதேவேளை, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் தமிழ் நாட்டுப் பிரமுகர்களும் கருணாநிதியுடன் தொடர்புகொண்டு புதிய கூட்டணி குறித்துப் பேச்சு நடத்திவருகிறார்கள். (ஒ)

தங்கத்தின் விலை திடீர் உயர்வு

கோலாலம்பூர்,ஜன.1

ஆசிய சந்தைகளில் கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத வகையில் தங்கத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

யூரோவுக்கு (ஐரோப்பிய பொது நாணயம்) எதிரான டொலரின் மதிப்பு இன்னும் குறையக்கூடும் என்ற அச்சம் காரணமாக இந்த விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது.

யூரோவுக்கு எதிரான டொலரின் மதிப்பு 16 சதவீதம் குறைந்தது. இதன காரணமாக இந்த ஆண்டு மட்டும் தங்கத்தின் விலை 19 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால் ஐரோப்பிய சந்தைகளில் மட்டும் தங்கம் வாங்கும் சக்தி அதிகரித்தது.

நியூயோர்க் சந்தையில் நேற்று முன்தினம் ஔன்ஸ் (28.35 கிராம்) தங்கத்தின் விலை இந்தியப் பணத்தில் ரூ.19 ஆயிரத்து 159 ஆக இருந்தது. 1996 இறுதிப் பிறகு முதல்முறையாக இந்த அளவுக்கு விலை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க டொலரின் மதிப்பு கடந்த 18 வாரங்களாகத் தொடர்ந்து இறங்குமுகமாக உள்ளது. யூரோவுக்கு எதிரான டொலரின் மதிப்பு கடந்த 6 நாள்களில் 3 முறை குறைந்துள்ளது. (ஒ)

பூமியை நெருங்கியது சனி

ஹூப்ளி,ஜன.1

பூமிக்கு அருகே சனிக் கிரகம் வந்துள்ளது. தொலைநோக்கி மூலம் இந்த கிரகத்தை காணமுடியும் என்று வானியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரிய குடும்பத்தில் வியாழன் கிரகத்திற்கு அடுத்ததாக உள்ள பெரிய கிரகம் சனி 13 மாதங்களுக்கு ஒரு முறை சனிக் கிரகம் பூமிக்கு அருகே வருகிறது. இருப்பினும் 30 ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூமிக்கு மிக நெருக்கமாக அது வந்து செல்கிறது.

1973 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குப் பின்னர் தற்போது சனிக் கிரகம் பூமியை நெருங்கியுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள ஆயிரக் கணக்கானோர் சனிக்கிரகத்தை பார்வையிடவுள்ளனர் என்று கூறும் வானியல் ஆராய்ச்சியாளர்கள், தொலைநோக்கியின்றி அதனைப் பார்வையிடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதற்குபின் 2034 ஆண்டிலேயே சனிக் கிரகம் பூமியை நெருங்கும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

சதாமிடம் விசாரணை தொடர்கிறது

கைது செய்யப்பட்ட ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனிடம் அமெரிக்கப் படை அதிகாரிகள் சிலர் முன்னிலையில் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

ஈராக்கிய இடைக்கால ஆட்சிக் குழுவினரால் நியமிக்கப்பட்ட சபை உறுப்பினர் சியாத் அலாவி இந்த விசாரணைகளை தற்போது மேற்கொண்டுவருகிறார்.

பக்தாத் விமான நிலையம் அருகே உள்ள இரகசிய இடமொன்றில் வைத்தே அவரிடம் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று ஈராக்கில் உள்ள செய்தியாளர்கள் கூறினர்.

முன்னர் நடந்த விசாரணைகளின் போது ஒத்துழைக்க மறுத்த சதாம் தற்போது பல இரகசியங்களை வெளியிட்டு வருகிறார் என்று அவரிடம் விசாரணை நடத்தி வரும் சியாத் அலாவி தெரிவிக்கிறார்.

சதாம் சுவிஸ் வங்கியில் 4 ஆயிரம் கோடி டொலர் வைப்பிலிட்டுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் -

இந்தப் பணம் யாருடைய பெயர்களில் உள்ளன என்பதையும் மேலும் பல தகவல்களையும் சதாம் கூறினார் என்று அலாவி தெரிவித்தார்.

எனினும், சதாம் கூறிய இந்த தகவல் உண்மையானதா? என்பதை அறிய சுவிஸ் வங்கியின் உதவியை அமெரிக்கா நாடியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆற்றுகையாளர்கள் தேவை

தொழில் சார் அரங்கச் செயற்றிட்டம்
(Professional Theatre Work)

TRRO நிறுவனத்தின் துணை நிறுவனமாக இயங்கிவருகின்ற செயற்றிறன் அரங்க இயக்கம் Active Theatre Movement சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து நாடகமும் அரங்கியலும் துறையை அபிவிருத்திச் செயற்றட்டங்களுக்காக கடந்த பல ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றது.

2004/2005 ஆம் ஆண்டுகளில்

அபிவிருத்திக்கான அரங்கு
Theatre For Development
(TFD)

சமுதாய அரங்கு
Community Theatre
தெருவெளி அரங்கு
Street Theatre
சிறுவர் அரங்கு
Children's Theatre

என்ற அரங்க செயற்றிட்டமொன்றினை (Theatre Project) ஆரம்பிக்கவுள்ளது. இச் செயற்பாட்டின் முழு நேரம்/பகுதிநேர ஆற்றுகையாளர்களாக (Performers) பங்குபற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மூன்று மாத காலம் நடைபெறும் பயிற்சிகளில் பங்குபற்றி சித்தியடைவோர் ஆற்றுகையாளர்களாக இணைத்துக்கொள்ளப்படுவர்.

ஆற்றுகையாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு - 6000/=

வேண்டப்படும் அடிப்படைத் தகைமைகள்

- G.C.E. A/L பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- நாடகமும் அரங்கியலும் துறைசார் அனுபவம்.
- G.C.E. A/L நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சேர்ந்து சிறப்புச் சித்தி பெற்றிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வயதெல்லை: 20 - 30.

(C-32367)(11-16-30)

விண்ணப்ப முடிவு திகதி : 07.01.2004
சுயவிவரங்களுடன் தேரிலோ தபால் மூலமாகவோ தொடர்புகொள்ளவும்.

தொடர்பு முகவரி:

செயற்றிறன் அரங்க இயக்கம்
Active Theatre Movement
அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

நவீன வகையிலான நங்கையர் விரும்பும்
நவநாகரிக ஆடைகளுக்கு
நம்பிக்கையான இடம்:

லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.
☎ 222 2381

வேண்டுகோளுக்கிணங்க எமது நிலையத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி
பொங்கல் நாள் வரைக்கும் மலிவு விற்பனை நடைபெறப்பட்டுள்ளது.

(C-32353)

அச்சுவேலியில் 2004 இற்கான
English Classes

தரம் 6-O/L
பிரத்தியேக வகுப்பு
Spoken English with Grammar
ஆரம்பம்:
01-01-2004
11.00 a.m

ஆங்கிலக் கல்லூரி
சந்நிதி வீதி - அச்சுவேலி.
(26612) (26)

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு
எமது புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

மாணவ, மாணவிகளுக்கு
சகல புத்தகங்களும்
மலிவு விலையில்!
குறைந்த விலையில்
அப்பியாசப் புத்தகங்கள்!

கலண்டர்கள், டயறிகள் விற்பனையாகின்றன!
உடனே விஜயஞ்செய்யுங்கள்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
☎ T.P.: 222 2573

(C-32353) (31-16-19-25)

கண்ணீர் அஞ்சலி

இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்
திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின்
அன்பு மனைவியும்
எமது ஆருயிர் நண்பன் பா.முரளிதரனின் அன்புத் தாயாருமான
திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து,
அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும்
சமர்ப்பித்துக்கொள்கின்றோம்.

கோப்பாய் வடக்கு நண்பர்கள்
(கண்ணகை அம்மன்
வாசிகசாலை)

(சி-32346) (25-12-18)

அச்சுவேலியில்
CITயின் கணனி
வகுப்புகள் புதிய பிரிவு
கள் ஆரம்பம்.
01/01/2004 10.30 a.m.
★Diploma Courses
★Certificates Courses
★Children Programmars
சந்நிதி வீதி,
அச்சுவேலி.
(26613)(35)

உ
குருவே துணை

சந்நிதியான் ஆச்சிரம
சைவகலை பண்பாட்டுப் பேரவை
நடத்தும்

வருடாந்த திருவாசக விழா -2003

காலம்: 02-01-2004 வெள்ளிக்கிழமை
காலை 9-00மணி
இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
அருளுரை: நல்லை ஆதீனகுருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
சிறப்புரைகள்: ★ தமிழ்நாடு பேரூர் ஆதீனமுதல்வர் தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.
★ தமிழ்நாடு தர்மபுர ஆதீனம் டாக்டர் ஸ்ரீமத்
குமாரசாமி தம்பிரான் சுவாமிகள்
மாணவர் நிகழ்வு: போட்டியில் பங்குபற்றிய மாணவர்களின்
பண்ணிசை நிகழ்வும் தொடர்ந்து
பரிசளிப்பும் இடம்பெறும்.
குறிப்பு: ஸ்ரீசெல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விஷேட
அபிஷேகத்தைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுரு
வப் படங்களும் திருவாசக் ஏடுகளும் ஆச்சிரமத்திற்கு
ஊர்வலமாக எடுத்து வரப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம்.
செல்வச்சந்நிதி. -ச.ஆ.சை.க.ப.பேரவையினர்.
நொண்டிமானாறு. (சி-32347) (26-16-19-25)

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

2004

புத்தாண்டில்
புதிய பப்படம்

கௌரவ்

இப்பொழுது அறிமுகமாகிறது

நீங்களும் ஒரு முறை
சுவைத்து பாருங்கள்!

இறக்குமதியாளர்களும் விநியோகத்தர்களும்

GAURAV
Imports (pvt) Ltd.
44/1, 4th Cross Street, Colombo-11
Tel : 2380130, 2380131 Fax : 4716443
E-mail : gaurav@visualnet.lk. / gauvrav@pan.lkl

உன்னதமான சுவைக்கு
கௌரவமான நாமம்
கௌரவ் பப்படம்

Picture Ads

பாராட்டி வாழ்த்துகிறோம்

சாவகச்சேரி, கோயில்குடியிருப்பு, சந்தன முத
லிச்சியுலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபா
லன சபையின் நீண்டகால உபதலைவரும்,
A.K.S. றான்ஸ்போட் சேவிஸ் (சாவகச்சேரி),
A.K.S. அரிசி ஆலை (பரந்தன்) ஆகியவற்றின்
முன்னாள் பங்காளருமாகிய

உயர்திரு. அ.க.சபாரட்ணம்

அவர்கள் 24.12.2003 அன்று அகில இலங்கை
சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப்
பாராட்டி வாழ்த்துகிறோம். அவரது சேவை மேலும் சிறப்புற இறை ஆசி
வேண்டி வாழ்த்துகின்றோம்.

கட்டுக்காணி வீதி, திருமதி ப.நாகரத்தினம் அவர்களும்
சாவகச்சேரி. (26606) (34-12-18-25) பிள்ளைகளும்.

கண்ணீர் அஞ்சலி

வேலுப்பிள்ளை கந்தசாமி (CTB சாரதி)
எமது அன்பு நண்பன்
சிவானந்தராசாவின் பாசமிகு தந்தையார்
வேலுப்பிள்ளை கந்தசாமி

அவர்களுடைய மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதுடன்
அன்னாரைப் பிரிந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் எமது நண்பனுக்கும்
அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்
(C/32362)(34-16-19-25) நெல்லியடி, கரவெட்டி.

மனமுவந்து நன்றியுடன்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது தேவைகளை முற்றுமுழுதாக உணர்ந்து நல்லமுறையில் மக்களின்
வாழ்வு சீர்பெறவேண்டுமென்ற நன்னோக்கத்துடன் எமக்கு அளப்பரிய
சேவை யாற்றி அல்லும் பகலும் அயராதுழைத்துச் செயற்பட்டவரான
இந்துகலாசார மாண்புமிகு அமைச்சர்

உயர்திரு.தி.மகேஸ்வரன்

அவர்களுக்கு எமது பிரார்த்தனையான வாழ்த்துக்களை நன்றியுடன் தெரிவித்து அவரைப்
பாராட்டி மகிழ்கின்றோம்.

அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி

1) அல்லைப்பிட்டி சென். பிற்றர்ஸ் கடற்றொழிலாளர் சங்கம்	150.000/=
2) அல்லைப்பிட்டி இந்துமயானம்	100.000/=
3) அல்லைப்பிட்டி சென்ற் நீக்லஸ் விளையாட்டு கழகம்	50.000/=
4) அல்லைப்பிட்டி சிறீமுருகன் விளையாட்டு கழகம்	50.000/=
5) அல்லைப்பிட்டி முருகன் ஆலயம்	50.000/=
6) அல்லைப்பிட்டி சனசமூக நிலையம்	50.000/
7) அல்லைப்பிட்டி சந்தானாதி பிள்ளையார்	50.000/=
8) அல்லைப்பிட்டி சிவன் ஆலயம்	50.000/=
9) அல்லைப்பிட்டியில் வாழும் வறிய 125 குடும்பத்திற்கு மலசலகூடம் அமைப்பதற்கு	5.75.000/=

பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

- அல்லைப்பிட்டி வாழ் மக்கள்.

(C/32351)(34-12-18-25)

நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

திருமதி
பவளரத்தினம் சண்முகநாதன்

கடந்த 02-12-2003இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்
வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், பல
வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்
களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

இன்று (01-01-2004) வியாழக்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின்
சபிண்டீகரணம் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

உரும்பிராய் வடக்கு, கணவர், பிள்ளைகள்,
உரும்பிராய். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(பன்குளம். திருகோணமலை) (26604) (26-16-19-25)

உதயன்

புத்தாண்டு எதிர்பார்ப்பு

இலங்கைத்தீவு மக்களுக்குப் பெரு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் தருவதாகப் பிறந்து, அவநம்பிக்கையையும் ஏமாற்றத்தையும் அளிப்பதாகக் கழிந்திருக்கின்றது 2003 ஆம் ஆண்டு.

பெரும் பரபரப்புப் பேச்சுக்களோடும் தடபுடல் அறிவிப்புக்களோடும் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் படலம் வெறும் கானல்நீர் நாடகம் என்பது இப்போது ஓரளவு வெளிப்பட்டு நிற்கிறது.

நமது நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு சுமார் மூன்று தசாப்தகாலம் அமைதி வழியில் - அஹிம்சை ரீதியில் - ஈழத்தமிழர்கள் எடுத்த பல்வேறு முயற்சிகள் புறக்குடத்து நீராய் வீணாகிப்போன நிலையில் வேறு வழியின்றி அவர்கள் ஆயுதங்களைத் தூக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஈழத்தமிழர்கள் சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு இயக்கம் என்று பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடத்தி, தமது நியாயமான அபிலாஷைகளை சிங்களத் தலைமைகளின் முன் வைத்தபோதெல்லாம் அவை செவிடன் காதில் ஊதிய சங்காக - எருமையின் தோல் மீது பெய்த மழையாக - பயனற்றுப் போயின. அதன் விளைவாக இனப் பிணக்கு - புகல் - பெரும் இனப் போரானது.

இரண்டு தசாப்தகால இனப்போரின் விளைவாக நாடும் மக்களும் கொடுத்த விலை அளப்பரியது; காவு கொடுத்த உயிர்களின் கணக்கு எண்ணில் அடங்காதது.

மிகமோசமான அழிவுகளைத் தந்த இனப்புகலுக்கு அமைதி வழியில் தீர்வுகாணுங்கள் என்று சர்வதேச உலகம் இலங்கைத் தீவைப் பார்த்துக் கோரியது.

'அதற்கு நாம் தயார். சிங்களத்தரப்புத் தயாரா?' - என்று தமிழரின் தேசியத் தலைமை கடந்த பல வருடங்களாகத் தன்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தி வந்தது.

தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வதன் மூலம் இனப்புகலுக்கு அமைதித் தீர்வு காணமுடியும் என்பதை வலியுறுத்திச் சுட்டிக் காட்டிவந்த தமிழர் தரப்பு, சிங்களத்தரப்பு அதற்கு இணங்காததன் விளைவே இந்த மோசமான அழிவுப் போர் என்பதையும் சர்வதேச சமுகத்துக்கு எடுத்து வரத்தது.

அது மட்டுமல்ல. அத்தகைய சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான ஆக்கபூர்வமான முன்நடவடிக்கைகளையும் - சாதகமான சமிக்ஞைகளையும் - கூட அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தது. அதேசமயம் சிங்களத் தரப்பு அதனை உதாசீனம் செய்து வந்தது. அதற்கு மேலும் சென்று இனப்பிரச்சினைக்கு இராணுவரீதியில்தான் தீர்வு என்று விடாப்பிடியாக நின்றது.

இந்தச் சமயத்தில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.முன்னணி 2001 இறுதியில் ஆட்சிக்கு வந்தது. வந்த கையோடு சமாதான வழியில் அமைதித் தீர்வு காண்பதற்குப் பச்சைக் கொடி காட்டியது.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுக்கு - தமிழர் தரப்பின் அபிலாஷைகளைத் தீர்க்கும் திட்டத்துக்கு சிங்களப் பேரினவாதம் ஒருபோதும் இணங்கமாட்டாது என்பதை அப்போதே அப்பட்டமாக - பகிரங்கமாக - வெளிப்படுத்தியது தமிழர் தரப்பு. எனினும் அமைதி முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தந்து செயற்படத் தாங்கள் தயார் என்பதையும் பிரகடனப் படுத்தியது. அந்தப் பிரகடனத்தின் வழி கடந்த இரண்டு ஆண்டுகளாக இதயசுத்தியோடு சமாதான முயற்சிகளில் தமிழர் தரப்பு ஈடுபட்டது.

மக்களும் பெருத்த எதிர்பார்ப்போடு - சமாதானம் கிட்டும் என்ற நம்பிக்கையோடு - வழிமேல்விழி வைத்து 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளைப் பார்த்திருந்தனர்; காத்திருந்தனர்.

ஆனால், நடந்தது என்ன? ஆரம்பத்திலிருந்தே தமிழர் தரப்பு எச்சரித்து வந்ததுதான் கடைசியில் அரங்கேறியிருக்கின்றது.

பேரினவாதம் தனது சுயரூபத்தைக் காட்டி, அமைதி முயற்சிகளை நடுவழியில் அந்தரிக்கச் செய்துவிட்டு இப்போது கொக்கரித்து நிற்கின்றது.

பெரு நம்பிக்கையை உருவாக்கிக் கடந்து சென்ற 2003 ஐ அடுத்து, பெருத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாகப் பிறந்த 2004, இப்போது அவநம்பிக்கையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்திக் கழிந்து போனதுக்கு சிங்களப் பேரினவாதத்தின் இப்போக்குத்தான் காரணம்.

இப்போக்கு இப்போது அமெரிக்காவின் கண்டனத்துக்கும் அதிருப்திக்கும் கூட உள்ளாகியிருக்கின்றது. அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் அர்மிடேஜ், இலங்கை அமைச்சர் மிலிந்த மொறகொடவை கடந்த திங்கள்கிழமை வாஷிங்ரனில் சந்தித்தபோது இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

சிங்களத் தலைமை இனிமேலாவது தன்னைத் திருத்திக் கொண்டு தமிழர்களுக்கு உரியதை விட்டுக் கொடுக்க முன்வந்தால்தான் இலங்கைத் தீவில் நிரந்தர அமைதி சாத்தியமாகும்.

2004 இல் அதற்கான அத்திவாரம் இடப்படுமா என்பதுதான் இந்த நாட்டில் வாழும் அனைத்து அப்பாவிப் பொதுமக்களினதும் ஏக்கத்துடன் கூடிய எதிர்பார்ப்பாகும்.

ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்கின்ற ஆண்டாகட்டும்

யாழ். ஆயரின் புதுவருட ஆசி

2004ஆவது புதிய ஆண்டின் முதல் தினத்தில் தமிழ் மக்கள அனைவரையும் அன்போடு நினைத்து நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான ஆண்டாக - அமைதியான ஆண்டாக - உங்கள் உள்ளத்து ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவு செய்கின்ற ஆண்டாக - இறையருளால் மலர இறையாசி வேண்டுகிறோம்.

கத்தோலிக்க திருச்சபையானது 1967ஆம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்தையும் உலக சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தி விசேட விதமாக சமாதானத்திற்காக செபிக்கும்படி அழைப்பு விடுத்துவந்துள்ளது.

தமது பணியின் 25 ஆண்டுகளை நிறைவுசெய்யும் பாப்பரசர் 2ஆம் யோவான் பவுல் அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக ஒவவோர் ஆண்டின் முதல் தினத்திலும் சமாதான செய்தியினை வழங்கி உலக சமாதானத்திற்காக குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார்.

சமாதானத்தைப் போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என்ற தலைப்பில் பாப்பரசர் வெளியிட்டுள்ள 2004 ஆம் ஆண்டு சமாதான தினத்துக்கான செய்தி அவருடைய 25வருட உலக சமாதானதினச் செய்தியின் சாரமாக அமைந்திருக்கிறது. 25 வருடமும் சமாதானத்தைப் பற்றி நிறைய சிந்தித்து போதித்துவிட்டோம். இனி சமாதானத்தைச் செயற்படுத்துவோம், வாழுவோம் என அவர் வேண்டிநிற்கிறார்.

உண்மையான சமாதானத்தை உலகில் நிறுவ வேண்டுமானால் நீதியானது அன்பினால் கட்டாயமாக நிறைவு செய்யப்பட வேண்டும் என இவ்வாண்டுச் செய்தியில் அவர் சிறப்பாக வலியுறுத்தி நிற்கிறார். இச்செய்தி இன்று எம்மண்ணிற்கும் பொருந்துவதாய் உள்ளது.

எமது நாட்டில் இன்று தோன்றியுள்ள அரசியல் குழப்பமான நிலை இன்னும் முடிவு காணாது இழுபட்டுக்கொண்டே போகிறது. சமாதானத்தை விரும்புபவர்கள் எல்லார் மனங்களிலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வும் எப்போது இந்த அரசியல் ஸ்திரமற்ற நிலைமாறும் என்ற பதற்ற உணர்வும் மீண்டும் ஒருமுறை போர் மூழுமோ என்ற பய உணர்வும் இன்னும் நீடிக்கவே செய்கிறது.

உண்மையான சமாதானத்தை இலங்கை மண்ணில் நாம் நிறுவ வேண்டுமானால் நீதியானது முதலில் நிலைநிறுத்தப்பட வேண்டும். அது அன்பினால் நிறைவுசெய்யப்படவேண்டும். அப்போதுதான் பழையவற்றை மன்னித்து மறந்து புதிய உறவை கட்டியெழுப்பி இலங்கை மண்ணில் நாம் சமாதானத்தில் இணைய முடியும்.

சமயத் தலைவர் என்கின்ற வகையில் தமிழ்மக்கள் அனைவருக்கும் பல தடவை நாம் விடுத்த வேண்டுகோளை இப்புதிய ஆண்டில் திரும்பவும் அழுத்தத்தோடு விடுக்க விரும்புகிறோம். இவ்வாண்டு சமாதானத்தை அடைய தமிழ் மக்கள் எல்லோரும் இடைவிடாது செபிக்க வேண்டும் என்பதே அவ்வேண்டுகோளாகும். செபத்தின் வழிதான் நாம் சமாதானத்தை அடைய முடியும் என்ற எமது அசைக்க முடியாத நம்பிக்கையை செபத்தின் வழியாக நிலைநாட்டுவோம்.

அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர் என்ற இயேசுவின் மலைப் பொழிவை நினைவூட்டி இலங்கை மண்ணில் சமாதானத்தை ஏற்படுத்தப் பிரதமரும் ஜனாதிபதியும் இணைந்து செயற்படவேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம். இதுவே இன்றைய அவசர தேவையாக இருக்கிறது. யார் யெரை பெற்றுக்கொள்வது என்ற போட்டியிலோ, எப்படி விட்டுக் கொடுப்பது என்ற தன்மானத்திலோ எமது மண்ணில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தவேண்டாம் என சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இப்புதிய ஆண்டில் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். 2004ஆம் ஆண்டு பழையன கழிந்து புதியன புகும் ஒரு புதிய ஆண்டாக தமிழ்மக்களுக்கு நீதிபோடு கூடிய நிரந்தரத் தீர்வையும் அமைதியோடு கூடிய சமாதான வாழ்வையும் தரும் ஒரு புனித ஆண்டாக இருக்க வேண்டுமென இறையாசி வேண்டி புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

இனிய புத்தாண்டை இன்பமாய் வரவேற்போம்

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் செய்தி

இறையருளால் இவ்வாண்டில் இவ்வையகம் இனிதே சிறக்க வணங்குவோம். பல்லுயிரும் பகையின்றி இப்பாரில் வாழ பரம்பொருளை இறைஞ்சுவோம். மனித இனம் மாசற்ற இனமாக மலர்ந்திட கடவுளை மன்றாடுவோம். உலகம் முழுவதும் இப்புதிய ஆண்டில் ஒன்றுபட்டு உழைக்க ஆவல்கொள்வோம். கடந்த ஆண்டிற்கு விடை கொடுத்து புதிய ஆண்டில் நிதானமாகக் கால் எடுத்து வைப்போம்.

கடந்த ஆண்டில் நாம் சாதித்த சாதனைகளை நினைத்துப் பெருமை கொள்வோம். கடந்த ஆண்டு நாம் விட்ட தவறுகளை உணர்ந்து நிவர்த்திப்போம். நாம் எடுத்த நல்ல முயற்சிகளை புதிய ஆண்டிலும் தொடர்வதற்கு ஆயத்தமாவோம். மனிதகுலம் கடந்த ஆண்டில் நிலைநாட்டிய புதுமைகளை இரைமீட்டுப் பார்போம். அதேவேளை மனிதகுலம் செய்த இரக்கமற்ற காரியங்களுக்காக மனிதர்களாகிய நாம் வெட்கப்படுவோம். இயற்கையைப் படைத்த இறைவன் சென்ற வாரமும் ஈரான் நாட்டைப் பூகம்பத்தால் தடுமாற வைத்தான். உலகையே உருக்கியது அக்காட்சி. இறைவா! இனி இந்த உலகத்துக்கு வேண்டாம் பூகம்பம். புதிய ஆண்டு பிறக்கையில் புவி நிலை பெற்றிட பூதலத்தோர் இயற்கையின் தண்டனையினின்றும் இடரினின்றி வாழ உதவும்படி உன்னை மன்றாடுகிறோம்.

இயற்கை எழில்மிக்க எம் ஈழத்திருநாடு நிலையான சமாதானத்தைப் பெற்றுவிடவேண்டும். மதத் தலைவர்களே! மகத்தான அரசியல் தலைவர்களே! தேசத்தை வளர்த்து திடமான உண்மைச் சமாதானத்தை கட்டி எழுப்புங்கள். அழகான இயற்கை உலகத்தை அனைவரும் தம் வாழ்வில் அனுபவிக்க தங்கள் இதயக் கதவுகளை அகலத் திறவுங்கள் ஒவ்வொரு மனிதனும் தத்தம் உரிமைகளைப் பெற்று அறவழியில் ஆனந்தமாக வாழ வாய்ப்புக் கொடுங்கள். ஒவ்வொரு மனிதனதும் மனவிருத்தியே நாட்டின் விருத்தியாகும். போரில் அழிவுற்ற எம் இனிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அகன்ற மனத்துடன் அரும்பாடுபடவேண்டும். போரில் உறவுகளை இழந்தவர்களிற்கு, உடைமைகளைத் தொலைத்துத் தவிப்பவர்களிற்கு ஏற்ற துணைசெய்ய, இரக்கத்தோடு பணிசெய்ய, இளையதலைமுறையே முன் வாருங்கள். பாடுபட்டுத் தேடி பணத்தைப் புதைத்து வைக்காது பரிதவிப்பவர்க்காய் இரக்கம் காட்டும் பண்பை புத்தாண்டில் வளர்த்துக் கொள்வோம்.

இப்புதிய ஆண்டில் கல்வித்துறையில் நாம் மிகுந்த உயர்வு காண திடம் கொள்ளவேண்டும். அறிஞர்கள் அன்புசால் மாணவர்கள் கூட்டு இணைப்பால் குறைவின்றி நிறைவு காணலாம். கல்வி வழங்குபவரைக் கடவுளாக மதித்து உயர்நிலை பெற்றிடுவோம் என்ற உறுதியினை ஒவ்வொரு மாணவனும் தனதாக்கிச் செயற்படவேண்டும். கற்க வரும் ஒவ்வொரு மாணவனையும் உயர்த்தவேண்டும் என்ற உயர் நோக்குடனேயே கல்விச் சாலைகளும் கற்றோர் உலகமும் ஆவலுடன் காத்திருக்கின்றன. எனவே, இறையாசியோடு யாவரும் இணைந்து, இசைபட வாழ இலட்சிய சிந்தனைகளோடு இனிய புத்தாண்டை இன்பமாய் வரவேற்போம்.

நீடித்த சமாதானத்துக்கு உதவ மலரும் புத்தாண்டு வித்திடட்டும்

ஆனந்தசங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.1

ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு நீடித்த சமாதானத்துக்கு உதவ மலரும் புத்தாண்டு வித்திடட்டும் - இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் உள்ளதாவது:-

ஆளும் தரப்பினரும் எதிர்த் தரப்பினரும் மலரும் புத்தாண்டில், ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து சமாதானத்துக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

நான் பெரிது, நீ பெரிது என்று எண்ணாமல் நம் நாடும் நாட்டு மக்களும் பெரிது என்ற ஒரே குறிக்கோளுடன் செயற்படவேண்டும்.

அத்தகைய மனோநிலையை இந்தப் புத்தாண்டு அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்த ஆண்டில் எமது மக்களின் மனதில் புதிய உத்வேகம் பெருகட்டும். இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தமது சொந்த இருப்பிடங்களில் நிம்மதியாக வாழ நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவோம்.

மலரும் புத்தாண்டில் ஜனநாயக சோசலிச சமதர்ம சமுதாயம் உருவாக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம் - என்று அதில் உள்ளது. (மஜ)

நாளை

மார்கழி 18
வெள்ளிக்கிழமை
(02. 01. 2004)
திதி : தசமி
மு.ப. 11.56 வரை
நட்சத்திரம்: பரணி
முழுநாளும்
எமகண்டம்: 6.30 - 8.00
இராகுகாலம்: 11.00 - 12.30
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

வாழ்வில் வரும் கஷ்டங்கள் கண்டு கலங்காதே சங்கடங்களை சந்தர்ப்பங்களாக மாற்றிக்கொள்.

தர்மம் வெற்றி காணும் ஆண்டாக மலரும் புத்தாண்டு அமையட்டும்

குமரகுருபரன் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.1

தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றில் தர்மம் வெற்றி காணும் ஆண்டாக மலரும் புத்தாண்டு அமையட்டும் - இவ்வாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் பொதுச்செயலாளர் கலாநிதி நா.குமரகுருபரன் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதார, சமூகரீதியில் தமிழினம் செழித்தோங்கும் ஆண்டாக இப்புத்தாண்டு அமையட்டும். அதற்கு எல்லாம் வல்ல எல்லோருக்கும் பொதுவான இறைவன் அருள் புரிய வாழ்த்துகிறேன் - என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ம-ஜ)

தமிழர்கள் இணைந்து செயற்பட பிறக்கும் புத்தாண்டு வழிசமைக்கட்டும்

கூ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி வாழ்த்து

தமிழர்கள் தொடர்ச்சியாக இணைந்து செயற்பட பிறக்கின்ற புத்தாண்டு வழிசமைக்கட்டும். இவ்வாறு சமூகங்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

நீண்டநாள் எதிர்பார்ப்புகளுடன் ஆரம்பமாகிய 2003ஆம் ஆண்டு முழுமையாக தமிழர்களின் திருப்தியை பூர்த்தி செய்யவில்லை. ஆயினும், பல்வேறுபட்ட வரலாற்றுத் தடங்களைப் பதித்தே சென்றுள்ளது. இதில் முதன்மையானதும் முன்னேற்றகரமானதுமாக இருப்பது விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தீர்வுக்கான முன்மொழிவுகள் ஆகும்.

கடந்த 20வருட காலத்தில் யுத்தம் அற்ற ஆண்டாக 2003ஆம் ஆண்டு கழிந்துள்ளது என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமே!

இருந்தாலும் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள், மக்கள் மத்தியில் அச்சத்தையும் நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

போர் முனையில் வீரத்தைக் காட்டிய தமிழர்கள், இராஜதந்திர ரீதியிலும் தமது ஆளுமைப் புலத்தைக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே இராஜதந்திர ரீதியில் வெற்றிபெற முடியும். அதற்காக நம்பிக்கையுடன் செயற்படுவோம். இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். என்றுள்ளது. (ம-ஜ)

தமிழர் வாழ்வியலில் பனை

தமிழ் மக்களின் வாழ்வியலை நன்கு அறிய உதவும் சான்றுகளான இலக்கியம், இலக்கணம், நாட்டார் இலக்கியம் முதலானவற்றில் பனை பற்றியும், பனம் பண்டங்கள் பற்றியும் பலசெய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

தொல்காப்பியம் குறிப்பிடும் முதல் கரு, உருப்பொருள் பகுப்பிலே முதல் என்பது புவியியல் பகுதியையும், கரு என்பது இப்புவியியலின் அடியாக வரும் பொருளியலின் பெரும் பகுதியையும், பண்பாட்டையும் கொண்டிருப்பதாகக் கருதலாம். முதலும் பொருளும் உரிப்பொருளாகிய வாழ்க்கையைத் தீர்மானிக்கும் காரணிகளாக இருத்தலை சங்ககால இலக்கியங்களில் காணலாம்.

முதல் என்பது நிலம் கரு என்பது அந்த நிலத்திலே இருக்கின்ற தாவரங்களும் அவற்றோடு சேர்ந்த வழிபாட்டு மரபுகளுமாக இவை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் தமிழ்மக்களின் வாழ்வியலை தீர்மானித்தன என்பதற்குச் சங்ககால இலக்கியங்களில் பலசான்றுகள் உள்ளன. தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த பிரதேசங்களிலே தாமாகவே வளர்ந்து பயன்தரும் ஒரு தாவரமாகப் பனை விளங்கியது.

பனையின் பரிணாம நாமங்களாக பெண்ணை, தாலம், கற்பகதரு என்பவற்றை கூறுவர். தாலத்தின் ஓலையினால் இழைத்து அணிந்தமையால் மங்கல நாணுக்கு தாலி என்ற பெயர் ஏற்பட்டது.

தமிழ்மக்களுடைய வாழ்வியலிலே ஓலைகளினால் இலைகளினால் ஆபரணங்கள் செய்து அணிவது ஆரம்ப கால வழக்காக இருந்தது. இன்றும் கூட காதில் அணிகின்ற தோடு என்ற ஆபரணத்தை காதோலை என்று கூறும் வழக்கம் உள்ளது.

இலக்கியத்தில் பனை

சங்ககாலம் முதல் சமகாலம் வரை ஏதோ ஒரு வகையிலே பனையும் பனம் பண்டங்களும் தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

சங்க இலக்கியங்களிலே பனை, பெண்ணை என்ற இருசொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பனை மரங்களும் அதன் பொருள்களும் மனித வாழ்வுக்கு பயன்பட்டுள்ளன. அவை ஓலை, மட்டை, நுங்கு, பனம்பழம், கள், பதநீர், பனாட்டு, ஓடியல், கிழங்கு என பண்பாட்டு பொருள்கள், பண்டங்கள் விரிந்து செல்லும்.

ஒரு காலத்திலே தமிழ்மக்களின் உச்சப்பயன்பாட்டுத் தாவரமாக பனை விளங்கியது.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்கணக்கு போன்ற நூல்கள் மற்றும் காவியங்கள், சிற்றிலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் என்பவற்றில் பனை பற்றிய செய்திகள் நேரடியாகவும் உவமைகளாகவும் கூறப்பட்டுள்ளன.

பனையின் மட்டையைப் பனைமடல் என இலக்கியம் கூறும். பழங்காலத்திலே காதலை வெளிப்படுத்த - ஊரறியச் செய்ய - பனைமட்டையாலே குதிரைபோல் செய்து அதிலே தலைவன் ஏறி கொடியையும் பிடித்துக் கொண்டு வீதி வலம் வருவது ஒரு வழக்கமாக இருந்தது. அதனை மடலேறுதல் என்று அகத்திணையாளர் கூறுவர்.

கல்வி வளர்ச்சியில

எமது கல்வி வளர்ச்சியிலே பனை போலை மிகமுக்கியத்துவம் உடையதாக இருந்தது. பனைபோலையால செய்யப்பட்ட ஏடு ஓலை என்ற பெயரால் வழங்கிற்று. கிராமங்களிலே ஓலை என்பதைப் பொதுவாக சாதக போலை என்றும் சாதகக் குறிப்பை சாதகஓலை என்றும் அழைக்கின்றனர். கடதாசி பயன்பாட்டுக்கு வரமுன் பனை ஓலையே எழுதுவதற்குரிய சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறே தூதோலை என்றும், காவோலை என்றும் செயற்பாடுகள், நடப்பாடுகள் தமிழ் இலக்கியத்திலே நிறையக் காணப்படுகின்றன.

"ஆவீன மழைபொழிய இல்லம் வீழ....

சாவோலை கொண்டொருவன் எதிரே செல்ல..." எனக் குறிப்பிடப்படுகிறது. மரணச் செய்தியை ஒருவன் கொண்டு எதிரே செல்கின்றான் என்பதை இப்பாடல் மூலம் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

இன்னொரு இடத்திலே, திருவேங்கைத்திருமுகத்திலே - வேடுவன் வீட்டுப் பெண் கேட்டு அரசன் தூது அனுப்புகின்றான் அதனைக் கடிதாக - ஓலை மூலம் கொடுத்துள்ளான்.

"நீ கொண்டு வந்த ஓலையை காற்றிலே உருட்டி விடு" என்று சொல்கின்ற தன்மையை அங்கே பார்க்கின்றோம்.

குறுந்தொகையிலே, பனங்கூடை பற்றி குறிப்பிடப்படுகின்றது. பல்வேறு பொருள்களை வைத்து மூடப்பட்ட கூரை என இதனைக் குறிக்கின்றார்கள்.

உணவுப் பொருள்களை கூடைகளில் வைத்து மூடிக்கொண்டு செல்லும் பழக்கம் இன்றுவரை இருந்து வருகிறது. கூடை என்பதை 'பச்சைக் குடலை' என்றும் கூறுவர். இன்று குடலை என்ற சொல் இறைச்சியை எடுத்துச் செல்லும் பொருளில் மட்டும் நின்று விடுகின்றது. 30-40 வருடங்களுக்கு முன் பூசை, புண்ணிய கருமங்களுக்கு ஓலையை வெட்டி குடலையாகப் பின்னி பொருள்களை அதில் வைத்து எடுத்துச் சென்றுள்ளார்கள்.

நவாலி சோமசுந்தரப் புலவர் எழுதிய 'ஆடு கதறியது' என்ற பாடலிலே -

"உன்தன் தலை அரிந்து ஓலைக் குடலைகட்டி

கொண்டு கொண்டு விற்றனரோ, தின்று பசி ஆறினரோ"

என குடலைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

புறநானூற்றிலே உண்கலம், பசுங்குடை, பனங்குடை என்ற பொருளில் இது கூறப்படுகின்றது. நச்சினார்க்கினியர் ஓரிடத்திலே "இருப்பனங் குடையின்" என்ற தொடரில் பெரிய பனை ஓலையால் செய்த குடை என விபரிக்கின்றார்.

சில காலத்துக்கு முன் பனை ஓலையிலே உண்கலம் செய்து உண்பதைக்கண்டிருக்கிறோம். உண்கலத்தை 'தட்டுவம்' என்றும் கூறுவர். தட்டுவம் என்ற சொல் சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றது.

புறநானூற்றிலே, 33.ஆம் செய்யுளில் மாற்றரசை புரிந்த வட்டி என்ற சொற்றொடர் காணப்படுகிறது. வட்டி என்பது பெட்டி, கடகம் என்பவற்றைக் குறிக்கும். ஓலையினுடைய பயன்பாட்டிலே வருகின்ற பெட்டியிலே, கரகங்கள் உள்ளன. குஞ்சுப் பெட்டி, கடகப் பெட்டி, மூடல் பெட்டி, கொட்டப் பெட்டி, நீற்றுப் பெட்டி என இவை விரிந்து செல்லும்.

சூழ் குடிக்க, கஞ்சி குடிக்க பனை முகிள் உபயோகப்படுத்தப்பட்டதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

பெண்ணைப்பிழி

பெண்ணைப்பிழி என்ற சொற்றொடர் பனங்களைக் குறிக்கும். கள் அந்தக் காலத்தில் இருந்தே போதைப் பொருளாக - வெறிப்பொருளாகக் குறிக்கப்படுகின்றது.

சங்ககாலப் புலவர் முதல் பாரதியார் வரை, கள் தமிழர் வாழ்வில் முக்கியமான ஒரு இடத்தைப் பெற்றிருக்கின்றது.

சங்க இலக்கியங்களுக்குப் பிற்பாடு பனையின் பல்வேறு மட்டங்களை விதந்து பாடிய புலவர்கள் கள்ளை மட்டும் விதந்து பாடவில்லை. இகழ்ந்து பாடத் தொடங்கினர்.

திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார், நீதிநூல்கள், காவியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவற்றில் பனை உவமையாக பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்து இலக்கியங்களில்....

மேலைப்புலத்தவரின் வருகையால் ஈழத்திலே - யாழ்ப்பாணத்திலே வாழும் மக்களின் வாழ்வியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நீண்டநாள் வழக்கில் இருந்த உணவு, உடை, உறைவிடப் பழக்க வழக்கங்கள் மறையத் தொடங்கின. பனையின் பயன்பாட்டைக் கைவிடும் சமுதாயப் போக்கினைக் கண்ட அக்காலப் புலவர்கள், பனையின் பொருளாதார விளைவை விளக்கும் பல வகைப் பாடல்களைப் பாடினார்கள்.

அக்கவேலி காசிநாதப்புலவர் முதல் இன்றைய புலவர் வரை பனையின் பயன்பாட்டை விதந்து பாடி வருகின்றனர்.

பனையைப் பாடு பொருளாகவும், பனைப் பண்டங்களை அதன் பாகங்களாகவும் கொண்டு ஒரு புராணமே பாடப்பட்டுள்ளது.

20.ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோமசுந்தரப் புலவர் "இலங்கை வளமும் தலவிலாசமும்" என்ற பனையின் பயன்பாட்டை விளக்கும் நூலை எழுதி உள்ளார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் நினைவுநிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா ஆற்றிய பேருரையின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.

தொகுப்பு:
வி.பி.சர்மா
வலிதெற்த செய்தியாளர்

முதலியார் பொன்னம்பலம், "பனை நூறு" என்ற நூலை எழுதி உள்ளார். மேலைப்புலத்தவர் வருகையால் பனையின் பயன்பாடு குன்றுவதைக் கண்டு, வருந்தி 'பனைநூறு' என்ற நூல் ஒரு ஞானத்தீயாக அமையும் என அவர் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணத்திலே பனையின் மகத்துவத்தைப் புலப்படுத்தும் வகையில் சாம்.வீ.தம்பு என்பவர் 'பனை ராசன் நாடகம்' என்ற நூலை 1938 ஆம் ஆண்டிலே அரங்கேற்றியுள்ளார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய காவிரியாற்றுப்படை நூலில் பனை பற்றி விஸ்தரணமாகவே எழுதி உள்ளார். அவர் எழுதிய 'ஈழத்து வாழ்வும் வளமும்' என்ற நூலிலே பனையை 'கற்பகதரு' எனக் குறிப்பிடுகிறார்.

ஐந்து வாழ்வோடு இணைந்த பனையின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள அக்காலப் பத்திரிகைகளும் உதவியுள்ளன.

செங்கையாழியானின் "முற்றத்து ஒற்றைப் பனை" நாவல், இலங்கையர் கோனின் "வெள்ளிப்பாதரம்" கவிதை என்பனவற்றிலும் யாழ்ப்பாணப் பண்பாட்டின் குறியீடாக பனை விளங்குவதைக் காணலாம்.

நாட்டார் வழக்கில்..

ஒரு நாட்டின் - மக்களின் - வாழ்வியலின் மூலங்களை எலும்பும் சதையுமாக, உயிரும் மூச்சுமாக பார்க்கின்ற ஓர் இடம் நாட்டார் வழக்கு.

புறநெறி வழக்குப் பாடல்களில் மட்டுமன்றி நாட்டார் பாடல்களிலேயே பனை பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. பழமொழி, விடுகதை, நொடி, நாட்டுப் பாடல் என்பவற்றில் எல்லாம் பனையின் மகத்துவம் பேசப்படுகின்றது. பனையின் பாகங்களை மருத்துவர்களும் பயன்படுத்தினார்கள் என பேராசிரியர் கைலாசபதி "ஈழத்து இலக்கிய முன்னோடிகள்" என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

மக்கள் கூட்டத்தின் வெளிப்பாடாக வரும் பழமொழிகளிலே பனை பிரதான இடத்தைப் பெறுகிறது.

பனை பற்றி எமது பிரதேசத்திலே வழங்குகின்ற சில பழமொழிகள் இவை.

★ காகம் இருக்கப் பனம் பழம் விழுந்தது போல.....

★ பனை நிழலும் பரத்தையர் உறவும் போல.....

★ பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல.....

★ காவோலை விழ குருத்தோலை சிரித்தது போல...

★ பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.

★ குருவி கழுத்திலே பனம் பழம் கட்டியது போல....

இப்பழமொழிகளை விட நொடிகள், விடுகதைகள் என்பனவும் பனையைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

★ தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான் அது என்ன? (பனை)

★ தோ அண்ணா உயர்ந்த அண்ணா தோழிலே என்ன தொண்ணூறு முட்டை அது என்ன? (பனை)

இவ்வாறு பலவற்றைக் குறிப்பிடலாம்.

ஒப்பாரி பாடல்களிலேயும் பனை முக்கிய இடம்பெறுகிறது. பல சகோதரங்களுடன் பிறந்த ஒரு பெண் தனது கணவன் இறந்த பொழுது பின்வருமாறு ஒப்பாரி கூறி அழுகிறாள்.

"பத்துப் பனைத் தோப்பில் என் ராசாவே -

இப்பநான் பட்டபனை ஆகினனே"

" நான் ஒற்றைப்பனை யானேனே என்ராசாவே -

நான் ஒரு மரத்துக் கொம்மானேனே"

தான் தனித்துப் போய் விட்டதாக ஒப்பாரி மூலம் உணர்த்துகிறாள் அவள்.

பலவகையான பயன்தரும் பனை மரத்தை பலபெயர் சூட்டி அழைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. முடத்தி, செண்பகவரியன், குரும்பை கொட்டி என பெயர்களிட்டு அழைக்கும் வழக்கு குறிப்பாக யாழ்ப்பாண மக்களிடையே இருந்து வந்துள்ளது.

இலக்கியங்களிலே பனை பற்றி நகைச்சுவையாகவும் பேசப்பட்டுள்ளது. கள்ளுக்குடித்த ஒருவனைப் பார்த்து "நீ கள்ளுக்குடித்திருக்கிறாய் உனக்கு வைத்தியம் சரிவராது. இன்னமும் போய் கள்ளையே குடி என்ற பொருள்பட நகைச் சுவையாக ஒரு வைத்தியர் பின்வருமாறு கூறுகிறான்.

"விண்டொரு குழவிதள்ளி, வகை வகை எலுமிச்சம் சேர்த்து கொண்டொரு கசாயம் குடித்தால் கண்டநோய் எல்லாம் மாறும்"

இவ்வாறு பனை தமிழ் மக்களுடைய வாழ்வியலிலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே விளங்கி வந்ததை எம்மால் அவதானிக்க முடிகிறது.

☆

மணல் ஏற்றச் சென்ற இளைஞர்கள் மாயம்!

வவுனியா,ஜன.1

வவுனியா பம்பை மடுப்பகுதிக்கு மணல் ஏற்றச்சென்ற இரண்டு இளைஞர்களைக் காணவில்லை என்று விடுதலைப் புலிகளின் வவுனியா நகரப் பணிமனையில் முறையிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு இளைஞர்களும் கடந்த திங்கட்கிழமை மணல் ஏற்றச் சென்றனர். அவர்கள் சென்ற 'லான்ட் மாஸ்ரர்' வாகனம் அநாதரவான நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இந்த இரு இளைஞர்களும் எங்கு சென்றனர் என்பது தெரியவில்லை.

(ஒ-164)

கச்சாயில் உபதபால் அதிபர் நியமனத்துக்கு பாலாவி கிராம முன்னேற்றச் சங்கம் ஆட்சேபம்

விதிகளைச் சீராகக் கடைப்பிடிக்க வலியுறுத்து

வலி.வடக்கு,ஜன.1

கச்சாய் உபதபாலகத்திற்கு உபதபால் அதிபர் நியமனம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து பாலாவி கிராம முன்னேற்றச் சங்கம் வடபிராந்திய அஞ்சல் அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

கச்சாய்ப் பகுதியைச் சேர்ந்த பல படித்த இளைஞர்களும் யுவதிகளும் வேலையற்று இருக்கும் நிலையில் உரிய முறையில் விண்ணப்பங்களைக் கோராமலும் சரியான முறையில் நேர்முகப் பரீட்சை நடத்தாமலும் செல்வாக்கின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளமை பிழையானது என மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை உரிய முறையில் கோரி சரியான ஒழுங்கின் பிரகாரம் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருந்த உபதபால் அதிபர், பதவி உயர்வு பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இங்கு வெற்றிடம் ஏற்பட்டது. அந்த இடத்துக்கு ஏற்கனவே வடமராட்சியைச் சேர்ந்த ஒருவர் நியமனம் செய்யப்பட்டார். மக்கள் செய்த ஆட்சேபனையைத் தொடர்ந்து அந்த நியமனம் ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளுக்கு நீர்த்தாங்கிகள்

வடமராட்சிக்கல்வி வலயம் பிரதேசத்திலுள்ள பதினொரு பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் பொருட்டு 'யுனிசெவ்' நிறுவனம் நீர்த்தாங்கிகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

பதினொரு பாடசாலைகளுக்கும் தலா 1லட்சத்துப் 10ஆயிரம் ரூபா செலவில் தண்ணீர்த்தாங்கிகள் கட்டிக் கொடுக்கப்பட உள்ளன. பத்துப் பாடசாலைகளுக்கு மின்சாரத்தில் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரங்களும், மின்சார வசதியற்ற வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைக்கு 35ஆயிரம் ரூபா பெறுமதியான எரிபொருளில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட உள்ளன. (ஒ-118)

2004 சுபிட்சத்தைத் தருமா?

தமிழ் மக்களின் மனங்களில் பல திருப்பங்களையும் திடீர் அதிர்ச்சிகளையும் ஏற்படுத்தி அவர்களை

அவநம்பிக்கை கொள்ளவைத்து விடை பெறுகிறது 2003 ஆம் ஆண்டு.

புரிந்துணர்வு உடன்பாட்டின் மூலம தமது அரசியல் சமய, சமூக, பொருளாதார, கலாசார வளங்களை மேம்படுத்தி மண்ணை ஆக்கிரமித்த கொடிய போரின் வடுக்களில் இருந்து தப்பிக் கொள்ள முயன்றார்கள் தமிழ் மக்கள். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சகல வழிகளிலும் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் அவர்களின் சிந்தனை. உரியநேரத்தில நாட்டின் எப்பகுதிக்கும் சுதந்திரமாகச் சென்று தமது தேவைகளை நிறைவேற்றி மீண்டும் சொந்த இடம் திரும்புவதற்கான வசதி, தொழில் வாய்ப்புக்களை பெறுவதற்கான வசதி, சந்தை வாய்ப்புக்களைத் தேடுவதற்கான வசதி, தமது இல்லிடங்களையும், பொருளாதார நிலைமைகளையும் கட்டியெழுப்புவதற்கான வசதி எனப் பல தரப்பட்ட நன்மைகளை மக்கள் கடந்த ஆண்டில் பெற்றுக்கொண்டார்கள். வடபகுதித் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சுமார் 25 வருடங்களுக்குப் பின்னர் கிடைத்த ஒரு வரப்பிரசாதமான ஆண்டு அது.

எனினும், கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் நடந்த சிலசம்பவங்களினால் எல்லாம் தவிடுபொடியாகின.

அரசு - புலிகள் தரப்புகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதானப்பேச்சுகள் முடிவுகளை எட்டாமலேயே முறிவடைந்தமை, தெற்கில் பேரினவாதக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியின் உச்சக்கட்டமாக ஜனாதிபதி பிரதமரின் அரசிடமிருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறித்தெடுத்தமை, இவற்றின் விளைவாக சமாதான முனனெடுப்புக்களை மேற்கொண்டுவந்த நோர்வே சமாதானக்குழு தனது அனுசரணை நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்தியமை என்பவைதான் கடந்த ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற அந்தச் சோகச் சம்பவங்கள்.

இவ்வாறாகக் கடந்த ஆண்டு தனது காரியத்தைக் கச்சிதமாக முடித்துவிட்டு விடைபெற்றுவிட்டது. இன்று புதிய தேர் ஆண்டு பிறக்கிறது. இவ்வாண்டுப் பரிசாக எமக்கு எதைத்தரப்போகிறது என்பதுதான் எல்லோரதும் எண்ணம்

கடந்த இருபது வருடகாலமாக இடம்பெற்றுள்ள உள்நாட்டு யுத்தத்தினால் அடியுண்டு - அல்லற்பட்டு- அகதியாகி மீண்டும் ஒருபுதிய வாழ்வுக்குக் காலடிஎடுத்து வைத்துள்ளார்கள் எமது மக்கள். அவர்கள் எல்லோரதும் ஏகோபித்த நோக்கம் நிரந்தர சமாதானம்தான். அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. அதேபோல் நாட்டில் உள்ள அரசியல் அதிகாரப் போட்டியாளர்களையும் இனவாத பூமியின் புத்திரர்களையும் தவிர ஏனையோர் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி சமாதானத்தை விரும்புகிறார்கள். அனைத்து இன மக்களும தமக்கே உரித்தான கலாசார விழுமியங்களுடனும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழவேண்டுமென்பதே சமாதான விரும்பிகளின் கருத்து.

பிறக்கும் புத்தாண்டில் சமாதான முயற்சிகளும் புத்துயிர்பெறுமா?, அரசியல் தலைவர்கள் தமக்கிடையேயான முரண்பாடுகளுக்குத் தீர்வுகண்டு சமாதான நடவடிக்கைகளைத் தொடர்வார்களா? அல்லது அவர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை எவ்வாறு அமையப் போகிறது? நாட்டில் அதிகாரபலமுள்ள அரசு எவ்வாறு உருவாகப்போகிறது? எனப்பல கேள்விகள இப்போது எழுந்துள்ளன.

நாட்டை விலை பேசி விற்கிறார்கள், தனிநாடு உருவாக வழிவகுக்கிறார்கள் என்று காலங்காலமாக ஒரே மந்திரத்தை திரும்பத்திரும்பக் கூறிவரும் இனவாத சக்திகள் இனியாவது தமது மந்திரத்தை மாற்றியமைத்து மக்களின் சுதந்திரமான வாழ்க்கையைக் கருத்திற்கொள்ள வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக மனுத்தாக்கல் செய்து சமாதான முயற்சிகளைத் திசைதிருப்ப முயலும் பௌத்த மகாசங்கங்கள் எவருக்கும் தீங்கு இழைக்கக்கூடாதென்ற புத்துபிரானின கொள்கையை நினைவில் கொண்டு புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். காலங்காலமாக ஆட்சிப் பீடமேறும் அரசாங்கங்கள் தமது பதவியாசைகளைக் கைவிட்டு இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற வெளிவேடமற்ற எண்ணத்துடன் உழைக்க வேண்டும். இவையெல்லாம் நடந்தால் சமாதானம கிடைத்துவிட்டது என்பதுதான் அர்த்தம் தமிழ்மக்களும் இதைத்தான் விரும்புகிறார்கள்.

பிறக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் உலகநாடுகள் பல தம்மை புதிய பாதைக்குள் நுழைத்துக்கொள்கின்றன. வருடாவருடம் புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும், ஆராய்ச்சிகளையும் நடத்தி தமது நாட்டை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்வதற்கு வழி சமைக்கின்றன. ஆனால், எமது நாடு மட்டும் உள்நாட்டுப் பிரச்சினையையே தீர்த்துக்கொள்ள முடியாது திணறுகிறது. இதனால், பொருளாதார, அபிவிருத்திப் பாதையில் முன்னேற முடியாது தவிக்கிறது.

இவையனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்து அனைத்து இனமக்களும் ஒன்றுதிரண்டு நாட்டை முன்னேற்றுவதற்கான காலம் எப்போது கனியும்?. உள்நாட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட்டு அனைத்து இன மக்களும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கேற்ற சூழல் உருவாக்கப்பட்டாலே இது சாத்தியமாகும்.

எனவே, பிறக்கும் புத்தாண்டில் ஒரு சமாதான நல்லெண்ணசூழல் உருவாகி தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் தொடரப்பட்டு அதன்

தேவா

மூலம் ஒரு நிரந்தரத்தீர்வு கிடைக்க வேண்டும். இதன்மூலம் நாட்டில் சகல இனமக்களும் இன, மத, மொழி வேறுபாடுகளின்றி ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ்வதற்கேற்ற சூழல் உருவாகும்.

மலரும் புத்தாண்டு அனைவருக்கும் புதுவாழ்வை அளிப்பதாக அமையவேண்டும். நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க வேண்டும். ★

எமது காத்திருப்பு...

அவர் தமது பிறந்த தினத்தில்
அகிலத்துதின் விடுதலையைத் தருபவர்
அவர் எமது தேசிய விடுதலைக்கு
உயிர்ப்புச் சக்தியாகி பற்றுறுதியின் ஒளியைப் பாய்ச்சட்டும்.

விடுதலை நாள்கள் நெருங்கும்
இறை விடுதலை வீரரை யோசப்பும், மரியாவும் தாங்கி நின்றனர்
தமது சொந்த ஊருக்கு பற்றுறுதியோடு நடந்தனர்
ஆள்பவரின் கட்டளைக்கு பணிந்தனர். ஆள்பவரின் இடத்தில்
அவர்களுக்கு இடம் இல்லை.

யோசப்பும், மரியாவும் இருண்ட தனிமையாக ஒதுங்கினர்
நம்பிக்கையோடு பல கதவுகளை தட்டினர் ஒரு சிலரே திறந்தனர்
இதயக்கதவுகள் மூடிக்கொண்டன தூரப்போக விரட்டினர்
கடவுள் மனிதனைத் தேடி வந்தார்
மனிதரின் இதயங்கள் திறக்கவில்லை.

அவர்களை யோசப்பும், மரியாவும் தமது நாட்டின் குடிமக்கள் என எண்ணினர்
அதிகாரமிக்கவர்கள் இடத்தில் அவர்களுக்கு இடம் இல்லை
சத்திரத்தில் இடம் இல்லை
அவர்களோ ஒதுக்கப்பட்டனர் சீசர் அரசரின் கணக்கில் அவர்கள் இல்லை.

பொறுமையோடும் பற்றுறுதியோடும் காத்திருந்தனர்
மனித சூழலின் வசதி வளம் இல்லை
யோசப்பு உருவாக்கிய தளத்தில்
மரியா விடுதலை வீரனை கொண்டு வந்தார்
இடையர் பணிந்தனர், தூதர் பாடினர்; நன்மனம் படைத்த அனைவருக்கும் அமைதி.

விடுதலையின் நாள்கள் அருகில் இல்லை
சுதந்திர பயணத்தில் நீண்ட தூரம்
நீதியையும் சுதந்திரத்தையும் பகிரப் பணிந்தோம்
நன்மைத் தனத்திலும் சமத்தவத்திலும்
ஆளுபவர் யாப்பிலும் நம்பிக்கை வைத்தோம்.

ஜனநாயகத்தினதும் மனித உரிமைகளின் கதவுகளைத் தட்டினோம்
பலவான்களை கெஞ்சி மன்றாடினோம்
அவர்கள் எம்மீது பலத்தை பிரயோகித்தனர்; பலமுள்ளவர்களை பணிந்து கேட்டோம்
ஒடுக்குவோருக்கு உதவினர்
அறிவையும், ஒழுக்கவியலையும் தேடினோம்; அவைகளைக் காணவில்லை.

உரிமையை தேடுவது இறைவன் தந்த உரிமை எமக்கும் எமது மண்ணுக்கும்
பலமுள்ளவர்கள் தாம்வாழ இதை ஆவணமாக்கினர்; கட்டளையிட்டனர்
எமது துயரும் தேவை மனிதத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம்
இன்றும் அதனால் அடக்கப் பார்த்தனர்

யோசப்பு, மரியா வழி நம்பிக்கையையும் விடுதலையையும் காவி வந்தோம்
நாம் நடப்போம் கதவுகளைத் தட்டுவோம்
தமிழர் கருவறையில் எமது கரு; நீதியும் உண்மையும் அக்கரு
விடுதலைக் கடவுள் எமது கருவறையில் பிறப்பார்

யோசப்பு, மரியா விடுதலைக்கு காத்திருந்தனர்
எமது காத்திருப்பு – பணிவின் சோர்வல்ல பலத்தின் வீரியமுமல்ல
ஆனால்... ஈடுபாடு கொண்ட எதிர்நோக்கின் கீற்றுக்கள்
விரைவில் உண்மைகள் உதயமாகும்
நீதி ஆறாய் ஓடும், அமைதி தளிர்க்கும்.

எமது நாட்டிலும் புலம்பெயர் அன்புக்குரியவர்களுக்கும்
நிண்டு நடக்க பலத்திற்கும் பற்றுதிக்கும் வாழ்த்துக்கள்

ஜேர்மனியில் இருந்து
வண.பிதா எஸ்.ஜே.இம்மானுவேல்.

சங்கையாய் சமாதான விளக்கேந்தி வருகவே!

பொங்கு தமிழ்ப் புனலாடி பூதலம் போற்றும்
உயர் குலப் பண்பாம்
சிங்காரப் பட்டுடுத்து சீர்பேசும் ஒழுக்கமாம்
மணியாரம் புனைந்து
பூங்காற்றிலாடி பூபாளம் பாடி வெண் முத்துக் குடை பிடித்து
சங்கையாய் சமாதான விளக்கேந்தியிங்கே
இரண்டாயிரத்தி நான்கே வா!

ஓடுமேருவியாய் ஒளிரும் குளிர் நிலவாய்
வீசமிளந் தென்றலாய்
ஆடும் மென் கொடியாய் அழகு தமிழாய் கோல
மயிலாய் கொஞ்சும் கிளியாய்
பாடும் குயிலாய் ஆவின் பாலாய் தேசம்
எங்கும் ஆனந்தம் பொங்க
தேடும் நிம்மதி தேன் மழையாய் பொழிய
புத்தாண்டே புலர்ந்து வா!

இரண்டாயிரத்தி நான்கே ஈங்கு நீ வருக!
இரத்தின மகுடம் புனைந்து இரதமேறி வருக!
இரந்துண்ணுமிழி நிலையை யொழித்து வருக!
இரத்தவெறி பிடித்தாரினத்தை அழித்து வருக!
பரந்த உலகில் பகையும் போரும் விலக்கி வருக!
மரம் போலும் மனங்களில் அறமூட்டி வருக!
சுரந்தூறும் அன்பு நெறியை சுமந்து வருக!
சிரம் பணிந்தேற்றினோம் சீர்கொண்டு வருகவே!

கந்த.தியாகராசா

இனிய புத்தாண்டு வந்ததடி!

வந்தது புத்தாண்டு வந்ததெடி - எம்
வையத்தை வாழ்விக்க வந்ததடி!
சிந்தை சிறப்புற வந்ததடி - நின்று
சிறுமை சிதைத்திட வந்ததடி!

செய்தொழி லூக்கவே வந்ததடி - இனம்
சேர்ந்து சிறப்புற வந்ததடி!
மைவிழி மாதர் மகிழ்ந்திடவே - நல்ல
மாண்பை வளர்த்திட வந்ததடி!

சமத்துவ மோங்கிட வந்ததடி - பாழும்
சாதிகள் நீக்கிட வந்ததடி!
கமழ்ந்தெழில் பூத்துக் குலுங்கிடவே - பாரில்
கயமை களைந்திட வந்ததடி!

வீரம் விளக்கிட வந்ததடி - அதில்
விவேகம் விதைத்திட வந்ததடி!
பாரம் இறக்கிட வந்ததடி - மனப்
பகைமை பறித்திட வந்ததடி!

சுதந்திர தாகம் சுடர்விடவே - வல்ல
சூட்சுமம் ஈந்திட வந்ததடி!
இதம்பெறவாழ்வி னடித் தளமாய் - இன்று
இனியபுத் தாண்டிங்கு வந்ததடி!

வி.சி. குஞ்சிதபாதம்.

கண்ணீர் அஞ்சலி

எமது பீட சபையின் படித்த சமூகத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டு முன்னாள் பிரதிநிதியாக இருந்தவரான

திரு.க.பாலசுப்பிரமணியம்

(வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி)

அவர்களின் அன்புத் துணைவியார்

திருமதி லோகநாயகி

அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

(26591) (32-13-17)

-முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 – 07 – 1920

மறைவு 13 – 01 – 2003

அமரர் மாப்பாணர் சரவணமுத்து

எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டி
வளமூட்டி பாரினில் நல்மக்களாய்
எங்களை வாழ வழி வைத்த
அன்புத் தந்தையே! அப்பா!!
எங்களை விட்டுப்பிரிந்து
ஓராண்டு கழிந்த போதும்
தங்கள் நினைவுடன் வாழ்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி.

(26418)(34-13-17-32)

என்றும் நினைவுடன் வாழும்:
மனைவி மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நோர்வேயில் தமிழர் மாயம்: மனைவி முறைப்பாடு

நோர்வேயில் வசித்து வந்த வேளையில் கடந்த 20 ஆம் திகதி காணாமற்போன தனது கணவர் தொடர்பான விவரங்களைப் பெற்றுத் தருமாறு பெண்மணி ஒருவர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிட்டுள்ளார்.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி பரிசான என்பவரே காணாமற்போனவராவார். கடந்த 97 ஆம் ஆண்டில் இருந்து இவர் நோர்வேயில் வசித்து வந்தார். இவர் அவரது அறையில் தங்கியிருந்தவேளை கடந்த 20 ஆம் திகதி காணாமற்போனார் என்று அவரது மைத்துனரால் மனைவிக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே தனது கணவர் தற்பொழுது எங்கு இருக்கிறார் என்ற விவரத்தைப் பெற்றுத் தருமாறு அவரது மனைவியான ரஜினி பரிசான இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியுள்ளார். (ஒ-10)

அமைப்புப் பணிகள் சு.கட்சியில் ஆரம்பம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தொகுதி அமைப்பாளர்களின் பணிகள் எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஜனனதினம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆகும். எனவே, அன்று மாலை 6.00 மணிக்கு போதி பூஜை நடத்தி அமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு தொகுதி அமைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக சு.க. பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார்.

இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம்,ஜன.1

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நலிவுற்றோர் மேம்பாட்டுக்காக நடத்தும் மாபெரும் இன்னிசை விருந்து" இன்று வியாழக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 5:30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கண்ணீர் அஞ்சலி

எமது வங்கியில் கடமையாற்றிய
திருமதி அருந்ததி பகீரதன் அவர்களது அன்புத் தந்தையும்
திரு.ந.பகீரதன் அவர்களது அன்பு மாமனாருமாகிய
சிவஞானம் சண்முகநாதன்
அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய சேமிப்பு வங்கி,
கன்னாகம்

(26588) (32-13-17)

முகாமையாளர், உத்தியோகத்தர்கள்.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 – 08 – 1938

மறைவு 01 – 01 – 2001

திருமதி திலகவதி சிதம்பரநாதன்

திதி : பூர்வ ஷஷ்டி

அம்மா ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உன் நினைவுகள் என்றும் மாறாது!

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(சி-31972)(13-17-32)

கணவர்,பிள்ளைகள்.

அன்புத் தெய்வமகளின் 3ஆம் ஆண்டு இதய அஞ்சலி

எங்கள் பிள்ளை 27 – 10 – 1961

தெய்வப் பிள்ளை 03 – 01 – 2001

திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன்

01~01~2004

அன்பு மகளே,-பாசமலரே, தெய்வமே!
நீர் எங்களை விட்டுப்பிரிந்து மூன்று
ஆண்டுகள் ஆகின்றன. எங்கள் வாழ்வின்
ஒளி விளக்கே! உமது பிரிவு எங்களால்
தாங்க முடியவில்லை! நீர் இல்லாமல் எங்களுக்கு என்ன
சந்தோசம்? என்றும் உமது நினைவில் வாழ்கின்றோம்.

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(26485)(35-17-13-32)

அப்பா, அம்மா
குடும்பத்தினர்

ஈர விழிகளுடன் ஆண்டொன்று...

தோற்றம் 19 – 01 – 1935

மறைவு 01 – 01 – 2003

அமரர் முருகப்பா பழனியப்பன்

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும், தமிழரசுக்கட்சியின் ஆரம்ப கால உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முத்த உறுப்பினரும், நல்லூர் கிராமசபையின் முன்னாள் உபதலைவரும், நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தின் போசகரும், வன்னியசிங்கம் மண்டபத்தின் ஸ்தாபகரும்.)

அண்ணாவின் பாதையிலே
அடியெடுத்த அப்பாவே
கண்ணீரில் மிதந் தின்று
குமுறிடுமே எம் பாவே

ஆழ்கடலில் தரும் பாகி
அலறிடுமே எம் நெஞ்சு
ஏழ் பிறப்பும் உங்களுக்கே!
ஏக்கமுடன் நாமிருப்போம்!

கர்பாமல் இப்பாரில்
தலை நிமிர்ந்து நாம் வாழ
அப்பாவின் அர்ப்பணிப்போ
வல்லவையிலை ஏராளம்!

ஆண்டொன்று கடந்தாலும்
அனை யாது எம் சோகம்!
மீண் டெழுமே எம் நாளும்
பழனியப்பா எனும் நாமம்!

(26271) UTHAYAN Graphics

5/3, ஆடியபாதம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 – 08 – 1917

மறைவு 14 – 01 – 2003

அமரர் மாணிக்கம் நடனசிகாமணி

(ஓய்வு பெற்ற கணக்காளர், ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)

திதி தினம்: 02.01.2004 வெள்ளிக்கிழமை

ஆண்டொன்று சென்றாலும் தங்களைப் பற்றிய அன்பும், பாசமும் உள்ள நினைவுகள் எம்மனதில் நிலவிக் கொண்டேயிருக்கின்றன. தங்கள் தூய ஆத்மா நற்சாந்தி பெற்று இறைவன் திருவடியடைந்து இன்புற்றிருக்க வல்வை முத்து மாரியம்மனை இடைவிடாது வணங்கிநிற்கும்.

"பிருந்தாவனம்"
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(26496)(35-17-13-32)

தங்கள் குடும்பத்தினர்

நெற்பயிருக்கு நீர் போதவில்லை; குடாநாட்டு விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம்,ஜன.1

குடாநாட்டில் உள்ள நெல் வயல்களில் போதியளவு நீர் தேங்கி நிற்காததையடுத்து பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்

கடந்த ஓரிரு மாதங்களாக மழை பெய்தபோதிலும் வயல்களில் போதியளவு மழை வெள்ளம் தேங்கி நிற்கவில்லை. இதனால் நெற் பயிர்களுக்கு தற்போது நீர் தேவைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான வயல்களில் உள்ள நெற்பயிர்களில் தற்போழுது கதிர் தோன்றும் நிலையிலும், கதிர் வெளிவந்த நிலையிலும உள்ளன. இதனால் அவற்றுக்குப் போதியளவு நீர் தேவைப்படுகின்றது. போதியளவு நீர் வயல்களில் தேங்கி நின்றால் மட்டுமே நல்ல நெல் மணிகள் விளையும்.

நீர் இல்லாத காரணத்தினால் கதிர்களைத் தோற்றுவித்த நெற்பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வயல்களில் மூன்று வருடங்களுக்குப் பின்னர் இம்முறைதான் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-10)

வாசகர் திருமுகம்

கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் ஆதங்கம்

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலையின் ஊழியர்களாகிய நாம் எமது தொழிலை இழந்த நிலையில் பெரிதும் கஷ்டப்பட்டுவருகிறோம்.

கடந்தகால யுத்தத்தின் காரணமாக நாம் எமது தொழிலை இழந்தது மட்டுமன்றி எமது தொழிறசாலையையும் இழந்த நிலையில் மிகவும் பாதிப்படைந்துள்ளோம். இதில் தொழில் புரிந்து வந்த அனைவரும் வேறு தொழில் இன்றி வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறோம்.

எமது பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், விடுதலைப்புலிகள் ஆகியோருக்குக் கடந்த ஒன்றரை வருடங்களாக மகஜர்கள் அனுப்பியும் இதுவரையில் எவரும் எமக்கு நல்ல தொரு முடிவைப் பெற்றுத்தரவில்லை.

ஏன் இந்தப் பாரபட்சம்? இதனையிட்டு நாம் பெரிதும் கவலை கொண்டுள்ளோம். இனியாவது எமது பிரச்சினைக்குத் தீர்வுகிட்டுமா?

சேவி கண்ணாடித் தொழிற்சாலை. **பாதிக்கப்பட்டோர் ஊழியர்சங்கம்.**

சுன்னாகம் நகரப் பகுதியில் வாகன நெரிசல் அதிகரிப்பு

ஏ-9 பாதை திறந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் வாகனங்களின் எண்ணிக்கையும் போக்குவரத்து நெரிசலும் அதிகரித்துள்ள நிலையில் சில ஒழுங்கு முறைகளையும், வீதி ஒழுங்கு முறைகளையும் வாகனச் சாரதிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டி உள்ளன். ஆனால், அதிக சனநெருக்கடி மிகுந்ததும் ஒருவழிப் போக்குவரத்துப் பாதை இல்லாததுமான சுன்னாகம் நகரப் பகுதியிலும் சுன்னாகம் சந்தையை அண்டிய பகுதியிலும் வாகனங்களின் வேகம் அதிகரித்துள்ளது. குறிப்பாக தனியார் மினிபஸ்கள், இலங்கை போக்குவரத்துசபை பஸ்கள் போட்டி போட்டு தினமும் சவாரிசெய்வதை அவதானிக்க முடிகிறது.

இவற்றைவிட காலை முதல் மாலை வரை காங்கேசன்துறை வீதியின் இரு பக்கங்களிலும் பல கனரக வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால், பாதசாரிகளும் மோட்டார் சைக்கில் பயணிகளும் பெரும் சிரமத்தையும், விபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டி உள்ளது. இதைவிட சுன்னாகம் நகரப்பகுதியில் சனநெரிசல் மிகுந்த காலை, நண்பகல் நேரங்களில் வாகனங்களின் வேகம் மிகவும் அதிகமாக உள்ளது. சந்தை, தனியார் கல்வி நிலையங்கள், வங்கிகள் போன்றவற்றுக்கு முக்கிய தேவைகளை நிறைவுசெய்வதற்கு நாளாந்தம் வரும் பொதுமக்கள் இந்த வாகனங்களின் அதிக வேகத்தினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த வேண்டியவர்கள் அக்கறை செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ஏழாலை. **யோ.கோணேஸ்.**

வாகன வேகத்தைத் தடுப்பதும் பொலீஸாரின் முக்கிய கடமையே!

கடந்த 19.12.2003 இல் கல்வியங்காட்டில் நடைபெற்ற மினிபஸ் விபத்துக்களுக்கும், பொதுமக்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும், நடைபெற்ற களேபர நிகழ்வுகளுக்கும் நாட்டின் பாதுகாவலர்கள், மக்களின் பாதுகாவலர்கள் என்று கூறக்கூடிய பொலீசாரே பொறுப்பேற்கவேண்டும் என்பது விபத்து நடைபெற்ற இடத்தில் உள்ள மக்கள் ஒவ்வொருவரினதும் உள்ளக் குமுறலகள் ஆகும்.

கல்வியங்காட்டுச் சந்தியிலும், அண்டியபகுதியிலும் சிறியகுழுக்களாகப் பணிபுரியும் பொலீசார் இதுவரை அதிவேகத்துடன், ஒன்றை ஒன்று முந்திச் செல்லும் வாகனங்கள் குறித்து அன்றையதினமோ, அதற்குமுன்போ எத்தனை சாரதிகள் மீது நடவடிக்கை எடுத்ததுள்ளன? பொலீஸார் தமது கடமைகளைச் சரிவரச் செய்வார்களேயானால் 19.12.2003 இல் ஏற்பட்டதும், அதற்குமுன் ஏற்பட்டதுமான விபத்துக்கள் நடைபெற்றிருக்க மாட்டாது.

தற்சமயம் பொலீஸாரின் முக்கிய கடமைகளாக, ஹெல்மெற் இன்றி செல்வதைத்தடுத்தல், இன்சூரன்ஸ், ரக்ஸ் பரிசோதித்தல் மரம் ஏற்றி ஒழுங்கைகள் ஊடாக செல்வதனைப் பிடித்தல், மண் ஏற்றிச்செல்லும் லான்ட்மாஸ்டர் மற்றும் வாகனங்களைப் பிடித்தல் ஆகியன மட்டுமே.

19.12.2003 நடந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள் கொதித்தெழுந்து பொலீஸாருடன் மோதினர். இதனால், ஆத்திரமடைந்த பொலீஸார் யூசனுக்குச் சென்ற சிறுவர்கள், கடைக்குசென்றவர்கள் எல்லோரையும் கைதுசெய்து அடைத்தனர். இது பொலீஸாரின் கையாலாகாத்தனத்தையும், இயலாமையையும் காட்டுகின்றது.

எனவே வருங்காலத்தில் பொலீஸார் சிறப்பாகப் பணிபுரிய மேலதிகாரிகள் வழிகாட்டவேண்டும் என பாதிக்கப்பட்டவன் என்றமுறையில் உதயன் வாசகர் திருமுகத்தினூடாக கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வியங்காடு, **- பாதிக்கப்பட்டவன்.**

வைத்தியசாலையை முழுநாளும் இயக்க நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.1

தற்போது முற்பகல் வேளையில் மட்டும் செயற்பட்டு வரும் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையை முழுநாளும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொளளப்பட்டுள்ளது.

யாழ் சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் இதனைத் தெரிவித்தார்.

இவ்வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்திய அதிகாரி பிற்பகல் தொல்புரம் அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று கடமையாற்றி வருகின்றார். வருடாந்த இடமாற்றத்தில் நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் வைத்திய அதிகாரி தொல்புரம் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் தொல்புரம் வைத்தியசாலைக்கு வந்து கடமையைப் பொறுப்பேற்றதும் தொல்புரம் அரசினர் வைத்தியசாலை முழுநாளும் இயங்கும். இதேவேளை - பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலையும் முழுநாளும் இயங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-135)

புனர்வாழ்வுத்திட்டம் குறித்த கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.1

குடாநாட்டில் புதிய புனர்வாழ்வுத் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனையடுத்து யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் மாநகரசபை அதிகாரிகளுடன் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர் என்று ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்தார்.

மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வுத் திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

அதனடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி அரச அதிபரிடம் கையளிக்கப்படும். இவ்வாறு ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-6)

பொலிகண்டியில் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம்,ஜன.1

பருத்தித்துறை, பொலிகண்டி மேற்கில் சனசமூக நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. கடற்றொழிலாளர் குடும்பங்கள் அதிகம் வசிக்கும் இப்பகுதியில் 5 லட்சம் ரூபா செலவில் இந்த சனசமூக நிலையம் அமைக்கப்படுகின்றது.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ். ஜோசப் தெரிவித்தார். இதற்கான நிதியினை கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் வழங்கியுள்ளது என்றும் -

சனசமூக நிலையத்தின் கட்டடப்பணிகள் அடுத்த மாதம் பூர்த்தியாகும் என்றும் - அவர் தெரிவித்தார். (ஒ-7)

பயிற்சிக் கருத்தரங்கு

வலி.வடக்கு,ஜன.01

யாழ்ப்பாணம் மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ் மாவட்ட விளையாட்டு வீர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் உதவிப்பணிப்பாளர் சிவதுசனாமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விளையாட்டும் முகாமைத்துவமும், விளையாட்டும் தலைமைத்துவமும் என்ற விடயங்கள் சம்பந்தமான விரிவுரைகள் இடம்பெற்றன.

இந்த விரிவுரைகளை யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் இராஜசிங்கம், பயிற்றுவிப்பாளர் கிருபானந்தன், நிமலன், விளையாட்டு உத்தியோகத்தர் நித்தியானந்தன் ஆகியோர் வழங்கினார்கள்

ஏற்கனவே விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக ஒரு தொகுதியினருக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பயிற்சியினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய வாணி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவகக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். தமிழர் ஆசிரிய சங்கத்தின் தீவகக் கிளையின் தலைவர் பொ.அருணகிரிநாதனும் படத்தில் உள்ளார்.

(படம்: மண்டைதீவுச் செய்தியாளர்)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் வே.தர்மரத்தினம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்களும் படத்தில் உள்ளனர்.

(படம்: காரைநகர் செய்தியாளர்)

உலக உணவு தினத்தையொட்டி வலி.கிழக்கு பிரதேச சபையினால் நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளிச் சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்படுவதை படத்தில் காணலாம். (ஐ-7)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் கலந்துகொண்ட அயலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு ஏ.ஜீவேந்திராபோல் மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம்.

Gender-based violence occurs in all societies and is largely unpoliced. Such violence occurs within the home or in the wider community and affects women and girls disproportionately.

CARE SRILANKA

"CARE" in Sri Lanka is actively involved in addressing issues of social marginalisation throughout the country. It implements a diverse portfolio of programs and at Present we are in the process of implementing a Gender Based Violence Project (GBV) in Batticaloa and Trincomalee districts, funded by the Government of Norway.
We are seeking for Gender sensitive men and women with high-level commitment to be part of a dynamic team of development professionals working towards addressing Gender Based Violence issues in Sri Lanka.

Team Leader - Batticaloa

The Team Leader is responsible for field level implementation of the GBV Project, which includes reporting, monitoring, staff management and evaluation of the project in all stages and will report to the Project Director. S/he should ensure desired impact at specific levels as outlined in the project proposal and also be responsible for the relationship management between the various stakeholders such as Local NGOs, Women's Organizations, GOSL, and CBOs. S/he should be able to identify the systematic gaps and issues in the current GBV environment and promote new and innovative approaches to address the issues.

Conceptual skills and hands on experience in Gender and Gender based Violence is critically important for achieving the objectives of this position. Applicants should hold a degree in Social Science with a minimum of three-years Project Management experience.

Project Coordinator - Monitoring and Information - Batticaloa

The **Monitoring and Information - Coordinator** is responsible for overall monitoring and Information Collection in a well organized manner, evaluation and providing timely feedback to the stakeholders on the project activities. S/he should initiate designing of M&I plan and its implementation with the proper identification of indicators demonstrating effect and impact level changes of the project. S/he whilst taking the responsibility for identifying tools, methods for gathering quantitative and qualititative information will also train, guide and assist other project staff in all M&I functions. Setting up and maintenance of database in relation to all project information is a responsibility of the Coordinator. S/he is expected to promote GBV at all levels of the project whilst creating an environment for information sharing and learning. Should have good public speaking skills.

Degree / Diploma holders in Social Sciences with a minimum of two years experience in monitoring and information management are encouraged to apply.

Project Coordinator -Gender and training - Batticaloa

The Gender and Training coordinator is primarily responsible for the successful creation, implementation and management of Gender and Training strategy of the project. S/he will identify specific gender issues in the GBV Project and plan, design and manage the strategy with appropriate interventions, outputs and indicators. Conceptual and practical knowledge in Gender and Gender Based Violence issues as well as Good Public speaking and facilitation skills are required for this position.

The selected candidate will ensure that the gender perspective is well built in overall project achievements and identify related training needs of all stakeholders and support the GBV team in delivering and developing training modules.

Graduates in Social Science/Adult education with a minimum of two years work experience in managing gender and Training related assignments in an INGO/NGO are encouraged to apply.

Project Coordinator - Policy and Networking- Colombo

The Project Coordinator - Policy and Networking is responsible for the Development and management of a Social Justice Framework to improve the access for Project beneficiaries affected by Gender based Violence in the local legal system. S/He will effectively manage and build up a network between various NGO and GOSL organizations to provide proper access to legal systems to GBV survivors. Whilst conducting workshops, dissemination sessions on the current legal system related to the GBV in Sri Lanka, S/he would also involve in building the capacities of other NGOs in addressing GBV issues. Work involves close conjunction with various partners such as Violence Against Women Network (VAW), GBV support professionals and NGOs. The selected candidate whilst spending 70% of the time in the field, should also be able to effectively play the advocacy role for GBV issues.

Degree / Diploma holders in Law or Social Sciences with a minimum of two years policy related experience in an INGO/NGO are encouraged to apply.

Project Officer - Grant Support - Batticaloa

Project Officer Grant Support is responsible for the overall implementation of CAREGBV Sub Grant programme. Selected candidate will work closely with the Gender and Training coordinator to build the capacities of the grass root level organizations to prepare proposals and manage the implementation of GBV sub grants. Will also build up a support mechanism to ensure the funds are managed as per the plans and monitor/prepare reports on the effectiveness of all sub grant recipients. Will also participate in various initiatives such as OXFAM CEVAW campaign to set up community facilities and other research activities on GBV promoted by the project. Grass root level development work experience is required for this position.

Degree / Diploma holders in Social Science with a minimum of one year experience in an INGO/NGO environment are encouraged to apply.

Project Officer - Field Operations, 2 Positions - Batticaloa

The Project Officer is responsible for the overall implementation of project activities in assigned areas within a given time frame. The work will involve community mobilization, formation of participatory teams, monitoring of participatory teams promoting of GBV project services within the assigned areas.
The Project Officer will also undertake the planning and implementation of various initiatives promoted by the project including OXFAM CEVAWS campaign. S/he will gather and analyse data in relation to all aspects of the project and submit reports.

Degree / Diploma holders in Social Science with a minimum of one year experience in an INGO/NGO environment are encouraged to apply.

Convener - Trincomalee/Polonnaruwa

Convener is responsible for establishing an Inter Agency Forum and effectively directing the forum to involve in advocacy efforts to address GBV issues in Sri Lanka. Whilst representing GBV Project in media briefings and meetings as and when required, will also create a strong network with stakeholders in the legal system supporting GBV initiatives. Whilst playing the role of a facilitator s/he will also actively participate in organizing conferences, meetings and support events promoted by the project.
Applicants should have a Degree/Diploma in Social Science/Mass Media/Communication and preference will be given to candidate with a minimum of one year experience in an INGO/NGO environment

Finance Administration assistant - Batticaloa

Finance and Administration Officer will provide efficient Secretarial/ Finance Administration and office management support to the Projects. Knowledge of fleet management, procurement is required together with computer skills to work in a highly computerized environment.
Candidate for this position should have proficiency in written/spoken English with good computer literacy. Part qualification in accountancy is a must and preference will be given to candidates with a minimum of two years experience as a Finance and Administration Officer.

Secretarial Assistant - Batticaloa

Reporting to the Project Director, the selected candidate will provide efficient secretarial/coordination/office management support to the Project Director and the GBV team.

Candidate for this position should have high proficiency in written/spoken English with computer literacy. Preference will be given to candidates with a minimum of two years experience as Secretary in an INGO/NGO.

All positions are field based and carry an attractive salary together with fringe benefits. Verbal and written communication in Tamil is a must for all positions and preference will be given to candidates with analytical, facilitation skills and computer literacy. Appointments are on contract basis. Individuals who are highly motivated & risk taking with less experience or individuals with physical disabilities are also urged to apply. All position involves extensive field travel and possession of a riding license is an advantage.

Suitably qualified candidates are encouraged to apply with names and addresses of two non-related referees (with contact numbers) to the address given below within 7 days of this advertisement. Preference will be given to women to ensure gender equity with in the organization.

CARE is an equal opportunity employer

Director Human Resources,
CARE INTERNATIONAL-SRI LANKA, 7/A, Gregory's Road,
Colombo 7. (D/3/2426) Email: srilanka@care.lk

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம்	539
திகதி	30.12.2003

டிக்கட்டின் நிறம் - நீலம்
மேலதிகமாகும் தொடர் இல. 4428362-4443639

வெற்றி இலக்கங்கள் **05 17 36 55**

லக்கினம்

கடகம்

ஜக்பொட் பரிசு ரூபா. 3,147,300/- வெல்லப்பட்டுள்ளது.

இந்த லொத்தர்சீட்டுக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

இலக்கம்	வெற்றியாளர் தொகை	பரிசு தொகை(ரூ.)	மொத்தம் பரிசு தொகை(ரூ.)
1 இல	339,753	10	3,397,530
2 இலக்கங்கள்	31,094	20	621,880
1 இல + லக்கினம்	30,880	30	926,400
2 இல + லக்கினம்	2,936	100	293,600
3 இலக்கங்கள்	832	500	416,000
3 இல + லக்கினம்	74	5,000	370,000
4 இலக்கங்கள்	03	100,000	300,000
4 இல + லக்கினம்	01	3,147,300	3,147,300
மொத்தம்	405,573	-	9,472,710

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.9,472,710/-

தொடர் இல. 5418336க்கு மேற்பட்ட சீட்டு ஒரு லக்கினம் 1004 முதல் 1041 வரை வெல்லப்பெற்றால் மொத்தமாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

மகிழ்ச்சி வாழ்வு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 11, மெல்ற் வீதி,
கொழும்பு-03, கொழும்பு 3.

மாநகரங்களில் - விநியோகஸ்தர்,
34, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்னால்), யாழ்ப்பாணம்.

4431102-6-84
4434498-0-63
4432392-5-10
4441906-6-74
4437483-0-76

PRODUCED CAPNE

உடன் தேவை

எமது உணவகத்திற்குப் பின்வருவோர் உடனே தேவை.

- களஞ்சியக் காப்பாளர்
- மேற்பார்வையாளர்
- சப்ளையர்

(தேநீர்க் கடையில் வேலை அனுபவமுள்ளவர் மட்டும்)
நேரில் தொடர்புகொள்ளவும்.

மூன்று நட்சத்திர உணவகம்,
162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(25-12-18) (சி-32352)

31ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 15 - 01 - 1939

இறைவன் அடியில் 02 - 12 - 2003

அமரர் கந்தையா நல்லையா

திதி: 01-01-2004

மாதமொன்றாகி விட்டும்
மாறவில்லை எம்துயரம்
நீண்டதூரம் நீங்கள் சென்ற
காரணத்தால் ஏனோ?
ஆண்டவனின் அடிபற்றிச்
சென்றீரோ அப்பா?
அகிலமதில் உம்மை இனிக்
காண்பது தான் எப்போது?
எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

நினைவு நிகழ்வு
சுன்னாகம் (26608) (26-12-18-25)

கொமர்ஷல் வங்கி

மலரும் புத்தாண்டில், சமாதானமும், சுபீட்சமும் நிறைந்த இப்பிரகாசமான ஒளிக்கதிர்கள் உங்கள் வாழ்வை ஒளிமயமாக்கட்டும்!

Q & E Advertising

2004 உங்களுக்கு எப்படி?

செவ்.	ரா. சந்.		சனி
	இராசிச் சக்கரம்		
வெ.			வியா.
சு.▲	புத.	கே.	

நிகழும் சுபானு வருஷம் மார்கழி மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை. அச்சுவினி நட்ஷத்திரமும் - அமிர்த சித்த யோகமும் தனுலக்கினமும் - மேடம் இராசியில் நவமித்திதியிலும் புதிய வருஷம் மங்களகரமாகப் பிறக்கின்றது.

- 2, 5, 6, 9 ஆகிய எண்களுக்கு இவ்வாண்டில் அதிர்ஷ்டம்.
- 1, 3 ஆகிய எண்களுக்குப் போட்டி
- 4, 7, 8 ஆகிய எண்களுக்கு இது கஷ்டமான ஆண்டு.
- 8 ஆம் எண்காரர்களில் சிலருக்கு சில சந்தர்ப்பங்களில் வருமானச் சீறப்பு ஏற்படும்.
- 6 எண் கூட்டுத்தொகை வருகின்ற இடங்களான கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அதிக மாற்றங்கள் அரசியல்வாதிகளால் திட்டமிட்டு ஏற்படுத்தப்படும்.

உள்நாட்டில்

- இவ்வாண்டு தேர்தல் ஒன்று வரும்.
- சமாதானப் பேச்சுக்கள் தொடங்கி மாற்றங்கள் ஏற்படும்.
- தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சியும் வடக்கில் விடுதலைப் புலிகளும் மக்களின் செல்வாக்குடன் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள்.
- கூட்டமைப்பினர் விடுதலைப் புலிகளுடன் இணைவார்கள்.
- இந்தியத் தலையீட்டில் மனமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.
- 2005 ஆம் ஆண்டில் வரவுள்ள சமாதானப் பேச்சின் உடன்பாட்டிற்கு வித்திடப்படும்.

வெளி நாட்டில்

- மத்திய கிழக்கில் செயற்கை, இயற்கை அழிவுகள் தொடரும்.
- ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் திட்டமிட்டுக் கொலை செய்யப்படுவார்.
- மேற்கு நாடுகள் திட்டமிட்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
- பாகிஸ்தான், அமெரிக்கா, மேற்கு நாடுகளில் திடீரென தீவிரவாதிகள் அழிவுகளை ஏற்படுத்துவார்கள்.

மேடம், இடபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம் ஆகிய இராசிக்காரர்களுக்கு நன்மைகள் விட்டும் ஏனைய இராசிக்காரர்களுக்குத் தீமைகள் ஏற்படும்.

மேடம்

பழையன கழிதலும் புதியன புகுதலும் இடம் பெறும் இந்த ஆண்டில் புதிய திட்டங்களை வகுத்து தொழிலில் இலாபமீட்டுவீர்கள். குருபகவானின் பார்வை மாற்றங்கள் உங்களுக்கு நன்மைகள் கொடுக்கும். மனைவி, பிள்ளைகள், சகோதரர் முறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும். கிழக்கு, மேற்குத்திசைகளில் பிரயாணங்கள் செய்து நன்மை அடைவீர்கள். அரசஅதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோர் உதவிகள் செய்வார்கள். பணவரவு ஏற்படும். அயலவரை நம்ப வேண்டாம். பிரயாணங்களால் நன்மைகள் ஏற்படும். ஆவணிக்குப் பின்பு புதிய திட்டங்களால் நன்மைகள் அதிகரிக்கும். பாதுகாப்புத் துறையினர், வியாபாரிகளுக்கு அதிக நன்மையுண்டு.

இடபம்

அடிக்கடி இந்த ஆண்டில் சனீஸ்வரனால் கலகங்கள் வரலாம். சிலர் நீதிமன்றம், பொலீஸ் நிலையம் என அலைவார்கள். தெற்குத் திசையிலிருந்து புதிய செய்திகள் வரும். முகஸ்துதியால் கரும மாற்றி இலாபம் அடைவீர்கள். தூரதேசப்பிரயாணம் சிலருக்கு நன்மை கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி மேல திகாரிகள் உதவி செய்வார் கள். நெருப்பால் கெடுதி வரும். மருந்து, இசை, கணனித் துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். ஜுலை 2004இற்குப் பின்பு மாற்றங்கள் ஏற்படும்.

மிதுனம்

வியாழபகவானால் ஒரு பதட்டநிலை ஏற்படும். கழுத்தளவு கலக்கம் வந்து நிற்கும். தேடிய தேட்டங்களால் தொழிலை புதிய முறையில் இயக்கச் செய்வீர்கள். வீட்டில் கலகலப்பான கொண்டாட்டங்கள் வந்து போகும். உங்கள் முதலாளி உங்களுக்கு ஊக்கம் தருவார். பத்திரிகைத் தொழில் - செய்தித்தொழில், குருத்தொழில் செய்பவர்களுக்கு பொருள் வரவு அதிகரிக்கும். சகோதரர்கள் சிறப்பு அடைவார்கள். மேற்குத் திசைக்குப் பிரயாணம் செய்து புதிய வாழ்வைப் பெறுவீர்கள்.

கடகம்

பதவி, பணம் உயர, உயர போட்டிகளும், ஆபத்துக்களும் மலிந்திருக்கும். உங்களுக்கு உயர்வுகள் பொருள்வளம் கிடைக்கும். ஆனால், ஆபத்துக்கள் வராது எனச்சொல்ல முடியாது. அரசியலில் புயல் - புகழ்வரும். நாடுவிட்டு நாடு செல்லச் சந்தர்ப்பங்கள் வரும். அரசியல்வாதிகள், அரசபீடத்தில் தொழில் செய்பவர், இலக்கிய சிந்தனையாளர். குருவினர், பத்திரிகையாளர்கள் ஆகியோர் ஆடிக்குப் பின்பு உயர்ந்து செல்வார்கள். மதுபானச்சாலை நடத் துபவர்கள் பொருளீட்டுவார்கள்.

சிங்கம்

உண்மை - உறுதி - அசையாத நம்பிக்கை - ஆழ்ந்த அறிவு என்பன கிடைக்க வசதியுண்டு. உதயத்து வியாழன் உருக்குலைந்து போகுமுன் பதவியில் இருக்க வைக்கும். வாழ்த்துக்கள் உயர்வுக்கு வந்து சேரும். பிறர் எறியும் சொல்லம்பை வைத்து உங்களுக்கு மகுடம் சூட்ட முனைவீர்கள். வீடு, மனை, வாகன வசதிகள் வந்து சேரும் மருந்து - ஹோட்டல் - பாதுகாப்பு - அரசியல்பீடத்தவர்கள் நன்மையடைவர். ஆவணிக்குப் பின்பு நன்மைகள் பெருகி வரும்.

கன்னி

உத்தமர்கள் உதவி தேடி வரும். விருந்துக்கு வந்தவர்கள் கள்ளமாகக் கன்னமிடுவார்கள். பெற்றோரின் சகோதரர்களுக்கு உடல்பாதிப்பு - வைத்தியம் செய்ய நேரிடும். வாகனவிபத்து - வழுக்கி விழுவது ஆகியன ஏற்பட இடமுண்டு. உறவினர், நண்பர்கள் வருகையுண்டு. பங்குனி 2004இற்குப் பின்பு கொடுத்தது வராது. பணவரவு தூரதேசத்திலிருந்து வரஇடமுண்டு. வரவுக்கு மீறிய செலவுகள் கொடுக்கும். தொழிலில் மந்தநிலை - இடமாற்றம் வரஇடமுண்டு.

துலாம்

கைக்கு வந்தது வாய்க்கு வராது. இடமாற்றங்கள் தொழில்நிலையில் புதிய திட்டங்களை வியாழன் செய்யும். சனீஸ்வரனின் மந்த வக்கிரத்தால் கொடுத்தது வராது. உரசல்காயம் - வாகனத்தால்வர இடமுண்டு. ஆனி 2004இற்குப் பின்பு பொருள் வரவு ஏற்படும். புதிய தூரத்து உறவினருக்கு இடமாற்றங்கள் ஏற்பட வழியுண்டு. பணம்வரும். இனஜனப் பிரிவு ஏற்படும். சகோதர வழியினருக்கு நல்லதல்ல. சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யவும்.

விருச்சிகம்

அட்டமத்துச்சனி அயலவரைத் தூண்டிவிட்டு அடிக்கடி துன்பத்தைத் தரும். நண்பர்கள் நல்லதைச் செய்வார்கள். புதிய திட்டங்களை பின்போடவும். வடக்கு அல்லது தெற்குத் திசையிலிருந்து பொருள்கள் வரவும் இடமுண்டு. அடிக்கடி கலகம் வரும். நீதிமன்றம், பொலீஸ் நிலையம் செல்லவும் இட முண்டு. பொருள் இழப்பு தவறலாம். கொடுத்ததைக் கேட்டுக் கலங்க இடமுண்டு. வியாபாரிகளுக்கு நன்மைகள் ஏப்ரல் 2004இற்குப் பின்வர இடமுண்டு.

தனுசு

புதிய திட்டத்தினால் வெற்றி வரும். கிழக்குத் திசையில் இலாபங்கள் கிடைக்க வழியுண்டு. நெருப்பால் ஆபத்துக்கள் வர இடமுண்டு. குடும்பத்து எதிர்ப்பாலாருக்கு உடல் நலம் பாதிப்பு அடைய வழி உண்டு. பொருள் வரவில் மாற்றங்கள் வரும். சனீஸ்வரனின் தாக்கம் - பகைமைகளை வரச்செய்யும். ஆனால், உங்களை எவரும் வெல்லமுடியாது. தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைக் கொடுக்கும். ஆனி 2004 இற்குப் பின்பு பொருள்வரவு தொழில்முறையில்வர இடமுண்டு. பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

மகரம்

புதிய இடம் - தொழிலில் ஒரு பதட்ட நிலை அடிக்கடிவரும். கொடுத்தது வராது. தெற்கில் இருந்து புதிய செய்திகள் வர இடமுண்டு. இனஜனங்கள் வரவும் - பேச்சுக்கள் நடைபெற வாய்ப்பு ஏற்படும். கறுப்புப் பொருள்கள், உலோகப்பொருள்கள் தவற வாய்ப்பு ஏற்படும். மாமன் - மாமி வழியிலிருந்து அடிக்கடி உதவிகள் கிடைக்கும். பிரயாணங்களால் நன்மைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஆவணிக்குப் பின்பு பொருள் வரவு அதிகரிக்க இடமுண்டு பிரயாணத் துறை, குருத்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

கும்பம்

கற்பனை அதிகரிக்கும், மேற்குத் திசை சென்றால் இலாபங்கள் அடைவீர்கள். எதிர்ப்பாலாருக்கும் - புத்திர வழியினருக்கும், மாணவர்களுக்கும் மாற்றங்கள் புதிய துறைகளில் ஏற்படவாய்ப்பு உண்டு. தூரத்திலிருந்து செய்திகள் - தொழில்ரீதியான உத்தரவுகள் வந்து செயற்படப் பல சந்தர்ப்பங் கள் ஏற்படும். சகோதர வழியினருக்கு உடல்நிலை பாதிப்புக் கொடுக் கும். உங்களுக்கும் கைகால் தாக்கம் கொடுக்கும். சளி, விறைப்பு வாதத்திற்கு வைத்தியம் செய்வீர்கள் குருத்துறையினர் நன்மைகள் அதிகளவில் பெறுவார்கள். பிரயாணங்களால் நஷ்டங்கள் வரும் தவிர்க்கவும்.

மீனம்

வெளிநாட்டு வாய்ப்பு. தூரத்து உறவு முறையினர் நன்மை அடைய வழி உண்டு. உங்களின் உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். நீங்களும் அவர்களுக்குப் பல வழிகளிலும் உதவிகள் செய்து கொடுப்பீர்கள். வெளிநாட்டில் இருந்து பொருளோ அழைப்போ வரும். விசாரணைகள் வரும். காணி பூமி வரும். பொருள் களவுகள் போகலாம். அன்னிய தேசத்தவர்கள் உதவிகள் செய்துதருவார்கள். மருத்துவத்துறையினர் குருத் தொழிலினர் பிரயாணத்துறையினர்களுக்கு மாற்றங்களும் உதவிகளும் வந்துசேரும்.

மகாதேவா ஜோதிடம்

10 ஆண்டுகளின் பின் இந்தியா - இலங்கை இடையே 'மைக்ரோவ்வேவ்' தொலைத்தொடர்பு இணைப்பு

புதுடில்லி,ஜன.1

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே 10 ஆண்டுகளுக்குப் பிறகு 'மைக்ரோவ்வேவ்' இணைப்பு வசதி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நேரடி இணைப்புக்கு வழி ஏற்பட்டுள்ளது. குரல் மற்றும் ஆவணங்களை இதன் மூலம் பரவோ அனுப்பவோ இயலும்.

சார்க் அமைப்பு விதித்துள்ள நெறிமுறைகளை மீறுவது, நேரடி தகவல் தொடர்பு இணைப்பில் இருக்காது.

இரு நாடுகளுக்கும் இடையே 'மைக்ரோவ்வேவ்' இணைப்பு வசதி ஏற்பட்டுள்ளதால் தகவல் தொடர்பு, போக்குவரத்து அதிகரிக்கும்.

இத்திட்டத்துக்கான மொத்த செலவு இந்திய மதிப்பில் 1 கோடியே 20லட்சம் ரூபா. இதில் 3 சதவீதத்தை இலங்கை ரெலிகொம் ஏற்றுக்கொண்டுள்ளது. மீதியை பாரத் சஞ்சார் நிகம் நிறுவனம் (பிஎஸ்என்எல்) ஏற்றுக் கொண்டது என்று அதன் தலைமை நிர்வாக இயக்குநர் பிரீத்பால் சிங் தெரிவித்தார்.

'மைக்ரோவ்வேவ்' இணைப்பு இல்லாதபோது அழைப்புகள் அனைத்தும் விஎஸ்என்எல் மூலமாக அஞ்சல் செய்யப்பட்டன என்றும் சிங் தெரிவித்தார்.

கலாபூஷணம் செல்லத்துரைக்கு அடுத்த வாரம் பவளவிழா

யாழ்ப்பாணம்,ஜன.1

நவாலியூரான் கலாபூஷணம் நா.செல்லத்துரையின் பவளவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை யாழ். மத்திய கல்லூரியின் 'வாழும் கலைஞர்களை கௌரவிக்கும் அமைப்பு' மேற்கொண்டுள்ளது.

நாடக நடிகர், இயக்குநர், கதை - கவிதை - கட்டுரை மற்றும் நாவல் ஆசிரியர், மெல்லிசை மெட்டமைப்பாளர் எனப் பலதுறைகளில் நா.செல்லத்துரை கலைக்குச் சேவையாற்றி வருவதனை கௌரவித்து மேற்படி அமைப்பு இந்தப் பவளவிழாவினை நடத்துகின்றது.

பவளவிழாச் சிறப்புமலர் வெளியிடப்படும் நவாலியூரானின் வீடியோ நாடக படவிமர்சனக் காட்சிகளும் இடம்பெறவுள்ளன.

எமது சமூகத்தில் வாழும் மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் திட்டத்தின் ஓர் ஆரம்பக் கட்டமே இதுவென்றும் -

வாழும் மூத்ததமிழ்க் கலைஞர்களின் விவரங்களைத் தமது அமைப்புக்குத் தெரியப்படுத்தினால், அது தமது நோக்கத்துக்கு உதவியாக அமையும் எனவும் - 'வாழும் கலைஞர்களைக் கௌரவிக்கும் அமைப்பின்' இணைப்பாளரும் யாழ். மத்திய கல்லூரி அதிபருமான க.இராசதுரை தெரிவித்தார். (ம-9)

தெல்லிப்பழை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு செல்லும் பாதையை புனரமைக்கத் தடை

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய சாலைக்குச் செல்லும் வீதியைப் புனரமைக்கும் பணிகளைப் படையினர் இடைநிறுத்தியுள்ளனர். இதையடுத்து பணிகள் முடக்கமடைந்துள்ளன.

இதையடுத்து வீதியைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட அனுமதி வழங்குமாறு கோரி வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் ஜே. ஸ்ரீநிவாசன் பலாலி படைத் தலைமையகத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தெல்லிப்பழை சந்தியிலிருந்து புற்றுநோய் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வீதியானது கடந்த யுத்தங்களால் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இவ்வீதியூடாக புற்றுநோய் வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கின. இதனையடுத்து சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து தேசிய வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்வீதியைப் புனரமைக்கத் தேவையான கற்களும் அங்கு பறிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் இதனை அனுமதித்த படையினர் திடீரென இப்பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தமது பகுதிக்குள் வந்து பணிகளில் ஈடுபட அனுமதி மறுத்துள்ளனர். இதனையடுத்து மேற்படி வீதி அபிவிருத்தி பணிகளில் ஈடுபட அனுமதிக்குமாறு கோரி, யாழ். படைத்தளபதிக்கு வீதியமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஜே. ஸ்ரீநிவாசன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். இதன் பிரதிகள் யாழ். அரச அதிபருக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-150)

பல்கலையில் இன்று விசேட விரிவுரை

யாழ்ப்பாணம்,ஜன.1

'ஐரோப்பிய நாடுகளில் இலங்கைச் சைவர்கள் எதிர்நோக்கும் சமய, சமூகப் பிரச்சினைகள்' என்னும் தலைப்பில் விசேட விரிவுரை ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் சுவீடன் நாட்டு உக்சால பல்கலைக்கழகத்தின் சமய வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி பீற்றர் ஷால்க் விசேட உரையாற்றுவார். (ம-8)

நவாலி தெற்கில் சட்டவிரோத மது விற்பனை

யாழ்ப்பாணம்,ஜன.1

நவாலி தெற்குப் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் உள்ள சைக்கிள் திருத்தும் நிலையங்கள், கடைகள் என்பவற்றில் சட்டவிரோத மது பானம், கசிப்பு ஆகியன விற்கப்படுவதாகவும் இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8-185)

தர்மபுர ஆதீனம் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி ஒருவார விஜயமாக யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.1

தமிழ்நாடு தர்மபுர ஆதீனம் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் ஒருவாரகால ஆத்மீகப் பயணம் மேற்கொண்டு நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

காலையில் இங்கு வரும் சுவாமிகள் எதிர்வரும் 7ஆம் திகதி வரை யாழ் குடாநாட்டிலுள்ள ஆலயங்களிற்குச் சென்று சமய சொற்பொழிவுகளையும் அருளுரைகளையும் நிகழ்த்துவார்.

நாளை காலை 6.30 மணிக்கு வல்விபுர ஆழ்வார் ஆலயத்திற்கு விஜயம் செய்யும் சுவாமிகள், ஆலய தரிசனம் மேற்கொண்ட பின் பக்தர்களுக்கு அருளை வழங்குவார். அதனைத் தொடர்ந்து, காலை 9 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்திற்குச் சென்று அருளுரை வழங்குவார். முற்பகல் 11 மணிக்கு தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு சைவக்குருமார் அர்ச்சக சபையினர் நடத்தும் வரவேற்பு விழாவில் கலந்து கொள்ளும் சுவாமிகள் திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்துவார்.

3 ஆம் திகதி காலை 8 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலிருந்து சுவாமிகளும், பேரூர் ஆதீனமும் ஊர்வலமாக யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு அழைத்து வரப்படுவர். அங்கு தரிசனத்தை முடித்துக்கொண்டு கொழும்புத்துறை வதிரிபிட் விநாயகர் ஆலயத்தில் அடிகளாரின் அருளுரை இடம்பெறும்.

அன்றையதினம் மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சைவப்பரி பாலன சபையினர் சுவாமிகளுக்கு சிறப்பான வரவேற்பு விழாவும் ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளனர். தொடர்ந்து நீர்வேலி நாவலர் மணிமண்டபத்தில் சுவாமிகளின் சிறப்புரை இடம்பெறும்.

4ஆம் திகதி மாலை 3 மணிக்கு கைதடிச் சந்தியில் இருந்து மங்கள வாத்திய சகிதம் தம்பிரான் சுவாமிகள் ஊர்வலமாக கைதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு அழைத்து வரப்படுவர். அங்கு சுவாமியின் சிறப்புரை இடம்பெறும்.

5 ஆம் திகதி திங்கட்கிழமை தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், 6 ஆம் திகதி காலை 7 மணிக்கு கானநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் திருவாசக விழாவிலும், 7 ஆம் திகதி காலை 7மணிக்கு சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும் திருவாதிரை விழாவிலும் சுவாமிகள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுவார்.

இதேவேளை, சுவாமிகளை 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் தமது ஆலயங்களிற்கு அழைத்து அருளுரை பெறவிரும்பும் ஆலய பரிபாலன சபையினரை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் கேட்டுள்ளார். (ம-5)

கலைவிழா

யாழ்ப்பாணம்,ஜன.1

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கும் வத்தனை மழலைகள் கலைப் பூங்காவின் கலைவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு முன்னாள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வத்தனை மழலைகள் கல்விப் பூங்கா தலைவர் என்.சோதிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சிக் கோட்ட அரசியலதுறைப் பிரமுகர் சர்வோதயத்தின் யாழ்மாவட்ட இணைப்பாளர் க.கனகரட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-5)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு ரூ.30 ஆயிரம் அபராதம்

தெல்லிப்பழை,ஜன.1

சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றார்கள் என்னும் குற்றச்சாட்டின் பேரில் வட்டுக்கோட்டைப் பொலீஸாரால் கடந்த 23ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மூவருக்கு 30ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை சங்கரத்தை பகுதியில் மின்சாரத்தைக் களவாடிப் பயன்படுத்தி வந்த மூவரை மின்சார நிலைய ஊழியர்களின் துணையுடன் வட்டுக்கோட்டைப் பொலீஸார் கைது செய்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவருக்குமே ஒருவருக்கு 10,000/- ரூபா வீதம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் அபராதம் விதித்தார். (ம-150)

அதிகாரத்தைப் பலப்படுத்துவதிலேயே ஜனாதிபதியும், பிரதமரும் அக்கறை

நவ சமசமாஜக் கட்சி ஆண்டு விழாவில் விக்கிரமபாகு தெரிவிப்பு

கொழும்பு,ஜன.1

இனப்பிரச்சினைக்கு முடிவு காணப்படவேண்டும். அதற்கு அரசியல் ரீதியாகவே தீர்வுகாணப்படவேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டு தமது அதிகாரங்களைப் பலப்படுத்திக்கொள்வதிலேயே ஜனாதிபதியும், பிரதமரும் அக்கறை காட்டுகின்றனர்.

இப்படிக் கூறியுள்ளார் நவ சமசமாஜக் கட்சியின் செயலர் விக்கிரமபாகு கருணாரத்ன.

நவ சமசமாஜக்கட்சியின் 26ஆவது ஆண்டு விழா நேற்றுமுன்தினம் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனைகளில் எவ்வித கவனமும் செலுத்தாமல் என்றுமில்லாதவாறு இனவாதத்தைக்கக்கி, அதை விமர்சிப்பதிலும் அதுதொடர்பாக வீண்வாதங்களை முன்வைப்பதிலுமே தென்னிலங்கை அரசியல்வாதிகள் முனைப்பாக உள்ளனர். தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் நவ சமசமாஜக் கட்சி உறுதியாகவே உள்ளது.

இன்று, ஜே.வி.பியினருடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்க முயற்சிக்கும் சந்திரிகா அம்மையார், அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளத் தாம் தயாராக விருக்கிறார் என்று கூறுகிறார்.

ஆனால் தமிழர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் -

அதிகாரப் பகிர்வுக்குத் தாங்கள் இடம் கொடுக்கப்போவதில்லை எனவும் திரும்பத்திரும்பக்கூறிவரும் ஜே.வி.பியினருடன் இணைந்து தமிழர் பிரச்சினையை ஜனாதிபதி எப்படித் தீர்ப்பார்?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் அண்மையில் விடுத்துள்ள செய்தியில் ஜே.வி.பியுடன் இணக்கம் காணப்பட்டுள்ள உடன்படிக்கையில் கையெழுத்திடுவது மட்டுமே எஞ்சியுள்ள வேலை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அன்றைய தினமே ஜே.வி.பியின் எம்.பியான விமல்ரத்னாயக்க கருத்து வெளியிடுகையில்-

ஸ்ரீலசுகவுடன் கூட்டுச் சேர்ந்தாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பான எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இருக்காது எனக் கூறியிருக்கிறார். அப்படியானால் ஜனாதிபதியின் உள் நோக்கம் என்ன?

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஒரேகொள்கை இருப்பதாகக் கூறுகிறார்கள். சமாதானம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தாமே முதலில் முன்வந்தார் என்று ஜனாதிபதி கூறுகிறார். பாதுகாப்பு அமைச்சை தாம் பொறுப்பேற்றதால் சமாதானப் பேச்சுகளுக்கு எந்தத்தடையும் ஏற்படவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுக்களை பயப்படாமல் முன்னெடுக்கலாம் என்றும் அதற்குத் தான் ஒத்துழைப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அப்படியானால் பேச்சுக்களை முன்னெடுப்பதில் பிரதமர் ஏன் பின்வாங்கவேண்டும்?

'தமிழ் முஸ்லிம் மக்களுக்கு உரிமைகள் கிடைத்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாகவிருக்கும் இனவாதிகள், போராட்டங்களை நடத்தித் தேசியப் பிரச்சினையை திசை திருப்ப முனைகின்றனர்.

ரணிலும் - சந்திரிகாவும் சமாதானத்தை உருவாக்க உண்மையிலேயே விரும்பவில்லை என்றால் ஏன் தமக்கிடையிலான பிரச்சினையைப் பகிரங்கமாகப் பேசி அதற்கு முடிவு காணக்கூடாது? எதிர்காலத்தில் நாம் ஆட்சியமைக்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கில்லை. இடதுசாரிகளை ஒரணியில் திரட்டி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்தும் நடவடிக்கைகளில் நாம் தொடர்ந்து ஈடுபடுவோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சமாதானத்தை விரும்புவர் என்றால் சமாதானத்தை விரும்பும் சக்திகளை அணிதிரட்டி அவர் செயலாற்ற முன்வரவேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, தமிழர் விடுதலைக்கூட்டணிப் செயலாளர் நாயகம் இராசமாந்தன், கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் எஸ்.சுசிங்க, விவசாயத் தோட்ட தொழிலாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணசாமி ஆகியோர் தமது வாழ்த்துக்களைத்தெரிவித்து உரையாற்றினர். கட்சியின் முத்த உறுப்பினர்கள் ஆறுமுகம் லெனின் நினைவுச் சின்னம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

சமாதானத்தைப் போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம்

சூத்தோலிக்க திருச்சபையானது 1967ஆம் ஆண்டு 23ஆம் அருளப்பர் பாப்பரசராக இருந்த காலம் முதல் ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்தையும் உலக சமாதான தினமாக பிரகடனப்படுத்தி - உலக சமாதானத்திற்காக செபிக்கும்படியும் உழைக்கும்படியும் அழைப்பு விடுத்து வந்துள்ளது. 6ஆம் சின்னப்பர் பாப்பரசரும் அவரைத் தொடர்ந்த மற்றைய பாப்பரசர்களும் இந்தச் சிறப்பான பணியை தவறாமல் மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

தமது பணியின் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள பாப்பரசர் 2ஆம் யோவான் பவுல் அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்திலும் உலக சமாதானத்திற்காக செபிக்கும்படியும்

--அருள்திரு
ரூபன் மரியாம்பிள்ளை

உலகில் சமாதானத்தை ஏற்படுத்த உழைக்கும்படியும் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறார். இவ்வாண்டு தமது 25ஆவது உலக சமாதான தினச் செய்தியை சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என்னும் தலைப்பில் வெளியிட்டிருக்கிறார். உண்மையில் கடந்த 25 ஆண்டுகளாக அவர் வெளியிட்டு வந்த சமாதான தினச் செய்திகளின் சாரத்தை சாறுபிழிந்தது போல் இவ்வாண்டுச் செய்தி அமைந்திருக்கிறது என்று குரல்தரவல்ல வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

கடந்த 25 ஆண்டுகளிலும் சமாதானத்தின் பல்வேறு நிறங்களை நாம் தெளிவாக விளக்கிவிட்டோம். இப்போது சமாதானமாக இருப்பதும் சமாதானமாக வாழுவதும் எமது தேவையாக இருக்கிறது. இனி சமாதானத்தைச் செயல்படுத்துவோம், வாழுவோம் என அவர் வேண்டி நிற்கிறார்.

1979ஆம் ஆண்டு இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் தமது முதலாவது சமாதான தின செய்தியை சமாதானத்தை அடைய சமாதானத்தை போதியுங்கள் என்னும் தலைப்பில் அவர் விடுத்திருந்தார். சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இவ்வாண்டின் செய்தியின் தலைப்பிலும் 1979ஆம் ஆண்டு செய்தியின் தலைப்பிலும் ஒற்றுமை இருப்பதை நாம் இங்கு நோக்க வேண்டும்.

இவ்வாண்டுக்கான சமாதான தினச் செய்தி சர்வதேசச் சட்டம் சமாதானத்தின் ஒரு வழியாகும் என்ற தலைப்பில் வெளியிடப்படும் என வத்திக்கான் ஊடகங்கள் அறிவித்த பின்னரும் திருத்தந்தை அதன் தலைப்பை சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என மாற்றியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் சமாதானத்தை போதிப்பது எல்லா நேரத்துக்குமான அர்ப்பணம் என்ற இவ்வாண்டுச் செய்தியை குறிப்பான விதமாக சமாதானத்தை தமது முக்கிய கடமையாகக் கொண்டுள்ள நாடுகளின் தலைவர்களுக்கும், சமாதான ஒப்பந்தங்களை செய்து சர்வதேச சட்டத் தன்மையை நிலைநாட்டும் சட்டத் தரணிகளுக்கும் இளைஞர்களுக்கு சமாதானத்தை போதிக்கும் ஆசிரியர்களுக்கும் என விழித்து ஆரம்பிக்கிறார்.

. நீங்கள் அனைவரும் யேசுநாதரின் வாரிசான எமது குரலைக் கேளுங்கள். 2004ஆம் ஆண்டின் ஆரம்பத் தினமான இன்றும் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். அது எமது கடமையாக இருக்கிறது என்று குரல் எழுப்பும் எமது பணிவான வேண்டுகோளுக்கு செவிசாயுங்கள். கடந்த 25 ஆண்டுகளாக எமது முன்னோரை பின்தொடர்ந்து இத்தினத்தை சமாதான தினமாக அறிவித்து சமாதானத்திற்கான அழைப்பை விடுத்துக் கொண்டே வந்திருக்கிறோம். 25 ஆண்டுகளாக திருச்சபை முன்பாகவும் உலகின் முன்பாகவும் விசுவாசிகள் முன்பாகவும் நல்மனது படைத்த அனைத்து மனிதர்கள் முன்பாகவும் சமாதானத்துக்காக நாம் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறோம். இன்று மீண்டும் ஒரு தடவை எல்லா கண்டங்களில் வாழும் மனிதர்களையும் உலக சமாதான தினத்தை கொண்டாடும் அழைப்பு விடுக்கிறோம்.

எல்லா காலத்தையும் விட இன்று மனித இனமானது சமாதானத்துக்கான பாதையை மீளக்கண்டுபிடிக்க வேண்டிய ஒரு தேவையில் இருக்கிறது. இன்று போரின் அனர்த்தங்களின் நடுவில் மூன்றாம் ஆயிரம் ஆண்டின் ஆரம்பத்தில் உலகெங்கும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளிலும் இரத்தக் களரி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் எல்லா காலத்தையும் விட சமாதானத்தின் பாதையை நாம் கண்டடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்று மனிதர்கள் எல்லோரும் சமாதானத்தில் நம்பிக்கை இழந்து போரின் முகத்திலே அதன் துயரங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற வேளையில் திருச்சபையானது சமாதானத்தை போதித்துகொண்டு இருக்கிறது. சமாதானம் சாத்தியமானது என்பதை நிரூபித்து வலியுறுத்தி வருகிறது. சமாதானத்தை ஏற்படுத்துவது எமது கடமை என்பதை திரும்பத் திரும்ப அறிவிப்பதில் திருச்சபை சோர்ந்து போய்விடவில்லை.

23ஆம் அருளப்பர் பாப்பரசர் உலகில் அமைதி என்ற தலைப்பில் வெளியிட்ட திருமடலில் தெரிவிக்கும் நான்கு தூண்களிலே சமாதானம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்கின்ற அந்த நான்கு தூண்களின் மேல்தான் சமாதானம் கட்டி எழுப்பப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட காரணங்களை நாம் அறிவோம். எம்மைத் தொடர்ந்து வரும் மனித சமுதாயத்தை போரின் பழியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற அழைப்பு எமக்கு எப்போதும் ஒரு பெரிய அழைப்பாக இருக்கிறது.

உண்மையான சமாதானத்தை உலகில் நிறுவ வேண்டுமானால் நீதியானது அன்பினால் கட்டாயமாக நிறைவு செய்யப்பட வேண்டும். நீதியும் அன்பும் சிலவேளைகளில் எதிர் எதிர் சக்திகளாக அமைந்திருப்பது போல எமக்கு தோன்றலாம். ஆனால், உண்மையில் அவை ஒரு உண்மைத் தன்மையின் இரண்டு முகங்கள் - மனித உயிரின் ஒன்றிணைக்கப்பட வேண்டிய இரு பரிமாணங்கள்.

கிறிஸ்தவர்களுக்கும் நன்மனதுள்ள அனைவருக்கும் தனி நபர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான பிரச்சினையை தீர்ப்பதற்கு மன்னிப்புத் தேவையாக இருக்கிறது. மன்னிப்பின்றி சமாதானம் இருக்க முடியாது. பலஸ்தீனத்திலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் நடக்கும் யுத்த நிகழ்வுகளே இப்போ என் நினைவுகளாயிருக்கின்றன.

சமாதானத்தைப்பற்றி போதுமான அளவு கடந்த காலம் முழுவதும் பல கோணங்களில் விளக்கம் தந்தாகிவிட்டது. இப்போ மிஞ்சியிருப்பதெல்லாம் சமாதானமாக வீவிப்பதற்கு உழைப்பதுதான். தனிநபர்களும் மனிதர்களும் சமாதானமாக ஒன்றிணைந்து வாழ வேண்டும். நாம் கிறிஸ்தவர்கள் எமது மதத்தின் வழியான சமாதானத்தை எம்கும் மற்றவர்களுக்கும் போதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சமாதானத்தை போதிப்பது என்பது கிறிஸ்துவையே போதிப்பதாக இருக்கிறது. அவரின் நற்செய்தியை அறிவிப்பதென்பது சமாதானத்தின் செய்தியை அறிவிப்பதாக இருக்கிறது. சமாதானம் மெய்வேண்டி போரும் பெறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என்று பரிமா (மத்தேயு) என்ற மலைப்பொழிவில் சமாதான தூதுவர்களாக இருக்க உழைக்க வேண்டியிருக்கிறது - என திருக்குர்ஆனின் செய்தி நினைவூட்டுகிறது.

நீதிக்கும் சமாதானத்துக்குமான பாப்பரசரின் ஆண்டுகளுக்குத் தலைவர் இவ்வாறு பாப்பரசரின் சமாதான தினச் செய்தியை வெளியிட்டு வைக்கையில் சதாம் ஹுசைன் ஒரு பெருத்த மான நீதியமைப்பின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அது எந்தவிதமான நீதி அமைப்பென்று தெரிவிக்காத அமா. ஐரோப்பிய ஒன்றியமானது மரணதண்டனையை இல்லாது ஒழித்துவிட்டது எனத் தெரிவித்தார். ஆயிரம் தீவிரவாதிகள் அழிக்கப்படலாம். ஆனால், தீவிரவாதத்துக்கான காரணம் அழிக்கப்படாவிட்டால் தீவிரவாதம் எப்போதும் எம்முடனே இருக்கும் என அவர் தெரிவித்தார்.

யாழ்.பலநோக்குக் கூ.சங்கத்தின் வருடாந்த ஒளிவிழா சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது விழா ஒளியினை யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அதிவண. யேக்கப் நீக்கிலஸ் அடிகளாரும் சங்கத்தலைவர் சொலமன் சூ.சிறிலும் ஏற்றிவைப்பதை முதற் படத்திலும் அங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் சங்கத்தலைவர் உட்பட பணியாளர்கள் பங்குகொண்ட காட்சியை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

படம்: அரியாலைச் செய்தியாளர்

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம்மிலிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!

பிறான்சிஸ் ரேடேஸ்

யமஹா வெளிஇணைப்பு இயந்திரங்களையும் அதோடு இணைந்த உதிரிபாகங்களையும் ஏனைய சகலவிதமான மீன்பிடி உபகரணங்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

169, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
☎ 0777 588224

பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பேசி 226-3129

(26607)(19-16-32)

கண்ணீர் அஞ்சலி

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் உயர்திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புத் துணைவியார்

திருமதி லோகநாயகி

அவர்கள் 29-12-2003 அன்று காலமானதையிட்டு மிகவும் துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.1/15, இரண்டாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

V.S.சிவரட்ணம்
வங்கி விலைமதிப்பீட்டாளர்,
சமாதான நீதிவான்.

(C/32363)(34-16-32)

யாழ்ப்பாண மாநகரசபை
பகிரங்க ஏலம்

கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு கொடுப்பதற்கு 01-01-2004 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது. இவ் ஏலத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ரூபா 2500 /- பிணைப்பணம் செலுத்தி ஏலத்தில் பங்குபற்றலாம் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏலத்தில் சீட்டு பெற்றவர்கள் அதற்குரிய தொகையின் மூன்றில் ஒரு பகுதியை உடனடியாக செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

01. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல.	1	-	59400/-
02. நாவாந்துறை " "	7	-	9630/-
03. நாவாந்துறை " "	8	-	5490/-
04. நாவாந்துறை " "	9	-	5490/-
05. நாவாந்துறை கருவாட்டுக்கடை	11	-	3510/-
06. நாவாந்துறை "	12	-	3510/-
07. புங்கன்குளம் ஆட்டுறைச்சிக்கடை	01	-	36360/-
08. குருநகர் " "	7	-	9450/-
09. கல்லூரியார் வீதி தூ.வ.பா. நிலையம்		-	49770/-

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31-12-2003.

(சி-32365)(21-16-32)

மரண அறிவித்தல்

மாணிக்கம் நவரத்தினம்

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் நவரத்தினம் அவர்கள் 31.12.2003 புதன்கிழமை காலை இறைபதம்அடைந்துவிட்டார்.

அன்னார் இளையதம்பி நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியின் மகளும், ரதி, அமரசிங்கம் (கொழும்பு), ரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியசீலன், கோமேஸ் (ஆசிரியை சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), கௌசிகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜிரதன், சஜிந்திரன், சாரங்கன், சரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேர்ச் வீதி,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
கி. கௌசிகநாதன் (மருமகன்)

(26630)(14-12-32)

ராஜா யாழ்ப்பாணம்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள்
இன்று முதல் இசைய தலைவி விஜய், நோனா நடித்த
திருமலை
காட்சிகள்: (அல்லி) 10.30,2.30,6.30,9.30 (மு.தே.)

நிருகல்லி சுன்னாகம்
அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள்
கருணா, கிரிஜா, விஜய், மனிவண்ணன் நடித்த
வாய்ச்சொல் உயர்ந்தது
மதியம் காட்சி : 11.00, 2.00, (மு.தே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி

லிலேட்டி தம்சுலேவி
அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள்
அஜித், மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா
மதியம் காட்சி நேரம்: 3.00, 7.00,
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (மு.தே.)

லஷ்சுமி சினிமா இணுவில்
அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள்
சிரிரன் மற்றும் புது முகங்கள் நடித்த
கோவில்பட்டி வீரலட்சுமி
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30 (மு.தே.)

நிருநுஞ்சுவில் சுன்னாகம்
அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள்
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமானதோழி
(சிங்கள்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (ம.தே.)
வெள்ளி,சனி,ஞாயிறு
KEOMA
இரவு 8.15 இந்தி (ம.தே.)

மரண அறிவித்தல்

கந்தப்பிள்ளை கணேசபிள்ளை

(நடேஸ்வராக் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மூத்தி விதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை கணேசபிள்ளை நேற்று (31.12.2003) புதன்கிழமை காலமானார்.

இவர் தையிட்டியைச் சேர்ந்த கந்தப்பிள்ளை - முத்துப்பிள்ளை ஆகியோரின் மகனும் சுதுமலையைச் சேர்ந்த செல்லையா-பொன்னம்மா ஆகியோரின் மருமகனும் அன்னமா (இளைப்பாறிய ஆசிரியை - தையிட்டி கணேச வித்தியாலயம்)வின் கணவரும் திருமதி செல்லம்மாவின் சகோதரரும் காலஞ்சென்ற தமரத்தினத்தின் மைத்துனரும் கல்யாணி (ஆசிரியை - சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்,) தயாபரி, சுதர்ஷினி தாரணி (ஆசிரியை - மல்லாகம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும் விக்கினேஸ்வர மூத்தி (ஆசிரியர் - இளவாலை திருக்குடும்பக கன்னியர் மடம்), கேதீஸ்வரன்(ஆசிரியர் - புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி), திருமதி வசந்தி கருணாநந்தன், வசந்தகுமார் (வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் சுவித்திரா, பிரணவன், கீர்த்தகி, தணிகன், சேயோன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
க.அன்னம்மா
(மனைவி)

(26634)(11-17-32)

திருமதி பொன்னம்மா செல்லத்துரை

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா செல்லத்துரை செவ்வாய்க்கிழமை 30.12.2003 ஆம் திகதி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கா.செல்லத்துரையின் அன்பு மனைவியும் யோ.கண்மணிதேவி, செ.பரமலிங்கம் (விநாயகர் பேக்கரி, மீசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேயோகேந்திரன், திருமதி ப.சாந்த நாயகி (யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோவர்த்தனன், எரிசனன் (யா/மத்திய கல்லூரி), இங்கிதன் (யாழ். பரியோவான் கல்லூரி), மதுராங்கன் (யாழ்மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.12.2003) புதன்கிழமை இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊத்தல் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
செ. பரமலிங்கம்
(மகன்).

(26633)(11-32)

The Great New Year Gift For U !! from IBMS

Institute of Business Management Studies IBMS

Member of ACTOS

H.Of : 250, STANLEY ROAD (NORTHERN BUILDING) , JAFFNA.

DIP. IN BUSINESS APPLICATIONS (MS Office) Duration - 4 Months
~~Fee : 2,250.00~~ Fee : 1,500.00

DIP. IN DIGITAL SCIENCE (Information Technology) Duration - 8 Months
~~Fee : 5,500.00~~ Fee : 4,500.00

DIP. IN DESKTOP PUBLISHING Duration - 5 Months
~~Fee : 3,500.00~~ Fee : 2,500.00

DIP. IN HARDWARE Duration - 3 Months
~~Fee : 4,500.00~~ Fee : 3,500.00

HIGHER DIP. IN SOFTWARE ENGINEERING (Full Language Course) Duration - 4 Months
~~Fee : 5,750.00~~ Fee : 4,500.00

DIP. IN ENGLISH (By : S.Pathmanathan) Duration - 5 Months
~~Fee : 2,500.00~~ Fee : 1,500.00

DIP. IN KIDS PROGRAMME For O/L Students
~~Fee : 1,750.00~~ Fee : 1,000.00

Dip. in English நெல்லியாடியிலும், Dip. in Desktop Publishing சாவகச்சேரியிலும் ஆரம்பமாகவுள்ளன
கட்டணங்கள் எமது கிளைகளுக்கு பொருந்தாது

Happy New Year

Certificates

MS Word	750.00
MS Excel	750.00
MS Access	750.00
Page Maker	1000.00
Photo Shop	1000.00
Visual Basic	1500.00
Pascal	1500.00
Java	3500.00
C++	1500.00
Hard Ware	2000.00

Tertiary Vocational Education Commission
Reg.No.:P25/0010

Branches: N.M.V. Road, Nelliyady. - Chankathanai, Chavakacheri.

நெடுந்தீவு கல்விக்கோட்ட தொலைபேசி இணைப்பு விவகாரம்:

அதிகாரிகள் அசண்டையீனத்தால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்கிறது

வலி.வடக்கு,ஜன.1

நெடுந்தீவு கல்விக்கோட்டத்திற்கு தொலைபேசி இணைப்புப் பெறுவதற்கென வழங்கப்பட்ட நிதி ரெலிக்கொம் நிறுவன ஊழியர்களின் அசிரத்தையினால் திரும்பிச்செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

2003ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் நெடுந்தீவுக் கல்விக்கோட்டம் 'ரெலிக்கொம்' நிறுவனத்திற்கு விண்ணப்பித்தது. எனினும் தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கு எந்த வகையான நடவடிக்கைகளும் ஆண்டிறுதி வரை மேற்கொள்ளப்படவில்லை.

உரிய அலுவலர் நேற்று முன்தினம் இதனைப்பற்றி கதைக்க ரெலிகொம் அலுவலகத்துக்கு வந்தபோதும் பாரிய துப்புரவு (Big Clenning) வேலைகாரணமாக அலுவலகக் கடமைகள் இடம்பெறமாட்டாது என அங்கு அறிவுறுத்தல் மாட்டப்பட்டிருந்தது.

இதனால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிக்குத் திரும்பிச் செல்வது தவிர்க்க முடியாததாகி உள்ளது. (ம-86)

யாழ்ப்பாணம் வடமைத்துள்ள மேலும் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் நேற்று மாலை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அருளுரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், 'இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் , இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர்களான குமாரவடிவேல், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (படங்கள்-வசந்தன்)

காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதி பம்பைமடுப் பகுதிக்கு மணல் ஏற்றுவதற்காகச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. பம்பைமடு கிடாச்சூரிப் பகுதியிலிருந்து கமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் வைத்தே இவர்களின் சடலங்கள் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டன.

வவுனியா மேலதிக நீதிவான் சிற்றம்பலம் சடலங்களை மரண விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

மதமாற்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கிறது.

தேசிய சங்க சம்மேளனத்தின் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தலைமையிலான மகா சங்கத்தினருடன் அமைச்சர்களான கருணாநாயக்க, லொக்கு பண்டார, பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் என்.பி.எல்.பி. வெரலுபிட்டிய ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு பௌத்த சாசன அமைச்சில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். அப்பொழுது உருவாகியுள்ள அரசியல் பத்திரத்தை அமைச்சர் லொக்கு பண்டார கையளித்தார்.

அதனையடுத்து, அமைச்சர்கள் மதிதம் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்ட இடத்துக்கு வந்த வண. எல்லாவல மேதானந்த உறுதி மொழிப் பத்திரத்தை வாசித்துக் காட்டிக் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டார். (ஐ)

பொது அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைக்கு உட்படுத்தப்பட்டன.

இத்தகைய சம்பவங்களை தமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என்றும், வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்படி ஒன்றியம், போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது. (எ)

பலாலி பாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் விவசாயத்தில் ஈடுபடவும் விரும்புவோர்கள் இடத்தை அறிந்துகொள்ளும் பொருட்டு உயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பு வேலியில் இருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அடையாளமிடப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியில் மீளக் குடியமர விரும்புவோர்கள் தமது பிரதேச கிராம உத்தியோகத்தர்களின் உதவியுடன் அருகிலுள்ள பாதுகாப்பு முகாம்களில் கடிதம்மூலம் அறியத் தரும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாங்கி, அமைதியை நிலைநாட்ட 2004 ஆம் ஆண்டு சுமூகமான ஆண்டாக அமைய வேண்டும் என்றே பாதுகாப்புப் படையினின் எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உங்கள் அனைவினதும் ஒத்துழைப்பு கிடைக்குமென நாம் நம்புகிறோம்.

- இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

வெடி கொளுத்தியவருக்கு கண்ணில் பலத்தகாயம்!

யாழ்ப்பாணம்,ஜன.1

பட்டாசு கொளுத்தியபோது கண்ணில் பலத்த காயமடைந்தார் என்று தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்ந்த இளைஞர் ஒருவர் அனுமதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த கந்தசாமி சுதாகரன் (வயது 25) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு வெடிகொளுத்திய போதே இவருக்கு கண்ணில் காயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சில நிமிட நேரத்தில் இவர் ஆஸ்பத்திரியை விட்டு அனுமதியின்றி வெளியேறி விட்டார் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-7)

ஆண்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.1

இந்துகலாசார அலுவல்கள் அமைச்சு யாழ்மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 5.30 மணிக்கு யாழ்.கல்லூரி அதிபர் மகாவித்தியாலய ஆசிரியர் மதுரகவி காரைஎம்பி அருளானந்தம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ம-ரி)

காணாமற் போனோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருமாறு ஜனாதிபதி முன்னர் கோரியிருந்தார். அதன்படி காணாமற்போனவர்களில் 234 பேரின் விவரங்களை காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதியின் செயலாளிடம் கையளித்தனர்.

ஜனாதிபதியைச் சந்திக்க முடியாமற் போனது பற்றி காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் சர்குணம் கூறியதாவது:-

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேற்று பழைய நாடாளுமன்றத்திற்குச் சென்றோம். அங்கு அவர் இல்லை என்று நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் கூறினார்கள்.

ஜனாதிபதி வெளியே சென்றுவிட்டதாகவும் அலுவலகச் செயலாளரைச் சந்திக்கும்படியும் தெரிவித்தனர். செயலாளரைச் சந்தித்தோம். எங்களிடம் இருந்து விவரங்களை வாங்கிவிட்டு சகலவிதமான உதவிகளையும் செய்வதாக எமக்கு உறுதியளித்தார்.

பொங்கலுக்குப் பிறகு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஒரு திகதியைத் தருவதாகவும் செயலாளர் எம்மிடம் தெரிவித்தார்.

- இவ்வாறு சர்குணம் தெரிவித்தார். (ஐ-7)

அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வியில் ஜனாதிபதி மேலும் கூறுகையில், நல்லிணக்க அரசுக்கு இணக்கம் தெரிவிப்பதற்கு தாம் முன்வரவில்லையென்ற குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்தார்.

சம்பந்தப்பட்ட சகல தரப்பினதும் கோரிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு தம்மாலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசிடம் கடும் நம்பிக்கையில்லாத காரணத்தினாலேயே இத்தகைய குற்றச்சாட்டுக்களை அது வைத்திட்டு வருகின்றது. ஆனால் கட்டணியில் [illegible] என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்துருகிரிய மிலேனியம் நகர இல்லம் சம்பந்தமாக விடுக்கப்பட்ட வினாவொன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினால் புதிய தொரு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது எனவும் கூறினார். புதிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி செவ்வியில் கூறியிருக்கிறார்.

இதற்கிடையே, அமெரிக்காவின் அழுத்தம் குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளரான ஜனாதாஸ பீரிஸ், சமாதான பேச்சு மீண்டும் அரம்பமாக ஜனாதிபதி சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார் எனத் தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்பு, உள்விவகார, ஊடகத் துறை ஆகிய அமைச்சுகளை ஜனாதிபதி கையேற்றதற்கு முன்னரே எமது தரப்பு பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டு விட்டன எனும் அவர் கூறினார்.

ஆலயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.1

பன்முகப்படுத்தப்பட்ட பொது செலவுத் திட்ட நிதியில் இருந்து நிதி ஒதுக்கித்தருமாறு கோண்டாவில் பருத்தித்துறை மகா வித்தியாலய சமூகம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீரவன்னிதனுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளது.

பாடசாலையின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுக்குரிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நிதி தேவைப்படுவதால் அதனை ஒதுக்கித் தருமாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ம-10-6)

பாடசாலைக்கு நிதி ஒதுக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.1

பன்முகப்படுத்தப்பட்ட பொது செலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கித்தருமாறு கோண்டாவில் பருத்தித்துறை மகா வித்தியாலய சமூகம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீரவன்னிதனுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளது.

பாடசாலையின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுக்குரிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நிதி தேவைப்படுவதால் அதனை ஒதுக்கித் தருமாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ம-10-6)

கொடுப்பனவு வழங்கல்

தெல்மாராட்சி,ஜன.1

தெல்மாராட்சி பிரதேசத்தின் சில பகுதிகளில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த சில வாரங்களாக இவை வழங்கப்பட்டு வருகின்றன. (ம-10-11)

வாடிக்கையாளர்களுக்கு புதுவருட வாழ்த்துக்கள்
மலரும் புதிய வீடியோ CD வெளியீடுகள்
பார்த்திபனின்
* சூரி
ராஜ்கிரணின்
* கொஞ்சிப் பேசலாம்
(பிரசன் டடன்பெறுமதி)
வீடியோ வீமல்
யாழ்ப்பாணம்
(26636)

எதிர்பாருங்கள்
குறைந்த கட்டணத்தில்
(26516) (32)

புக்காண்டை முன்விட்டு அதிரடி விற்பனை
முதன் முறை 2003 REEMIX V.C.D Songs
கவிஞர் வைரமுத்துவின் பாடல்களின் V.C.D Songs
புதிய வரவுகள் C.D
புதிய M.P.3 Songs
பாடல்களின் MP 3 Songs
மற்றும் பல MP 3 பாடல்கள்
ரோயா விஷுவல் சென்டர்
T.P 077 24081
(26637)(31-12-33)

விற்பனையாளர்கள் தேவை
புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகியிருப்பவர்களும் தேவை.
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

CD வெளியீடு
* கொஞ்சிப் பேசலாம்
* சூரி
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்.
(F) பிளாஸ் சீடி ஹவுஸ்
274, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் T.P-0777162349
(26637)(31-12-33)

எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 . 04 . 1975

இறப்பு 01 . 01 . 1996

பஞ்சாட்சரம் கபிலன் (அப்பன்)

(நெல்லியடி மகாவித்தியாலய பழைய மாணவன்)

(திதி - 02.01.2004)

பருவ வளர்ச்சி கண்டு சந்தோசமடைந்தோம்
விளையாட்டுத் திறமை கண்டு பெருமிதம் கொண்டோம்
கல்வி ஏற்றம் கண்டு தொடர்ந்திட வழிசமைத்தோம்
காலம் உன்னை களமாட அழைத்தது
களப்பலியானாய் வீரனே! கபிலனே!
எட்டு ஆண்டுகள் சென்றுவிட்டதடா கபிலா!
நினைவில் என்றும் எம்மோடு வாழ்கிறாய்.

"ஸ்ரீரங்கம்"
நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு,
அல்வாய்.

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(26631)(30-11-17)

அறிவொளி Nallur
A/L 2006ஆம் ஆண்டுக்கான கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்: 03.01.2004
சனி பி.ப. 4 p.m. (ப.நே.)
C.maths : B.ரவீந்திரன் B.Sc.
Physics : M.ஸ்பெல்மன் B.வர்ணன்
Chemistry : N.ஸாகீசன்
Biology : T.ஜெயசீலன் B.Sc. S.ஸிநோ
O/L 2004 கணிதம், விஞ்ஞானம்
ஆரம்பம் : 03.01.2004 5 p.m
அனுமதிகளை உடன் பெறுக
(26638)

ஆங்கிலத்தில் கலப்பாக எழுத, பேச, வாசிக்க இலகு முறையில் நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURED:-
BY: NISHANTHAN
(M.A. in ENGLISH)
புதியபிரிவுகள்
பொருளியற் கல்லூரி
யாழ்நகரில் - செவ். - வியாழன் 4.00 p.m. (ப.நே.)
இணுவிலில் - சனி. - ஞாயிறு 10.00 a.m
சித்தன்கேணி
BARATHY
சனி - ஞாயிறு. 4.00 p.m
(26639)(31-12-33)

மரண அறிவித்தல்

திருமதி வல்லிபுரம் ஐயர் சிவகங்கை

தற்போது தும்பளை, இலகுமணன் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி வல்லிபுரம் ஐயர் சிவகங்கை அவர்கள் நேற்று (31.12.2003) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவசிறி வேலுப்பிள்ளை குலசிங்கம், குணரத்தினங்குருக்கள் இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் (மீசாலை, மாவடிப்பிள்ளையார் கோவிலடியை நிரந்தர முகவரியாக கொண்டவர்), நாகரத்தினக் குருக்கள், தியாளந்தராசா (மிலி ஐயர்), யோகராசாக்குருக்கள், [illegible] குருராஜாக்குருக்கள், செல்லராசாக்குருக்கள் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2004) வியாழக்கிழமை 11.00 மணியளவில் (புதிய) இல்லத்தில் நடைபெறும். புதுவருட சோபனம் இந்த மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

நமிமாஸ் தொலைத்தொடர்பு நிலையம்,
தெல்லிப்பழை,
தும்பளை.
T.P-021 226 3149

துயரம்:
ந. கேதீஸ்வரா (குமணன்)
பேரன்

(26376)(31-12-33)

பதிவு வைத்திய அதிகாரிகளின் வருட இடமாற்றம் இன்று முதல்

சண்டிலிப்பாய்,ஜன.1

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் (R.M.O) மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள்(A.M.O) ஆகியோர்களுக்கான வருடாந்த இடமாற்றம் இன்று முதல் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இதன் பிரகாரம், இணுவில் அரசினர் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் நாசண்முகராசா கொக்குவில் அரசினர் மத்திய மருந்தகத்திற்கும், வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் கி.கமலநாதன் சங்கானை அரசினர் சுற்றியல் கூறு வைத்திய சாலைக்கும் -

அனலைதீவு அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் என். கணரத்தினம் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கும், அளவெட்டி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் வி. போகேஸ்வரன் இணுவில் அரசினர் மத்திய மருந்தகத்திற்கும் -

கொக்குவில் அரசினர் மத்திய மருந்தக பொறுப்பதிகாரி டாக்டர் கே. சிவபாலேஸ்வரராசா கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கும் -

கோப்பாய் அரசினர் வைத்திய சாலை பொறுப்பதிகாரி டாக்டர் பூ.சிவலோகநாதன் அளவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கும்-

நெடுந்தீவு அரசினர் வைத்திய சாலை பொறுப்பதிகாரி டாக்டர் கே. திருஞானசம்பந்தமூர்த்தி தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகத்திற்கும்-

பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எம். மங்கையர்மணி பருத்தித் துறை அரசினர் மத்தி மருந்தகத்திற்கும்

ஊர்காவற்றுறை அரசினர் வைத்திய சாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஆதிநாவுக்கரசு வேலணை கிராமிய வைத்திசாலைக்கும் -

பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரி டாக்டர் சு. திருச்செல்வநாயகம் அம்பன் அரசினர் வைத்தியசாலைக்கும் -

பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் வி. சிவராசா அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கும் -

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் த. சிவரத்தினம் குருநகர் அரசினர் மத்திய மருந்தகத்திற்கும் -

கரவெட்டி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்வேலாயுதம் அக்கராயன்குளம் (கிளிநொச்சி மாவட்டம்) அரசினர் வைத்தியசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (எ-135)

நலன்புரிச் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.1

மானிப்பாய் பிரதேச சபையின் ஊழியர் சங்க புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(ம-8-185)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
A/L 2006 பௌதிகவியல்
BY: கருணாநிதி B.Sc.(Spl.)(Dip. in Ed.)
SAT.,SUN. - 8.00 - 9.00
ஆரம்பம் : 04.01.2004 (Sun.)
2005 A/L வெப்பவியல்- Sat., Sun. 9.00 - 10.00
ஆரம்பம்: 03.01.2004 (26597) (14)

அனைவருக்கும் IIS இன் இதயங்கனிந்த
புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

COMPUTER COURSES
New Batches Start
Batch 1 : 03.01.2004
Batch 2 : 05.01.2004
Batch 3 : 14.01.2004
at 10.00 a.m

Diploma in Computer Programming
Diploma in Java Programming
Diploma in Visual C Programming
Diploma in Visual Basic Programming
Diploma in Information Technology

BTEC HND
World Class Qualifications
Delivered Locally Recognized Globally
AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE COURSE IN COMPUTERIZED ACCOUNTING
NEXT GENERATION

Diploma in MS Office
Diploma in Internet Technology
Diploma in Hardware Technology
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Desk Top Publishing

Adobe PageMaker | Adobe Premiere | Corel DRAW | MS Excel | ORACLE 9i
Adobe Photoshop 07 | Macromedia Flash | MS Word | MS Access | Pascal

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
An Edexcel Approved Training Centre
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna
Branch: IIS, Nelliyady, Karaveddy
T.P No. 021-222 2831 Email: iis@sltnet.lk

BRIGHTMAN
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2006
கணித உயிரியல் பிரிவு
★ ஆரம்பம்: 05-01-2004
Mon .-3.00 p.m.
PHY.:திரு.ஜெயசீலன்
CHE.:திரு.பவான்
C.MATHS:திரு.சிவதீபன்
BIO:திரு.ஞானேந்திரன்
பொது ஆங்கிலம் P.N.சுதர்சன்
குறிப்பு: விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும். (26362) (12)

விக்னா கல்வி நிறுவனம்
தரம் 6 தொடக்கம் O/L வரை
2004 ஆம் ஆண்டு
பிரிவு II 4.00 - 6.00 mon.
O/L DAY CLASS
(8.30. - 2.30)
ஆரம்பம்: 05.01.2004
O/L DAY CLASS
பிரிவு II மிக விரைவில

புத்தொளி வீசி புதுமணம் பரப்பி வாழ்வில் இன்பம் பொங்கித் ததும்பிட எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

உங்களது நன்மதிப்பைப் பெற்ற டோக்கியோ சீமெந்து நிறுவனம் வழங்கும் மிற்சுயி, ஹினோடே

இலங்கை மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி கட்டட நிர்மாணத் துறையில் புத்தொளி பரப்புகின்றது.

MITSUI CEMENT
PORTLAND CEMENT
CONFORMS TO SRI LANKA STANDARD
MADE IN SRI LANKA
NET 50 KGS
TOKYO CEMENT CO. (LANKA) LTD

HINODE CEMENT
ORDINARY PORTLAND CEMENT
CONFORMS TO SRI LANKA STANDARD
MADE IN SRI LANKA
Tokyo Cement Company (Lanka) Ltd.
Net Weight 50kg.

MITSUI CEMENT
HINODE CEMENT

தென்னிந்தியாவின் இருந்து
யாழ்.-வன்னி வாழ் மக்களுக்கு!
மலரும் புத்தாண்டு நாளில் மக்களும் நாமும் மகிழ்ச்சிபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
மூன்றாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்
புத்தாண்டை முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு புதுப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்.
பார்க்கும் நேரம்: காலை 9.00 - 6.00 மணி
கைரேகை மட்டும் 9.00 - 1.00 மணிவரை
ராஜகுருசாமி T.P. 5867
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
(4) 60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA. (26505)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புனரமைப்புச் செயற்பாடுகளின் வேகம் வடமராட்சி கிழக்கில் திருப்தியில்லை!

நேரில் பார்வையிட்ட அரச அதிபர் தெரிவிப்பு

வடமராட்சி கிழக்கு,ஜன.1

போரின் சீரழிவுக்கு வடமராட்சி கிழக்கு எடுத்துக்காட்டாக இன்றும் உள்ளது. இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளின் வேகம் திருப்தி தருவதாக இல்லை. இதற்கு அனைத்துத்தரப்பினரும் பொறுப்பேற்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

அரச அதிகாரிகளுடன் வடமராட்சி கிழக்கை அரச அதிபர் சமீபத்தில் நேரில்சென்று பார்வையிட்டார். பின்னர் மருதங்கேணியில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டார். அப்போதே அங்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக யுத்தத்திற்குப் பின்னரும் சரி ஆப்கானிஸ்தான், வியட்னாம் யுத்தங்களுக்குப் பின்னரும் சரி மக்களை அணிசேர்த்தே நாடுகள் கட்டியெழுப்பப்பட்டன.

வடமராட்சிகிழக்கு வீடுகள் முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. மழைகாலத்தில் மக்கள் இங்கு எப்படி வாழ்கிறார்கள் என்பது ஆச்சரியமாக உள்ளது. சுமார் ஆயிரம் வீடுகள் கூரைகள் இல்லாத நிலையில் காணப்படுகின்றன. யாழ். மாவட்டத்தின் ஏனைய இடங்களில் சேதமடைந்த வீடுகள் அரசின் நிதியிலோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனோ திருத்தப்பட்டு வருகின்றன. ஆனால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெறும் புனரமைப்புப் பணிகள் போதிய திருப்தி தருவனவாக அமையவில்லை.

இப்பிரதேசத்தின் கட்டைக்காட்டில் 'நிகொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் 125 வீடுகள் அமைப்பதற்கு கடந்த ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆயினும், இதுவரை அந்தப்பணி பூர்த்திபடையவில்லை

'நிகொட்' திட்டத்தின் கீழ் மீளநிர்மாணிக்கப்பட்டுவரும் மருதங்கேணி அரசின் வைத்தியசாலையின் வேலைகள் மூன்று மாதத்திற்குள் பூர்த்தியடைந்துவிடும். அந்த வைத்திய சாலையை மீள இயக்குவதற்கான ஆளணியினரை நியமிக்கும்பணியை சுகாதாரத் திணைக்களம் இப்போதிருந்தே மேற்கொள்ளவேண்டும்.

இந்த வைத்தியசாலையின் தளபாட வசதிகளுக்கென 16 லட்சம்ரூபா பெற்றுக்கொடுக்கப்படும்.

மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கும்போது, தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகியவற்றுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் 40ஆயிரம் குடும்பங்கள் இக்கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதிபெற்றுள்ளன. இதுவரை 16ஆயிரம் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய குடும்பங்களுக்கும் நிதி வந்து சேருவதன் அடிப்படையில் வழங்கப்படும்.

தொண்டமனாறு நன்னீர் திட்டப் பணிகள் உலக வங்கி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. சுண்டிக்குளம், முள்ளியான் ஆகிய இடங்களுக்குச் சென்று இத்திட்டம் சம்பந்தமாக மக்களின் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும், கேட்டறிந்துள்ளேன்" அவற்றின் அடிப்படையில் அடுத்தகட்ட பணிகள் முன்னெடுக்கப்படும்.

- என்றார் அரச அதிபர்.

சிவாஜிலிங்கம் எம்.பி.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

"நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளது. இதன் காரணமாக வடமராட்சி கிழக்கு, மேற்குப் பாகிஸ்தான் கிழக்குப் பாகிஸ்தான் என்று பிரிந்திருந்ததைப் போன்று பிளவுபட்டுக்காணப்படுகின்றது. யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு அமைச்சுக்களின் நிதிகள் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. சர்வமத நிறுவனங்களின் உதவியுடனேயே சில அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது மக்களின் தேவைகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னரும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்காமல் விட்டோம்" -என்றார் சிவாஜிலிங்கம் எம்.பி.

இந்தக் கூட்டத்தில் கடற்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த மறவன் மாஸ்ரர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அவிநாசக மூர்த்தி ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத் தலைவர் எஸ்.பொன்னம்பலம், வடமராட்சி கிழக்கில் 2004ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய 30 அவசரப்பணிகளின் விவரங்களை இந்தக்கூட்டத்தில் முன்வைத்தார். அவை ஆராயப்பட்டு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

(ஒ-182)

'டயலொக்' நிறுவனத்தின் சமூகசேவைத் திட்டம்

டயலொக் ஜி.எஸ்.எம். நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுடன் இணைந்து சமூகசேவைத் திட்டங்களுக்கு உதவும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இத்தகைய நடவடிக்கையில் வாடிக்கையாளர்களை இணைத்து செயற்படுத்துவதில் டயலொக் ஜிஎஸ்எம். நிறுவனம் பெருமையடைவதாகக் கூறினார் அந்த நிறுவனத்தின் கொழும்புப் பிரதேச முகாமையாளர் எஸ்.மோகன்குமார்.

மேற்படி சமூகசேவைத் திட்டத்தின செயற்பாடு குறித்து அவர் விளக்கமளித்தபோது கூறியதாவது:-

டயலொக் நிறுவனத்தின் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் எமது சமூகசேவைத் திட்டத்தில் இணைந்து கொள்ளலாம். இந்தத் திட்டத்தில் இணைய விரும்பும் வாடிக்கையாளர்கள் நிறுவனத்துடன் விசேட ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளலாம். இதன்மூலம் 'டயலொக்' தொலைபேசிக் கட்டணத்தொகையின் 5 சதவீதத்தினை மேலதிகமாகச் செலுத்த வேண்டும்.

இவ்வாறு செலுத்தப்படும் தொகையுடன், அதற்குச் சமமான தொகையை டயலொக் நிறுவனம் செலுத்தும். இவ்வாறு இரண்டு தரப்புகளும் செலுத்தும் தொகைகள் சேமிக்கப்படும். வருட முடிவில் இவ்வாறு சேமிக்கப்பட்ட முழுத்தொகையும் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்துவரும் மக்களுக்கான உதவித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

இவ்வாறு திரட்டப்பட்ட 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியைக் கொண்டே இவ்வருடம் குடாநாட்டில் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், உடுபுடைவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதனால், சுமார் 600 சிறுவர்கள் பயனடைந்தனர். தொடர்ந்தும் மேற்படி சமூகசேவைத் திட்டம் செயற்படுத்தப்படும் என்றார் அவர்.

'எஸ்லோன் லங்கா' நிறுவனத்தினால் குடாநாட்டில் 'பி.வி.சி' குழாய் பொருக்குநர்களுக்கிடையே போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு 'எஸ்லோன்' விற்பனை முகாமையாளர் பி.கே.டேவிட் "எஸ்லோன்" யாழ். விநியோகஸ்தர்களான ஜெசிபா ஏஜென்ஸி நிறுவனத்தில் வைத்து பரிசில்கள் வழங்கினார்.

ஐ.ஐ.எஸ். கணனிக்கல்வி நிறுவனத்தின் இந்த ஆண்டுக்கான புலமைப் பரிசில் திட்டப் பரிசளிப்பு விழா, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர் ஒருவருக்கு சிறப்புவிருந்தினர் கே. ரமேஷ் பரிசு வழங்குகிறார். பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வர்த்தக வங்கியின் யாழ். முகாமையாளர் எஸ்.இரவீந்திரா மற்றும் ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் விக்னேஷ் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

கழிவுகளை உரிய முறையில் கையாள உள்ளூராட்சி சபைகள் தவறிவிட்டன!

ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.1

கழிவுகளை உரியமுறையில் கையாள பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகள் தவறிவிட்டன.

உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைச் செயலாளர்கள் ஆகியோருக்குத்தான் அனுப்பிய கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திண்மக் கழிவு முகாமைத்துவம் குறித்து பொது உபாயம் ஒன்று வகுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக உள்ளூராட்சி சபைகளிடமிருந்து கழிவுகளைக் கையாள்வது தொடர்பான செயற்றிட்ட அறிக்கை கோரப்பட்டது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் கடிதம் மூலம் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தால் இந்த அறிக்கை கோரப்பட்டது.

ஆனால், பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் இந்த அறிக்கையை அனுப்பத் தவறிவிட்டன. இன்றுவரை இதற்கான சாதகமான பெறு பேறுகள் கிட்டவில்லை

சுகாதார மற்றும் கழிவகற்றும் பணிக்கு உள்ளூராட்சி சபைகளே பொறுப்பு வகிக்கின்றன. இதற்கு அனுகூலமாக உள்ளூராட்சி சபைகளுக்கு சட்டவலுவும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், கழிவுகளைக் கையாளும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் திருப்திகரமான நிலை நிலவவில்லை.

ஆகவே, கழிவைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல், கூட்டுப்பசளை தயாரித்தல், கழிவுப் பொருள்களை யீளபவனங்களுக்கு உட்படுத்துதல், சுகாதார நலத்திட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்வுகள் போன்றவற்றில் செயற்றிட்டங்களை உள்ளூராட்சி சபைகள் உருவாக்கவேண்டும். இவற்றுக்கான அறிக்கையை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

இவ்வாறு உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார். (ஒ-185)

புத்தளத்தில் சமாதானக் குழு

புத்தளம்,ஜன.1

புத்தளம் நகரில் மீண்டும் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள சமாதானக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் சமயத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொலீஸார் போன்றோர் இடம்பெறுகின்றனர்.

இக்குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி புத்தளம் நகரமண்டபத்தில் நடைபெறும்.

சமீபகாலமாக புத்தளம் நகரில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் குறித்தும், சமூகங்களுக்கிடையே மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்துவது குறித்தும் ஆராய சமாதான மாநாடொன்று திங்கட்கிழமை புத்தளம் பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

புத்தளம் நகரில் மீண்டும் இன ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் வலியுறுத்தினார்கள்.

சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் புத்தளம் எவ்வாறு சமாதான பூமியாகவும் அமைதியான நகராகவும் விளங்கியதோ அந்த நிலையை மீண்டும் தோற்றுவிப்பது என்று அனைவரும் உறுதிபூண்டனர்.

ஓட்டோ சாரதிகள் ஏறாவூரில் மறியல்

ஏறாவூர்,ஜன.1

ஏறாவூர் பிரதேச ஓட்டோ சாரதிகள் தமது ஓட்டோக்களில் கறுப்புக் கொடிகளை கட்டிய வண்ணம் நேற்று முன்தினம் பிற்பகல் ஏறாவூர் பிரதேச சபை அலுவலகத்திற்கு முன் பாக மறியல் போராட்டத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஏறாவூர் பிரதான வீதியில் ஓட்டோத் தரிப்பிடங்களை அகற்றுவது தொடர்பாகப் பிரதேச சபை நிர்வாகத்திற்கும் ஓட்டோ சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்தே இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் ஏறாவூர் நகர பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற சமரசக் கூட்டத்தை அடுத்து ஓட்டோ சாரதிகள் தமது மறியற்போராட்டத்தைக் கைவிட்டனர்.

ஏறாவூர் - பஸ்நிலையச் சந்தியில், 25 சதுர அடிப்பரப்பில் ஆகக் கூடியது 4 ஓட்டோக்களை மட்டுமே நிறுத்துவது எனவும், சகல ஓட்டோ சாரதிகளும் நாளாந்தம் 5ரூபா வரியினை பிரதேச சபைக்குச் செலுத்துவார்கள் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ரூபா 5 லட்சம் செலவில் இன்பருட்டியில் மீன் சந்தை

யாழ்ப்பாணம்,ஜன.1

அல்வாய், இன்பருட்டியில் 5 லட்சம் ரூபா செலவில் நீரியல் வளத் திணைக்களம், மீன் சந்தை ஒன்றை அமைத்துவருகின்றது.

இப்பிரதேசத்தில் மீன் சந்தையொன்று இல்லை என்பதனால் புதிதாக ஒன்று அமைக்கப்படுவதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் உதவிப் பணிப்பாளர் எஸ்பேரசப் தெரிவித்தார்.

இதற்கான நிதியினை கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் வழங்கியுள்ளது. இனவரி மாத இறுதியளவில் சந்தைக் கட்டடப் பணிகள் பூர்த்தியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

சாயி சிந்தனை

மனதின் வலிமை

மனிதனின் முன்னேற்றத்திற்கு மனவலிமையும் இதயத்தூய்மையும் மிகவும் அவசியம். இந்த மனவலிமையும் இதயத்தூய்மையும்தான் மனிதனைத் தெய்வமாக்குகின்றன. மனமே மனித சுழலுதிற்கு ஆதாரம். மனம் இருக்கிறது என்பதற்கு அடையாளம் எண்ணங்கள் நிறைந்திருப்பதுதான். மனிதனின் நடத்தை எதுவாயினும் எண்ணங்களை ஆதாரமாகக் கொண்டே அமைகின்றது. எண்ணங்கள் உருவாகும் வழியில்தான் மனிதவாழ்க்கையும் அமைகிறது.

ஓர் ஏரியின் நீர்ப்பரப்பின் மேல் ஒரு சிறிய கல்லை எறிந்தால் உருவாகும் சிறுஅலைகள் ஏரி முழுவதும் பரவுகின்றன. அதைப்போலவே மனம் என்னும் ஏரியிலும் 'சலன அலைகள்' எண்ணம் என்கிற கல்லை எறியும்போது உருவாகின்றன. பிறகு அவை புலன்கள் அனைத்திலும் பரவுகின்றன. நல்ல எண்ணத்தின் மூலம் உருவாகும் 'மன அலை' வாய்க்குச்செல்லும்போது பேசும் வார்த்தைகள் அனைத்தும் தூய்மையாக, நல்லவைகளாக, மிருதுவாக அமைகின்றன. அதுவே தீய எண்ணமாக இருந்தால், வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் அனைத்தும் தீயதாகவே இருக்கின்றன. அதைப்போலவே எதைப் பார்த்தாலும், கேட்டாலும் எல்லாமே உங்களுக்குள் வளர்த்துக் கொண்டிருக்கும் எண்ணத்தைப் பொறுத்ததாகவே அமைகின்றன. ஆகவே, மனிதப் பிறவியின் நன்மையும் தீமையும் எண்ணங்களைப் பொறுத்தே உருவாகின்றன.

(ஆதாரம்: சனாதன சாரதி நவம்பர் 1998)

ஞானோதய அக்கடமி

2006 A/L **சாவகச்சேரி**

A/L 2006 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

கலைப் பிரிவு		வர்த்தகப் பிரிவு		கணித, விஞ்ஞான பிரிவு	
Tam.	திரு.அகிலன்	Eco.	திரு.யோகசிங்கம்	Phe .	திரு.கருணாநிதி
H.Cu.	திரு.சுரேஸ்		திரு.அன்ரனி	Che.	திரு.அன்பழகன்(அன்பு)
Log.	திரு.ஜெயசுரேஸ்	Bu.st.	திரு.பசில்	Com.Mat.	திரு.ராஜன்
Drama	திரு.ராமதாஸ்	Acc.	திரு.பார்த்தீபன்	Bio.	திரு.சிவகரன்
Geo.	திரு.சிவகுமார்	Gen.Eng.	திரு.ஜோதி	I.Q.	திரு.தவசேகர்
Chiri.	திரு.சுதா				
Po. / Sc.	திரு.சந்துரு				
Hist.	திரு.பார்த்தீபன்				

II ஆவது புதிய பிரிவுகள் ஆரம்பம்
இன்று (01. 01. 2004) வியாழக்கிழமை 12. 00 மணி

C/32344)(35-18-19-25)

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நாந்தனை. ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும். எமது சங்கத்தின் முன்னாள் உப தலைவருமாகிய

திரு.கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

அவர்கள் இலங்கை நீர்வாக சேவையிற்பணியில் சித்தியடைந்து திருகோணமலை/தம்பலகாமம் உதவிப்பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டதையிட்டு எமது மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, இவரின் பணிவாழ்வு மேன்மேலும் சிறக்க எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவர்.

- நீர்வாகசேவை உத்தியோகர் – இந்துசமயம்பேரவை, யாழ்ப்பாணம்.
- உபயோகிகளர் – உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம். வடக்கு – கிழக்கு மாகாணம்.
- உப தலைவர் – ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.
- எழுதுவினைஞர் – நல்லூர் பிரதேசசபை, வவுனியா நகரசபை.
- நீர்வாக அதிகாரி – கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர்விவகார அமைச்சு. வடக்கு – கிழக்கு மாகாணசபை, திருகோணமலை.

ஆகியவற்றில் சேவையாற்றியுள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.

(C/32442)(34-18-19-25)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

சிற்றம்பலம் சுந்தரலிங்கம்

(மாதகல்)

தோற்றம் 14.03.1932 — மறைவு 02.12.2003

மனிதர்குல மாணிக்கமாய்
மனதில் இடம்பிடித்தீர்!
புனித வாழ்வு வாழ்ந்த உங்கள்
புனித ஆத்மா
சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

குளுக்கண்டி லேன்,
கட்டப்பிராய்.
(சி-32431) (25-18-19)

அன்பு மனைவி,
மக்கள்,
மருமக்கள்.

9ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

சின்னையா இரத்தினம்

(பிரபல வெற்றிலை வியாபாரி - சாவகச்சேரி)

அன்னை மடியில் 25-06-1925 — அம்மன் திருவடியில் 01-01-1995

ஆண்டுகள் ஒன்பது ஆயினவோ ஐயா!
ஆறாத துயரில் நாம் இங்கே ஐயா
மீண்டும் நீர் இங்கு வரவேண்டும் ஐயா!
பத்திலே நாலின் மகனாக ஐயா!
ஆண்டாண்டு அல்ல அனுதினம் பணிந்தோம்
அம்மன் திருவடியில் நின்முகம் காண்போம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இ.சஸ்வரநாதன்,
பெருங்குளம் பிள்ளையார் வீதி,
முத்துமாரி அம்மன்வளவு,
கல்வயல், சாவகச்சேரி.

(26372) (26-18-19-25)

அறிவித்தல்

யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணம்

2004 ஆம் ஆண்டுக்கான வியாபார வரி, வியாபார உரிமக் கட்டணம் தொழில் மீதான வரி செலுத்துதல்

யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட சகல வியாபார நிலையங்களும் உற்பத்தி நிறுவனங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், வைத்திய ஆலோசனை நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் போன்ற உயர் தொழில் நிறுவனங்களும் வியாபார வரிகளையும் வியாபார உரிமக் கட்டணங்களையும் தொழில் மீதான வரிகளையும் -

எதிர்வரும் 31.03.2004 ஆம் திகதிக்கு முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன், தொழில் மாற்றம் செய்பவர்களும், புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும், தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் சபைக்கு அறியத்தந்து ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

தவறுபவர்கள் மீது மாநகரசபைக் கட்டளைச் சட்டம் 576 பிரிவு 512 இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29.12.2003

(சி-32443) (25-18-19)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நெல், வைக்கோல்போர் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.V.சூரியர், கல்லூரி வீதி, No.10, செல்வவேல், கொக்குவில் கிழக்கு. (26533)

வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P. 0777 570279, 0777 305533 (சி-31984)

புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தஞ்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 77, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (26602)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு சுத்தஞ்செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No.:3529, 2867.(26519)

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. விலை குறைக்கப்பட்டுள்ளது. தினமும சுத்தஞ்செய்து வேண்டிய அளவுகளில் பெறலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி. (26562)

ENGLISH/MATHS

Spoken English இரண்டு மாதங்களில் Toefl ஆங்கிலம், கணிதம் ஆண்டு 6 முதல் O/Lவரை. ஆங்கிலம் A/L, G.A.Q. முதல் B.A. வரை கற்பிக்கப்படும். தொடர்பு: 85, சிவன் கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி.(26569)

திருமண வைபவத்திற்கு

திருமண வைபவத்திற்கு ஏற்ற 2003 மொடல் கார் (Perl Silver நிறமுடையது) மற்றும் A/C வான்களும் நாள் கணக்கிற்கு வாடகைக்கு உண்டு. தொடர்பு: Joseph, இல.72, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில்). T.P.: 7080, 2597. (25903)

கையெழுத்து சஞ்சிகை வெளியீடு

சுழிபுரம்,ஜன.1

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ் வரா சனசமூக நிலையச் சமூகச் சுடர் 11 'கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

வெளியீட்டுரையை நவாலி மகா வித்தியாலய அதிபர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் நிகழ்த்துவார். திருமதி பண்டிதை பொன்.பாக்கியம் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார். பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. (ஒ-28)

வீதி விபத்தில் பெண்மணி காயம்!

தென்மராட்சி,ஜன.1

இரவுவேளை முகப்பு வெளிச்சமின்றி வந்த மோட்டார்சைக்கிள் நடந்துவந்த பெண்மணி மீது மோதியது. இதில் அந்தப் பெண்மணி படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மிருசுவில் உசனில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா தங்கமுத்து (வயது58) என்பவரே விபத்தில் காயமடைந்தவராவார். அவர் மயங்கிய நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-117)

வீடு விற்பனைக்கு

கைதடி - நுணாவில் கண்டிறோட்டுக்கு அண்மையில் நல்ல நீர்க்கிணறு உள்ள 60 பரப்புக் காணியும் கைதடிச சந்தியில் இருந்து உட்பக்கமாக ஒருமைல் தூரத்தில் உள்ள 50பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு:
சு.சிறிகாந்தன்
(26014) T.P.: 2735618 (21-1-12)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்!

☆ அழகு சாதனப் பொருள்கள்
☆ காலணிகள்
☆ பாட உபகரணங்கள்

என்பவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

உஷா பன்சி ஹவுஸ்

தொலைத் தொடர்பு சேவை
கட்டப்பிராய், இருபாலை (26542)(35-21-11-18) ☎ 021 222 5167

கண்ணீர் அஞ்சலி

எமது உதவிப் பொதுமுகாமையாளர்
திரு.க. பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
(26571) (32-21-18-11) இலங்கை வங்கி, நெல்லியடி.

கண்ணீர் அஞ்சலி

திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

பாருலகில் பல சிறப்புக்கள் தான் பெற்ற எம்முதல்வன்
பாலசுப்பிரமணியத்தின கரமது பற்றியே
சீருலகில் சிறப்புடன் இணைந்து நீர் வாழுங்கால்
சீரானன் "முரளி"யின் தாயும் நீர் ஆகியே
பெருமைகொள் வாழ்வுதனை வாழ்ந்து வரும்கால்
பாழும் நோய் வந்தும்மைப் பீடித்ததோ என்செய்வோம்.
மீள வழியின்றி இன்றெம்மை விட்டகன்று
பார்வதி சமேத பசுபதி தாழடைந்தீர்.
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

இலங்கை வங்கி,
சுன்னாகம். (26590)(26-21-11-18) முகாமையாளரும் ஊழியர்களும்.

7ஆம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி

தோற்றம் 21 - 05 - 1944

மறைவு 20 - 12 - 1996

திருமதி சுப்பிரமணியம் இராசம்மா
திதி:தசமி

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் தலைவியாய் இருந்து
எம் உயர்வுக்காய் உழைத்து நல்வாழ்வுவாழ
வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்தாலும் உங்களது நினைவுகள்
எமதுள்ளங்களில் நிறைந்தே இருக்கும்!

(26415) (26-21-11-18)

நிருபத்தம்மை,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கண்ணீர் அஞ்சலி

எமது வடபிராந்திய
உதவிப் பொதுமுகாமையாளர்
திரு.க.பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
லோகநாயகி பாலசுப்பிரமணியம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பகிர்ந்துகொள்வதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி,
சாவகச்சேரி. (சி-32338)(26-21-19-18) முகாமையாளரும், ஊழியர்களும்.

கண்ணீர் அஞ்சலி

எமது வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்
திரு.க.பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

அவர்கள் 29.12.2003 இல் காலமானதையிட்டு அவர்களுக்கு எமது கண்ணீர்ப் புஷ்பங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

இலங்கை வங்கி, கிளிநொச்சிக் கிளை. – முகாமையாளரும்,ஊழியர்களும்.
கிளிநொச்சி. (32-11-18-21) (C-32141)

கண்ணீர் அஞ்சலி

30-12-2003 அன்று காலமாகிய எமது வங்கி உதவிமுகாமையாளர்
திருமதி அருந்ததி பகீரதன்
அவர்களின் அன்புத் தந்தை
சிவஞானம் சண்முகநாதன்

அவர்களின் மறைவினால் துயரத்தில்மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தேசியசேமிப்பு வங்கி,
திருநெல்வேலி. (சி-32341) (26-21-11-18) முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்.

கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர்களாகிய
திருமதி சி. பரமேஸ்வரி, திரு. ச. பாலசுப்பிரமணியம்
ஆகியோரின் அன்புத் தாயாரும்
திரு. எ. சின்னத்தம்பி (கூ.அ.உ.ஆணையாளர், கிளிநொச்சி)
திரு. வ. பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாருமாகிய
திருமதி சங்கரப்பிள்ளை இராசம்மா

அவர்கள் (29.12.2003) திங்கட்கிழமை காலமானார். இவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வாகத்தவர்கள் அங்கத்தவர்கள்.
மாவைக்கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,
(26-11-18-21) மாவிட்டபுரம், தெல்லிப்பழை. (26579)

3ஆம் ஆண்டினில் ஆறாத நினைவலைகள்

தோற்றம் 13 - 05 - 1934

மறைவு 01 - 01 - 1998

அமரர்
பொன்னையா நாகராசா

ஆண்டுகள் ஆறெனினும்
ஆறிடாத நினைவுகளால்
அன்புத் தந்தை உங்கள்
ஆத்மசாந்திக்காய் ஆராதிக்கிறோம்.

(26421) (26-21-11-18)

சங்கம் வீதி,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (26422) - குடும்பத்தினர்.

புத்தாண்டு விசேட மலிவு விற்பனையும் கண்காட்சியும்

01.01.2004முதல் 14.01.2004 வரை மட்டும் (ஞாயிறு, போயா தினம் உட்பட) (காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை)

● தேசிய கலை இலக்கியப்பேரவை நூல்கள் -30%கழிவு ❋பழைய சீன, இந்திய, இலங்கை நூல்கள் -50%கழிவு
❋உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்கள் -15%கழிவு

கல்லூரிகள், சனசமூக நிலையங்கள், பிரதேச சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், வீட்டு நூலகங்கள், வாசக நேயர்கள் தவறாதீர்!

இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்! காட்சி இடம்: வசந்தம் புத்தக நிலையம்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு (2004) நல்வாழ்த்துக்கள் (26510)(35-21-18-11) 495, ஸ்ரான்லி வீதி (ஆரிய குளம் அருகில்) யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

துன்னாலை மேற்கு. தக்குட் சம்பாதியைச் சேர்ந்தவரான

திரு.பாலன் தவயோகம்

அவர்கள் 14.11.2003 அன்று யாழ். மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் அகில இலங்கை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவு ஊழியர் சங்க சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் எமது சமூகத்தின் மேம்பாட்டிற்கு அயராது உழைத்துவருபவருமான இவரின் சேவை அளப்பரியது. இவரது சமூக சேவை மேன்மேலும் சிறக்கவும் தொடரவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுவதுடன் அவர்கள் நீடூழிகாலம் வாழ்ந்து சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

சிறீதேவி இல்லம்,
துன்னாலை தெற்கு.

கோதங்கராரா குடும்பத்தினர்.

(26565)(34-21-11-16)

அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்!

திருவிவிலியத்திலிருந்து கடவுள் தந்த கட்டளைகள்

1. கடவுள் அருளிய வார்த்தைகள் இவையே;
2. நானே உன்கடவுளாகிய ஆண்டவர்;
3. என்னைத் தவிர வேறுதெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது;
4. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்கவேண்டாம்.
5. நீ அவைகளை வழிபடவோ அவற்றுக்குப் பணிவிடை புரியவோ வேண்டாம்.
   ஏனெனில், உன்கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ள மாட்டேன்.
   என்னைப்புறக்கணிக்கும் முதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்.
6. மாறாக என்மீது அன்பு கூர்ந்து என் விதி முறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன்.
7. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே; ஏனெனில் தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் கண்டித்து விட்டார்.
8. ஓய்வு நாளை தூயதாகக் கடைப்படிப்பதில் கருத்தாயிரு.
9. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய்.
10. ஏழாம் நாளோ உன்கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே, அன்று நீயும் உன்மகனும் மகளும் உன் அடிமையும் அடிமைப் பெண்ணும் உன்கால் நடைகளும் உன் நகர்களுக்குள் இருக்கும் அன்னியனும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.
11. ஏனெனில், ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வுநாளுக்கு ஆசி வழங்கி அதனைப் புனிதப்படுத்தினார்.
12. உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும் படி உன் தந்தையையும் உன்தாயையும் மதித்து நட.
13. கொலை செய்யாதே.
14. விபசாரம் செய்யாதே.
15. களவு செய்யாதே.
16. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.
17. பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே, பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை, அல்லது பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே.

விடுதலைப் பயணம் 20-1-17

கேட்கச் செவியுடையோர் திருச்சபைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும்

திருவெளிப்பாடு 3-6

மோசே-யோவான்

(26586)(34-11-16-21)

கண்ணீர் அஞ்சலி

எமது வங்கியின் உதவி முகாமையாளராகிய

திரு.நடராஜர் பகிரதனின் அன்பு மாமனார்

சிவஞானம் சண்முகநாதன்

அவர்கள் 30-12-2003 அன்று சிவபதமெய்தினார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்.

(26587)(34-11-21-16)

கண்ணீர் அஞ்சலி

எமது வங்கியின் உத்தியோகத்தராகிய

திரு.செல்லையா பிரசாந்தனின் அன்புப் பேர்த்தியார்

திருமதி சிறீமணி துரைச்சாமி

அவர்கள் 30-12-2003 அன்று சிவபதமெய்தினார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்.

(26586)(34-11-21-16)

நான் பெற்ற விடுதலையை என்போன்ற பலரும் பெறுக

அகுபங்சர் வைத்திய முறையின் அபூர்வ சக்தியையும் அனுகூலத்தையும் பெற்றவர்களில் நானும் ஒருவர் என்பதில் அகமகிழ்கிறேன். பல்வேறு வைத்திய முறைகள் வளர்ந்து வருகின்ற இக்கால கட்டத்தில், குறிப்பாக ஆங்கில வைத்தியத்துறையில் நாம் எல்லோரும் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாகவுள்ளோம். எனினும், ஆங்கில வைத்தியமுறையில் பல அனுகூலங்கள் உள்ளபோதும் பல சந்தர்ப்பங்களில் கூடிய பிரதிகூலங்களையும் மனிதன் எதிர்நோக்குகின்றான் என்பது மறுப்பதற்கில்லை. எனினும், மனிதனுடைய நோய்களை அதிக செலவின்றி, பக்க விளைவின்றி மாற்றும் நீண்டகால வரலாறுள்ள வைத்தியமுறைகளும் பல உள்ளன. அவற்றிலொன்றே அகுபங்சர் சிகிச்சை என்பதாகும்.

சுமார் 23 வருடங்களுக்கு முன் தொடங்கி வலிப்பு, மூட்டு (அஸ்மா) போன்ற நோய் நிலைமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தேன். இதுவரை காலமும் ஆங்கில மருத்துவத்தில் சிகிச்சை பெற்று வந்தேன். ஆரம்பத்தில் நாளாந்தம் ஒரு மாத்திரை வீதம் எடுத்து வந்த எனக்கு காலப்போக்கில் குளிகையின் அளவையும் தடவைகளையும் அதிகரிக்க வேண்டிய தேவை வந்ததே தவிர நோய் குணமடையவில்லை. ஒருநேரம் மாத்திரை எடுக்கத் தவறின் நோய் வந்துவிடும்.

பல வருடங்களாக நாள் தவறாது, நேரம் தவறாது மாத்திரைகளுடன் வாழவேண்டிய இக்கட்டான நிலை, எனது உடலையும் உள்ளத்தையும் பெரிதும் பாதிக்கவே செய்தது. மனவிரக்தியுடன் வாழ்வில் உண்மையான பிடிப்பு இன்றி காலத்தைக் கடத்த வேண்டிய கட்டத்துக்கே சென்றுவிட்டேன்.

இந்த நேரத்தில் சுமார் 2½ வருடங்களுக்கு முன் ஓர் இனியசெய்தி எனது காதுகளுக்கு எட்டியது. எனது நோயை அகுபங்சர் சிகிச்சை மூலம் வெற்றிகரமாக மாற்றமுடியும் என்பதே அச்செய்தியாகும். உரும்பிராய் டாக்டர் க.ரகுராம் அவர்களிடம் அகுபங்சர் சிகிச்சை மூலம் முழுமையான சுகத்தைப் பெற்றவர்களின் அனுபவத்தை திரு.திருமதி செல்வரட்ணம் தம்பதிகளின் மூலம் நேரில் பகிரும் வாய்ப்புக் கிடைத்தது.

இதனால் நானும் இந்தச் சிகிச்சையைப் பெறவிரும்பி அவர்களின் உதவியுடன் உரும்பிராய் அகுபங்சர் வைத்திய நிலையத்துக்குச் சென்று டாக்டரை அணுகினேன். எனது நிலை முழுவதையும் கேட்டறிந்த டாக்டரவர்கள் அகுபங்சர் சிகிச்சை முறையையும் சிகிச்சையின்போது ஏற்படும் மாற்றங்களையும் மிகவும் விரிவாக விளக்கமளித்தார்.

அகுபங்சர் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டதும் சகல ஆங்கில மாத்திரைகளையும் நிறுத்தும்படி அறிவுறுத்தினார். டாக்டரின் ஆலோசனை, வழிகாட்டல் யாவற்றையும் முழுமையாகச் சுமார் 2½ வருடங்கள பின்பற்றி வந்தேன். டாக்டர் கூறியது போன்று நோய் மிகவும் உக்கிரமடைந்து எனது மனவுறுதியைச் சோதிக்க ஆரம்பித்தது. மீண்டும் ஆங்கில வைத்தியத்தை நாட மனம் அங்கலாய்த்தது. எனினும் டாக்டரின் ஆறுதலும் ஆலோசனையும் என்மனதை நிலைப்படுத்தியது.

இன்று நான் நோயிலிருந்து முழுமையாக விடுதலை பெற்றமை மட்டுமன்றி எவ்வித வைத்தியமும் இல்லாமலிருப்பதுடன் எந்தவிதமான மாத்திரைகளும் எடுப்பதில்லை. நான் மிகவும் உற்சாகமாகவும், மனத்திருப்தியுடனும் நிம்மதியாகவும் வாழ வழியேற்பட்டுள்ளதென்றால் அது அகுபங்சர் சிகிச்சை முறையின் அபாரசக்தியாகும். மிகவும் துல்லியமாக எனதுநோயை அடையாளம் கண்டு இந்த சிகிச்சையை எனக்களித்த டாக்டர் க.ரகுராம் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறுவதோடு, டாக்டரை அறிமுகப்படுத்திய திரு.திருமதி செல்வரட்ணம் தம்பதிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தவாய்ப்பை என்போன்ற பலரும் பெற எல்லாம்வல்ல இறைவன் சகல வல்லமைகளையும் வைத்திய கலாநிதி க.ரகுராம் அவர்களுக்கு வழங்கவேண்டுமென இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க அகுபங்சர் சிகிச்சை முறை.

அம்பலவாணர் ரோட்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

திருமதி T.சுந்தரலிங்கம்.

(26)(34-21-11-16)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

சுழிபுரம் உப அலுவலக ஆதனவரி ஆட்சேபனை பற்றிய அறிவித்தல் - 2004

அன்பான வரிமிறுப்பாளர்களே,

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களின் மதிப்பீடுகள் சுழிபுரம் கிராமசபையாக இருந்த காலத்தில் 1978 ஆம் ஆண்டு 2 ஆவது முறையாக செய்யப்பட்டது. தற்போது 25 வருடங்களுக்கு பின்பு 3ஆவது முறையாக விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் விலை மதிப்பீடு செய்யப்பட்டது. 2004ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதற்காக ஆதனங்களின் விவரப்பட்டியல் ஆயத்தமான நிலையில் பொதுமக்களின் பார்வைக்கு சுழிபுரம் உப அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஆதனவரி அறிவித்தல் பத்திரங்கள் (கே பத்திரம்) விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பத்திரங்கள் விநியோகிக்க காலதாமதமானாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு தங்கள் ஆதனங்களின் விவரங்களை அலுவலக நேரங்களில் பார்வையிட்டு அவற்றில் ஏதேனும் ஆட்சேபனைகள் மற்றும் பிரச்சினைகள் இருந்தால் 31.01.2004 ஆம் திகதிக்கு முன்பாக எழுத்து மூலம் அல்லது நேரில் வந்து தெரிவிக்கலாம் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆட்சேபனைகள் ஏதும் கிடைக்காத பட்சத்தில் மீள் மதிப்பீட்டை ஏற்றுக்கொண்டதாக கருத்திற்கொண்டு 2004ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும் என்பதை அறியத்தருவதுடன் ஆதனவரி நிலுவைகளை விரைவில் செலுத்தி சபையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சூழல் பாதுகாப்பு உரிமம் பற்றிய அறிவித்தல் - 2004

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் அவர்களால் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலி.மேற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தின் 22.11.2002ஆம் ஆண்டு 1159 / 22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தகமானிப் பத்திரிகையின் 'ஆ' பகுதியில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக வலி.மேற்கு பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க வியாபாரத்தை, தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பின்வரும் தொழில், வியாபார உரிமையாளர்கள் வலி.மேற்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடனோ, உப பணிமனைகளுடனோ தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.01.2004ஆம் திகதிக்கு முன்பெற்று தொழில் அல்லது வியாபாரத்தை நடத்துமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1. வெதுப்பகம்
2. அரிசி ஆலைகள், அரைக்கும் ஆலைகள் மற்றும் சிறிய அளவிலான நெல்குத்தும் ஆலைகள்
3. ஐஸ்கிறீம் சாலைகள்
4. உணவு தயாரிக்கும் இடங்கள்
5. அச்சு இயந்திரங்கள்
6. வெல்டிங் தொழிற்சாலைகள், வாகனங்கள் திருத்துமிடங்கள்
7. தேங்காயெண்ணை ஊற்றும் ஆலைகள்.
8. போத்தலில் மதுசாரம் அல்லது கள் அடைக்கும் நிலையம்.
9. மற்றும் சூழல் பாதுகாப்பிற்குட்படக்கூடிய தொழில், வியாபார நிலையங்கள்.

இவ்வாறு உரிமம் பெற தவறும் எவரும் 31.01.2004 இற்குப் பின் தொழில் அல்லது வியாபாரத்தை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
30.12.2003

திருமதி ஜெ.சோமராஜ்
செயலாளர்
வலி.மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

(சி-32439) (25-11-16-21)